
கோகுலம்

GOKULAM

ஏப்ரல்'86 ரூ 2.





பேராசிரியர் பெ. சுந்தரம் பிள்ளை

பிறந்த நாள்: 5-4-1855 மறைந்த நாள்: 26-4-1897




கோகுலம்

உயிர்களிடத்தில் அன்பு வேணும் — தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்.

—பாரதியார்

1986 ஏப்ரல் இதழ்
மலர் 4 இதழ் 3
தனிப் பிரதி ரூ 2/—
ஆண்டுச் சந்தா ரூ. 24/—

கௌரவ ஆசிரியர் :
அழ. வள்ளியப்பா



புகைப்படம்: கோவை சீதாராம்

அருமைச் சிறுவர் சிறுமியரே,

"கோகுலம் இன்னும் எந்த எந்த வழிகளில் உங்களுக்கு உதவ வேண்டுமென்று எதிர்பார்க்கிறீர்கள்? தயங்காமல் உங்கள் கருத்துக்களை எழுதி அனுப்புங்கள். சிறந்த கருத்துக்களை ஏற்போம்" என்று சென்ற பிப்ரவரி இதழில் வெளியிட்டிருந்தோம்.

ஏராளமான வாசகர்கள் தங்கள் கருத்துக்களை எழுதி அனுப்பியிருக்கிறார்கள் :

* கோகுலத்தை மாதம் இருமுறையாக வெளியிடுங்கள். எங்களால் ஒரு மாதம் வரை காத்திருக்க முடியவில்லை.
* பிற நாட்டுக் கதைகளை வெளியிடுவது போல, நம் தேசத்திலுள்ள பிறமொழிக் கதைகளை வெளியிடலாமே!
* புராணக் கதைகளையும், சரித்திரக் கதைகளையும் வெளியிடுவதுபோல், தலைவர்களின் வாழ்க்கை வரலாறுகளையும் வண்ணப்படக் கதைகளாக வெளியிடக் கூடாதா?
* ஒரு பக்கம் அல்லது இரண்டு பக்கங்களில் சிரிப்பூட்டும் படக் கதை வெளியிடுங்கள்.
* புதுமைப் போட்டியை மாதா மாதம் நடத்தலாமே!
* விஞ்ஞானக் கட்டுரைகளுக்கும் செய்திகளுக்கும் அதிக இடம் ஒதுக்கினால் என்ன?
* ரயில் பிறந்த கதை, மோட்டார் பிறந்த கதை என்று ஒவ்வோர் இதழிலும் வெளியிட்டால் நன்றாயிருக்கும்.

இப்படிப் பல கருத்துக்கள். இவற்றை எழுதி அனுப்பிய அனைவருக்கும் நன்றி. தொடர்ந்து வரும் இதழ்களில் இந்தக் கருத்துக்களை மனத்தில் கொண்டு ஆவன செய்வோம்.

அழ. வள்ளியப்பா

இந்த இதழ் எழுத்தாளர்கள்


முகமது ஆரிப் மியான்


எம். கருப்பையா


பிருந்தாவனக் கவிஞர்கள்


நெ. அன்பு செழியன்


ம. முருகானந்தம்


த. விஜயகுமார்


த. நாகராஜன்


T. ரமேஷ் பாபு

பிருந்தாவனக் கதாசிரியர்கள்


இரா. குமார்


ஜி. ஸ்ரீப்ரியா

அட்டையில்: ஜெமினி கணேசனின்
பேரக் குழந்தைகள் தீபு, ப்ரியா
வண்ணப்படம்: யோகா

பின் அட்டை:
புகைப்படம்:
எம். நடராஜன்

மின்மினிக் கதைகள்

இரண்டு முத்துக்கள்!

நீதிபதி மரியாதை ராமன் முன்னால் எந்த வழக்கு வந்தாலும், உண்மையான குற்றவாளியை அவர் எளிதிலே கண்டுபிடித்து விடுவார். அவ்வளவு புத்தி நுட்பம் உள்ளவர் அவர்.

ஒருநாள், அவருடைய நீதிமன்றத்துக்கு ஒரு வழக்கு வந்தது.

''நீதிபதி அவர்களே, நான் வெளியூர் செல்ல வேண்டியிருந்ததால், என்னிடமிருந்த விலை உயர்ந்த அருமையான இரண்டு முத்துக்களை, இந்த நண்பனிடம் கொடுத்துச் சென்றேன். திரும்பி வந்து கேட்டால், 'நீ முத்துக்களைத் தரவேயில்லை' என்று சாதிக்கிறான்'' என்றார் ஒருவர்.

''நான் சொல்வது உண்மைதான். இவன் என்னிடம் முத்துக்களைத் தரவுமில்லை; நான் வாங்கவுமில்லை'' என்றார் அந்த நண்பர். மரியாதை ராமன், அவருடைய முகத்தைப் பார்த்ததுமே அவர் மோசக்காரராகத்தான் இருக்க வேண்டும் என்று கருதினார்.

ஆனாலும், 'இந்த வழக்கில் சாட்சி சொல்ல யாரும் வராததால், வழக்கைத் தள்ளுபடி செய்கிறேன்'' என்று கூறி இருவரையும் அனுப்பிவிட்டார்.

சில நாட்கள் சென்று, மோசடி செய்தவரை அழைத்து, அவரிடம் ஒரு முத்துமாலையைக் கொடுத்து, ''நீர் மாலை கோப்பதில் மிகவும் கெட்டிக்காரர்' என்று கேள்விப்பட்டேன். இதில் 100 முத்துக்கள் இருக்கின்றன. ஆனாலும், இந்தச் சரடு நைந்து போயிருக்கிறது. புதிய சரடு ஒன்றில் இவற்றைக் கோத்துக் கொண்டு நாளைக்கு வருக'' என்றார் மரியாதைராமன்.

முத்து மாலையுடன் வீடு வந்தவர், முத்துக்களைத் தனித்தனியாக எடுத்தார். மறுநாள் காலையில் புதிய சரடு ஒன்றிலே முத்துக்களைக் கோத்தார். கோத்துவிட்டு எண்ணிப் பார்த்தார். இரண்டு முத்துக்கள் குறைந்தன!

''ஐயோ! இரண்டு குறைகிறதே! நான்தான் அவற்றைத் தொலைத்து விட்டேனே! குறைகிறது என்று சொன்னால், நான் மோசக்காரன்தான் என்று நீதிபதி முடிவு கட்டிவிடுவார்'' என்று நினைத்து, நண்பனிடமிருந்து மோசடியாகப் பெற்ற இரண்டு முத்துக்களையும் அந்த மாலையில் சேர்த்துக் கட்டி,



மரியாதை ராமனிடம் கொண்டு போய்க் கொடுத்தார்.

மரியாதை ராமன் முத்துக்களை எண்ணிப் பார்த்தார். 100 இருந்தன. உடனே, ''நான் கொடுத்தது 98 முத்துக்கள்தானே! மேலும் இரு முத்துக்கள் எங்கிருந்து வந்தன? உன் நண்பனிடமிருந்து அபகரித்ததுதானே?'' என்று கேட்டார்.

தலைகுனிந்து நின்றார் அந்த மனிதர்!

காட்டிக் கொடுத்த சிறகு!

''நீதிபதி அவர்களே, என் கோழி எதிர் வீட்டுக்குள் நுழைந்தது. ஆனால், அது திரும்பி வரவே இல்லை. அதைப் பிடித்து இவள் கறி சமைத்துத் தின்று விட்டாள்'' என்று ஒரு பெண் மரியாதை ராமனிடம் முறையிட்டாள்.

''இவளுடைய கோழி என் வீட்டுக்குள் வரவுமில்லை; நான் அதைக் கொன்று தின்னவுமில்லை'' என்றாள் எதிர்வீட்டுக்காரி.

''போதிய சாட்சியம் இல்லாததால், வழக்கைத் தள்ளுபடி செய்கிறேன்'' என்றார் மரியாதை ராமன்.

இரு பெண்களும் திரும்பிச் செல்லும்போது, அவர்கள் காதில் விழும்படி சிறிது உரத்த குரலில் மரியாதை ராமன் அருகில் இருந்தவர்களிடம், ''அதோ போகிறார்களே, அவர்களில் ஒருத்தியின் கொண்டையில் கோழி இறகு ஒன்று இருக்கிறதே, தெரிகிறதா?'' என்று கேட்டார்.




உடனே, எதிர் வீட்டுக்காரி தன்னையும் அறியாமல் தன் கொண்டையைத் தடவிப் பார்த்தாள். அதிலிருந்து அவள்தான் கோழியைத் திருடித் தின்றவள் என்பதைத் தெரிந்து கொண்டு, காவலர்களை அனுப்பி அவளைப் பிடித்து வரச் சொன்னார் மரியாதை ராமன்.

வேறு வழியின்றி அவள் குற்றத்தை ஒப்புக் கொண்டாள். கோழிக்கு உரிய பணத்தை அதன் சொந்தக்காரிக்குக் கொடுக்கும்படி தீர்ப்பளித்தார் மரியாதை ராமன்

இரவல் மோதிரம்!

''நான் ஒரு கல்யாணத்திற்குப் போக வேண்டும். உன்னுடைய மோதிரத்தை இரவலாகக் கொடு. நாளையே திருப்பித் தந்துவிடுகிறேன்'' என்று கூறி, இவன் என்னுடைய மோதிரத்தை வாங்கிச் சென்றான். பல நாட்கள் ஆகியும் திருப்பித் தரவில்லை. என்னை மோசம் செய்யப் பார்க்கிறான்'' என்று முறையிட்டான் ஓர் இளைஞன். ஆனால், மற்றவனோ, ''இது என் சொந்த மோதிரம். இவனிடம் நான் இரவல் வாங்கவேயில்லை'' என்று



சாதித்தான்.

உண்மையைத் தந்திரமாகத்தான் வெளிக் கொண்டு வரவேண்டுமென மரியாதை ராமன் நினைத்தார். ஒரு பொற்கொல்லரை வரவழைத்து, அவரிடம் இரகசியமாக ஏதோ சொன்னார். பிறகு, அந்தப் பொற்கொல்லரைப் பார்த்து, "இந்த மோதிரம் அசல் தங்க மோதிரமா? இதன் மதிப்பு எவ்வளவு? என்று பார்த்துக் கூற வேண்டியது உமது பொறுப்பு" என்று வழக்கில் சம்பந்தப்பட்ட இருவர் முன்னிலையிலும் கூறினார்.

பொற்கொல்லர் அந்த மோதிரத்தை உரைத்துப் பார்த்து அது எப்படிப் பட்ட தங்கம் என்று கூறுவதாகச் சொன்னார். பிறகு, மோதிரத்தை உரை உரையென்று வெகுநேரம் உரைத்தார். அதைப் பார்க்கப் பார்க்க வழக்குத் தொடுத்த இளைஞன் பதைபதைத்தான். பிறகு பொற்கொல்லர் அதன் விலையையும் வேண்டுமென்றே மிகக் குறைத்துச் சொன்னார்.

உடனே அந்த இளைஞன், "ஐயோ! இப்படி என் மோதிரத்தை அநியாயமாக அதிகமாக உரைத்து எடையைக் குறைக்கலாமா? விலையையும் இப்படிக் குறைத்துக் கூறலாமா?" என்று கூறி அழுதான்.

மற்றவனோ பேசாமல் இருந்தான்.

இதிலிருந்து அழுதவனுக்குத்தான் மோதிரம் சொந்தம் என்று தீர்ப்பு வழங்கி, மோசம் செய்தவனுக்கு அபராதம் விதித்தார் மரியாதை ராமன்.

சாணா? முழமா?

வயலைச் சீர்திருத்துவதற்காக, வட்டிக்கடைக்காரரிடம் ஒரு விவசாயி நூறு வராகன் கடன் வாங்கியிருந்தான். அறுவடை முடிந்ததும், வட்டிக் கடைக்காரர் பணத்தைத் திருப்பித் தரும்படி கேட்டார். "நாளைக் காலையில் கடன் பத்திரத்துடன் என் வயலுக்கு வாருங்கள். பணத்தைத் தந்துவிடுகிறேன்" என்றான் விவசாயி.



அவ்வாறே, மறுநாள் காலையில் வட்டிக் கடைக்காரர் சென்றார். பத்திரத்தை வாங்கிப் பார்ப்பது போல் பார்த்த விவசாயி, சட்டென்று அதைக் கிழித்து அருகில் எரிந்து கொண்டிருந்த நெருப்பில் போட்டு விட்டான். ''பத்திரம்தான் எரிந்து விட்டதே! எப்படிப் பணத்தை வசூலிப்பீர்?'' என்று கேலி செய்தான்.

வட்டிக் கடைக்காரர் வழக்குத் தொடுத்தார். ''நீதிபதி அவர்களே, நான் இவரிடம் கடன் வாங்கவுமில்லை; பத்திரம் எழுதிக் கொடுக்கவும் இல்லை!'' என்று வாதாடினான் விவசாயி.

வழக்கை மறுநாள் தள்ளிப் போட்டுவிட்டு, வட்டிக்கடைக்காரரைத் தனியாக அழைத்து, ''அந்தக் கடன் பத்திரம் எவ்வளவு நீளம் இருக்கும்?'' என்று கேட்டார் மரியாதை ராமன்.

''ஒரு சாண் இருக்கும்'' என்றார் வட்டிக் கடைக்காரர்.

''நாளை நீர் நீதிமன்றத்தில் கூறும் போது 'அந்தப் பத்திரம் முழ நீளம் இருக்கும்' என்று கூறவேண்டும். உடனே குட்டு வெளிப்பட்டுவிடும்'' என்றார் மரியாதை ராமன்.

மறுநாள் நீதிமன்றத்தில் மரியாதை ராமன் வட்டிக்கடைக்காரரைப் பார்த்து, ''இந்த விவசாயி கிழித்து எரித்து விட்டதாகச் சொல்கிறீரே, அந்தப் பத்திரம் எவ்வளவு நீளம் இருக்கும்?'' என்று கேட்டார்.

''முழ நீளம் இருக்கும்'' என்று வட்டிக்கடைக்காரர் கூறியதும், ''முழுப் பொய். அது சாண் நீளம்தான் இருந்தது'' என்று தன்னையும் அறியாமல் ஆத்திரத்தில் கூறிவிட்டான் விவசாயி.

''நீ கடன் வாங்கவில்லையென்றால் அந்தப் பத்திரம் சாண் நீளம்தான் என்பது உனக்கு எப்படித் தெரியும்? உன் வாயாலே உண்மை வெளிப்பட்டு விட்டது! உடனேயே நூறு வராகனும் வட்டியும் சேர்த்து இவருக்குக் கொடுப்பதோடு, பொய் சொன்னதற்கு அபராதமும் செலுத்த வேண்டும்'' என்று உத்தரவிட்டார் மரியாதை ராமன்.

தொகுப்பு: நம்பி.

தமிழக அரசின் குழந்தை இலக்கியப் பரிசு

தமிழக அரசு ஆண்டுதோறும் வெளியாகும் சிறந்த குழந்தைப் புத்தகங்களுக்குப் பரிசு வழங்கி வருகிறது. சென்னை வள்ளுவர் கோட்டத்தில் திருவள்ளுவர் திருநாளில் நடந்த விழாவில் முதலமைச்சர் எம். ஜி. ஆர். அவர்கள் 'மயில் தோகை' என்ற நூலை எழுதிய கவிஞர் பல்லவனுக்கு முதற் பரிசாகிய ரூபாய் இரண்டாயிரத்தை வழங்குகிறார். இரண்டாவது பரிசாகிய ரூபாய் ஆயிரம் டாக்டர் பூவண்ணன் எழுதிய 'நல்ல முத்து' என்ற சிறுவர் நாவலுக்குக் கிடைத்திருக்கிறது.





என்

பேராசிரியர் கல்கி

பாரதியார் கவிதைத் துறையிலே ஒரு பெரிய திருப்பத்தை உண்டாக்கினார். அதேபோல், உரைநடையிலே ஒரு புதிய திருப்பத்தை உண்டாக்கியவர் பேராசிரியர் கல்கி ரா. கிருஷ்ணமூர்த்தி அவர்கள்.

திரு. வி. க. நடத்தி வந்த 'நவ சக்தி'யில் பயிற்சி பெற்ற இவர், தமக்கென ஒரு தனி வழியை வகுத்துக் கொண்டார்.

பத்திரிகாசிரியர், எழுத்தாளர், கவிஞர், கலை விமர்சகர், அரசியல் மேதை, தேச பக்தர், நகைச்சுவையாளர், சமூக சீர்திருத்தவாதி — என்று பட்டை போட்ட வைரம் போல் பல வகையிலும் ஒளி பெற்றுத் திகழ்ந்தார்.

மூதறிஞர் ராஜாஜி, ரசிகமணி டி. கே. சி. போன்றவர்களுடன் நெருங்கிப் பழகி, அவர்களின் பேரன்பைப் பெற்றவர். தமிழ் எழுத்தாளர் சங்கத்தை நிறுவி, அதன் தலைவராக இருந்து எழுத்தாளர் நலன் கருதிப் பல வகையிலும் பாடுபட்டவர்.

நான் பிறந்த ஊர் பொன்னி நதி பாயும் தஞ்சை ஜில்லாவிலுள்ள புத்தமங்கலம் என்ற சிறு கிராமம். என்னுடைய தகப்பனார் பெயர் ராமசாமி ஐயர். அவரை ஊரில் பொன்னுவைய்ர் என்று அழைப்பார்கள். அவர் அருகில் இருந்த மணல்மேடு கிராமக் கர்ணமாக இருந்தபடியால். எங்கள் வீட்டுக்குக் கணக்கையர் வீடு என்றே பெயர்.

என் தகப்பனார் தெய்வ பக்தி உள்ளவர். ஆசார சீலர். வயல் வரப்புகளுக்குப் போவதும் கர்ணம் வேலை செய்வதும் போக எஞ்சிய நேரத்தில் பஜனை செய்வார். இரவு நேரங்களில் திண்ணையில் உட்கார்ந்து ராமாயணம், பாரதம், பக்த விஜயம், பாகவதம் முதலிய நூல்களைப் படித்து விளக்கம் சொல்லுவார். நல்ல குரலில் பாடுவார். கிராமத்தைச் சேர்ந்தவர்கள் சுற்றிலும் உட்கார்ந்து கேட்பார்கள். இதனால் அவருக்குப் பக்திமான் பாகவதர் என்ற மரியாதை ஏற்பட்டது.

என் அண்ணாவிற்கு ஆறு வயதாக இருந்தபோது தம்முடன் சேர்ந்து பஜனை செய்வதற்காக அஷ்டபதி

கிருஷ்ண லீலாதரங்கிணி, நாமாவளிகள் எல்லாவற்றையும் என் தகப்பனார் கற்றுக் கொடுத்தார். எனக்கு அப்போது மூன்று வயது. நானும் ஆவலுடன் அண்ணாவின் பக்கத்தில் கண்ணீர் வடித்தார்கள். இந்த அனுபவம் என் உள்ளத்தில் மிக ஆழமாகப் பதிந்தது.

சில காலம் கழித்து எங்கள் வீட்டுக்கு அடுத்த வீட்டில் அய்யாசாமி

குழந்தைப் பருவம்

உட்கார்ந்து கொண்டு பாடுவேன். எளிதாக எனக்கு மனப்பாடம் ஆகிவிடும்.

எனக்கு அக்ஷராப்பியாசம் செய்வித்தவர் (முதன்முதலில் பாடம் சொல்லிக் கொடுத்தவர்) சுவாமிநாத ஐயர். அவர் மணல் மேட்டில் பள்ளிக்கூடம் நடத்தி வந்தார். அண்ணாவுடன் நானும் சேர்ந்து பள்ளிக் கூடம் போவேன். குளத்தங்கரைக்கு அருகில் இருந்த சாவடிதான் பள்ளிக்கூடம்.

எனக்கு ஆறு வயதாக இருந்த போது ஒரு விபத்து நேரிட்டது. ஒரு நாள் வாய்ப்பாடு சொல்லி முடித்ததும் சுவாமி நாதய்யர் சற்று நேரம் ஓய்வு கொடுத்தார். அண்ணாவை அழைத்துக் கொண்டு குளக்கரைக்குப் போனேன். இருவரும் நீரில் இறங்கினோம். நான் எதிரே இருந்த மரங்கள் காற்றில் ஆடுவதையும், சவுக்கு மரங்களிலிருந்து உண்டான 'ஙொய்' என்ற சத்தத்தையும் கவனித்துக் கொண்டே எங்கே கால் வைக்கிறேன் என்று பார்க்காமல் ஆழமான மடுவுக்குள் விழுந்துவிட்டேன்.

"ஐயோ! தம்பி" என்று அலறிக் கொண்டே என் அண்ணாவும் குளத்தில் குதித்துவிட்டார். குளத்தில் புடவை தோய்த்துக் கொண்டிருந்த ஒரு வயதான மூதாட்டி, "கர்ணம் ஐயா வீட்டுப் பிள்ளைங்க மடுவிலே விழுந்துட்டாங்க" என்று பெருங்குரலெடுத்துக் கத்தினார். எங்கள் வாத்தியாரும், கிராம முனிசீப்பும் ஓடி வந்து மடுவில் குதித்து எங்களைக் காப்பாற்றினார்கள்.

இந்தவிஷயம்கேட்டுஎன் தாயாரும் தகப்பனாரும்விழுந்தடித்துக்கொண்டு ஓடி வந்தார்கள். எங்களைத் தூக்கி அணைத்துக் கொண்டு, ஆண்டவனுக்கு நன்றி சொல்லி ஆனந்தக்


ஐயர் என்பவர் வந்து குடியேறினார். அவர் எங்களுடைய பள்ளிக்கூடத்துக்குப் பாண்டுரங்கன் பள்ளிக்கூடம் என்று புதிதாகப் பெயரிட்டு நடத்தலானார்.


உபாத்தியாயரை "ஸார்" என்று நாங்கள் அழைப்போம். என்னிடம் அவர் ரொம்பப் பிரியம் காட்டுவார். தமிழ், கணிதம் இரண்டோடு சரித்திரம் ஆங்கிலம் முதலியவற்றையும் எனக்குப் போதித்தார்.

எனக்கு எட்டு வயதாகி இருந்த போது என் அண்ணாவுக்கும் எனக்கும் பூணூல்போட்டுவைத்தார்என்தந்தை. சந்தியாவந்தனம் முதலிய மந்திரங்களை நான் சீக்கிரம் பாடம் பண்ணிவிட்டேன்.என் அண்ணாஅதைவியந்து பாராட்டினார். யஜுர் வேதத்தில் மிக முக்கியமான பகுதியான ருத்ர ஜபத்தை எங்களுக்குச் சொல்லிக் கொடுத்தார்கள். எங்கள் ஊர் கோவிலில் சுவாமிக்கு அபிஷேகம் நடக்கும்போது உற்சாகமாக ருத்ரம் சொல்லுவேன்.

என் தந்தையார் பஜனை செய்யும் போது திவ்ய நாம ஸங்கீர்த்தனம் முடிந்ததும் ஏற்றிவைத்திருக்கும் குத்துவிளக்கைக் கையில் எடுத்துக் கொண்டு நான் நர்த்தனம் பண்ணுவேன். சலங்கை கட்டிக் கொண்டு நான் விளக்குடன் ஆடுவதை எல்லாரும் பாராட்டுவார்கள். எனக்கு என் தந்தை கதை சொல்லும்போது நான் குறுக்கிட்டுப் பல கேள்விகளைக் கேட்பேன். அவர் பொறுமையாகப் பதில் சொல்லுவார்.

எனக்குப் பூணூல் போட்ட சில மாதங்களிலேயே என் தகப்பனார் மறைந்துவிட்டார். அந்தத் துயரத்தினால் நொந்திருந்த எங்களைப் பக்கத்து வீட்டில் குடியிருந்த அய்யாசாமி





ஸாரும் அவருடைய மனைவியும் தேற்றினார்கள். குழந்தை இல்லாத அவர்கள் "ஒருபிள்ளைக்காக ஏங்கிய எங்களுக்கு ராம லக்ஷ்மணர்கள் போல நீங்கள் கிடைத்தீர்கள்" என்று சொல்லி அருமை பாராட்டினார்கள்.

இரண்டு வீட்டையும் பிரித்த சுவரில் ஒரு ஜன்னல் உண்டு. அந்தச் சிறிய பிறையின் வழியே வாத்தியாரும் அவர் மனைவியும் எங்களை அடிக்கடி கூப்பிடுவார்கள். தின்பண்டங்களைக் கொடுப்பார்கள். 'ஸார்' தான் பூஜை செய்த கிருஷ்ணனுக்கு ராஜப்பா என்று பெயரிட்டிருந்தார். சில சமயம் என்னையும் ராஜப்பா என்று கூப்பிட்டு ஸ்ரீ கிருஷ்ணனுக்குச் செய்த நைவேத்யத்தைக் கொடுத்து நான் ஆசையுடன் சாப்பிடுவதைக் கண்டு மகிழ்வார். நான் குள்ளமாக இருந்தபடியாலும், நன்றாகப் படித்ததாலும் என்னை அவர் 'அகஸ்தியர்' என்றும் செல்லமாகக் கூப்பிடுவதுண்டு.

அவருக்கு ஊரிலுள்ள குழந்தைகள் எல்லாம் அவருடைய குழந்தைகள் போலத்தான். 'ஸார்' என்றால் பிள்ளைகளெல்லாம் உயிரையே விடுவார்கள். பயத்தினாலன்று; பிரியத்தினால்! அவருடைய மாணாக்கர்களுக்கு இராமாயணம் மகாபாரதம் பாகவதம் இவற்றிலுள்ள கதைகள் ஒன்றுவிடாமல் தெரியும். தாயுமானவர் பாடலில் மூன்று பாடல்களை நெட்டுருவாய் ஒப்பிக்கும் மாணவனுக்குக் கற்கண்டு வாங்கித் தருவதாய்ச் சொல்வார். ஒருவரும் ஒப்புவிக்காவிட்டால் கற்கண்டை எல்லோருக்கும் பங்கு போட்டுக் கொடுத்துவிடுவார்!

புத்தகங்கள் அவருடைய சொத்து. தமிழில் பாகவதம், பக்த விஜயம், ஆரிய மத உபாக்யானம், நடேச சாஸ்திரியாரின் வால்மீகி ராமாயணம். ஆங்கிலத்தில் எட்வின் ஆர்னால்டின் ஆசிய சோதி, ராம கிருஷ்ண பரமஹம்ஸர், விவேகானந்தர் நூல்கள், மெஹர்பாபா நூல்கள், தர்யேந்த்ரநாத் எழுதிய இராமாயணப் புதிர்கள் லரர்ட் கௌரங்கி நூல்கள்.

அய்யாசாமி ஐயர் அளித்த பயிற்சியினால் மேற்படி நூல்களையெல்லாம் பதினைந்து வயதாவதற்குள்ளேயே படித்துப் புரிந்துகொள்ளும் தேர்ச்சியை அடைந்திருந்தேன். நான் எப்போதும் புத்தகமும் கையுமாக இருப்பதைப் பார்த்து ஸார் என்னைப் 'புத்தகப் புழு' என்று கேலி செய்வார்.

ஒரு சமயம் என் தாயார் மணல்மேட்டிலிருந்து வெற்றிலை வாங்கிக் கொண்டு வரச் சொன்னார். படித்துக் கொண்டே நடந்து போனேன். வெற்றிலையை வாங்கிக் குடுமித் தலை மீது வைத்துக் கொண்டேன். திரும்பி வரும் போதும் படித்துக் கொண்டே வந்தேன். படி ஏறும்போது தலையில் கையை வைத்தால் வெற்றிலையைக் காணவில்லை. எல்லாம் பறந்து போய் விட்டன.

சிறு வயதில் எனக்கு விளையாடுவதிலும் ஓடி ஆடுவதிலும் ஆசையே இருக்கவில்லை. உடல் வலிமையின் அவசியத்தை நான் உணர்ந்திருக்கவில்லை. அண்ணாவோ, நண்பர்களோ பிடித்திழுத்து விளையாடச் செய்தால் ஒப்புக்குச் சிறிது நேரம் விளையாடிவிட்டு விலகி விடுவேன். நான் சரியாக

ஊக்குவிப்பேன். என் நண்பர்கள் வெற்றியடைந்தால் நானே வெற்றி யடைந்தது போல மகிழ்வேன். வயதான பிறகு நாம் தேகப் பயிற்சி செய்து உடல் வலிமையை வளர்த்துக் கொள்ளாமல் போனேமே என்று வருந்தியிருக்கிறேன்.

எனக்கு வயல்களில் பசுமையாக விளைந்திருக்கும் பயிர்களையும், அதன் மத்தியில் அமர்ந்திருக்கும் வெள்ளை வெளேரென்ற கொக்குகளையும், கொள்ளிடக் கரையில் புதர்களில் பறக்கும் பட்டுப் பூச்சிகளையும் பார்த்துக் கொண்டே இருப்பது ரொம்பப் பிடிக்கும். இருட்டைக் கண்டால் பயமே கிடையாது. அதனால் ஆற்றங் கரையில் இருட்டிய பிறகும் வானத்தில் ஜொலிக்கும் நட்சத்திரங்களையும்; வேலியில் ஜொலிக்கும் மின் மினிப் பூச்சிகளையும் பார்த்துக் கொண்டே உலாவுவேன். அப்போது என் மனத்தில் என்னென்னவோ கற்பனைக் கதைகள் உருவாகும்.

எனக்கு ஊஞ்சலாட ரொம்பப் பிடிக்கும். இந்த ஆசை பிற்காலத்திலும் தொடர்ந்தது. நானும் அண்ணாவும் ஊஞ்சலாடிக் கொண்டே பாட்டுக்கள் பாடுவோம். இசை ஆர்வம் எனக்குச் சிறு வயதிலேயே உண்டாயிற்று.

அக்கம்பக்கத்தில் எங்கே கச்சேரி நடந்தாலும், ஹரி கதை நடந்தாலும் அண்ணாவும் நானும் கைகோத்துக் கொண்டு போய்விடுவோம். சில சமயம் ஸாருும் உடன் வருவார்.

சங்கீதக் கச்சேரிகளைவிட அந்தக் காலத்தில் கதாகாலட்சேபங்களுக்கு மவுசு அதிகமாய் இருந்தது. என் அண்ணாவும் நானும் தஞ்சாவூர் கிருஷ்ண பாகவதர், சூலமங்கலம் வைத்தியநாத பாகவதர், ஹரி கேசவ நல்லூர் முத்தையா பாகவதர், திருப் பழனம் பஞ்சாபகேச பாகவதர், தில்லை ஸ்தானம் நரசிம்ம பாகவதர் இவர்களுடைய கதாகாலட்சேபங் கள் எங்கு நடந்தாலும் போய் விடு வோம்.

முதல்நாள் கேட்ட கதையை மறு நாள் இரவு எங்கள் வீட்டுத் திண்ணை யில் நின்று கொண்டு நான் அதே பாணியில் சொல்லுவேன். பாட்டு களும் வசனங்களும் எனக்கு நினை விருக்கும். நடுவில் சொந்தச் சரக்கை யும் சேர்த்துக்கொள்வேன். உள்ளூர் மிருதங்க வித்வான் வாசிக்க வந்து விடுவார். சலங்கை கட்டிக் கொண்டு கையில் சிப்லாக் கட்டையுடன் பாக வதர்களைப் போலவே குதித்துக் குதித்து ஆடிப் பாடுவேன். இரட்டை யாகப் பேசும் என் கீச்சுக் குரலை ஈடு கட்ட என் அண்ணா நன்றாகப் பின் பாட்டுப் பாடுவார்.

என் குருவான அய்யாசாமி ஐயரும் அவர் மனைவியாரும் நான் கதை சொல்வதை மிகவும் பாராட்டி எங் களுக்குத்திருஷ்டி கழிப்பார்கள். விளை யாட்டாக நாங்கள் நடத்தத் தொடங் கிய சீதா கல்யாணம், வத்ஸலா கல் யாணம், சிவநேசச் செல்வர்கள், கபீர் தாஸ், நாமதேவர் முதலிய கதைகளை அக்கம்பக்கத்து ஊர்க்காரர்கள் ஆர்வத்துடன் கேட்டார்கள். பக்கத்து ஊர்களுக்குப் போய் நாங்கள் கதை பண்ணினோம். முதன் முதலாக நந்தன் சரித்திரத்தை நிகழ்த்தியபோது





எனக்கு ஒரு ஜரிகை அங்கவஸ்திரத்தைப் பரிசாக அளித்தார் கோவில் தர்மகர்த்தா.

இந்தக் கதைகளைக் கேட்பதற்கு நிச்சயமாக இருவர் ஆஜராகிவிடுவார்கள். எங்களோடு பாண்டுரங்கன் பள்ளிக் கூடத்தில் படித்த முத்துக் கிருஷ்ணனும், சுப்பிரமணியமும் என்னுடைய அத்யந்த நண்பர்கள். முத்துக் கிருஷ்ணன் நாயுடு ஜாதியைச் சேர்ந்தவர். பிற்காலத்தில் அவர் சுவாமி ருத்ரானந்தராக மாறினார். சுப்பு என்று அழைக்கப்பட்ட சுப்பிரமணியம் பிள்ளைமார் ஜாதியைச் சேர்ந்தவர். இவர்களுடைய நட்பும் பிரியமும் எனக்கு உறுதுணையாக இருந்தன.

கொஞ்ச காலத்திற்குப் பிறகு அந்த நாளில் வெளியான ஆரணி குப்புசாமி முதலியார், வடுவூர் துரைசாமி ஐயங்கார் முதலியோர் எழுதிய நாவல்களைப் படிப்பதில் மோகமே உண்டாகியிருந்தது. சென்னைப் பட்டிணத்திலிருந்து ஒருவர் இராஜாம்பாள் என்னும் துப்பறியும் நாவலைக் கொண்டு வந்தார். அவர் அதைப் படித்து முடிக்கும் வரையில் பக்கத்திலேயே காத்திருந்து அவரிடமிருந்து அப்புத்தகத்தை வாங்கிக் கொண்டேன். அன்றிரவு புகைந்து கொண்டிருந்த சிம்னி விளக்கின் வெளிச்சத்தில் புத்தகத்தை ஒரே மூச்சாகப் படித்து முடித்து, இரவு சுமார் மூன்று மணிக்குத் தூங்கியது இன்னும் எனக்கு ஞாபகம் இருக்கிறது. "இதோ பார் முத்து. இந்த மாதிரிப் புத்தகம் தினம் ஒன்று மட்டும் என்னிடம் கொடுத்துவிட்டால் வாழ்க்கையில் எனக்கு வேறொன்றும் வேண்டாம். 'ராபின்ஸன் க்ரூஸோ'வைப் போல் தனியாக ஒரு தீவில் கொண்டுவிட்டு விட்டால் ரொம்ப சந்தோஷமாக இருப்பேன்'' என்று நண்பனிடம் சொன்னேன்.

ஒருநாள் நான் ரசித்துக் கொண்டிருந்த ஒருநாவலைப் பார்த்தார் எங்கள் 'ஸார்'. 'அப்படி என்னடா பிரமாத நாவல்?' என்று கேட்டார். நான் கதையைச் சொன்னேன். ''தேவலையே! நானும்படித்துப்பார்க்கிறேன்'' என்று வாங்கிக் கொண்டார். படித்த பிறகு சுவரிலிருந்து பிறை வழியே கூப்பிட்டு, ''முடிவு நீ சொன்ன மாதிரி இல்லையே!'' என்றார். ''அப்படி முடித்திருந்தால் இன்னும் நன்றாக இருந்திருக்கும் அல்லவா?'' என்றேன். என் அண்ணா அதற்கு, ''இவன் இப்படித்தான். எந்தக் கதையாக இருந்தாலும் தலையையோ வாலையோ மாற்றி விடுவான்'' என்று குற்றஞ்சாட்டினார்.

ஒருநாள் முத்துவைத் துணைக்கு வரச் சொல்லிக் கூப்பிட்டேன்.

"பட்டப் பகலில் என்னடா பயம்?"

"தனியாப்போனா ஓணான் அடிக்கிற பசங்க என்னைத் துரத்திப் பயமுறுத்தறு'' என்றேன். ஓணான் அடிக்கக் கூடாது என்று முத்துவும் நானும் தடுத்ததால் அவர்களுக்கு எங்கள் மீது விரோதம்.

"நீ தைரியமா போகணும். அவங்க கிட்டே வந்தா உன்னை அவங்க மிரட்டறதுக்கு முன்னாடி நீ மிரட்டு. அடிக்க வந்தால் நான் பார்த்துக்கறேன். இந்த மரத்துக்குப் பின்னாலே ஒளிஞ்சுண்டு நிக்கறேன்.''

நான் கையைவீசிக்கொண்டு தைரியசாலி போல் நடந்தேன். கொஞ்ச தூரம் போனதும் நாலைந்து பையன்கள் என்னை வளைத்துக் கொண்டார்கள்.

"மடியிலே என்னடா வைச்சிருக்கே?'' என்றான் ஒருவன்.

"உங்கிட்ட எதுக்காகச் சொல்

அம்மாவிடம் கொடு

பையன்: அப்பா! நான் பரீட்சையில் முட்டை வாங்கிக்கிட்டு வந்து இருக்கேன்!

அப்பா: (ஏதோ நினைவாக) கொண்டு போய் அம்மாவிடம் கொடுத்து ஆம்லட் போடச் சொல்லு!

—கடலூர் கன்னியப்பன்



லணும்.''

''நீ சொல்லாட்டி நான் பார்த்துக்கறேன்'' என்று ஒரு பையன் மடியை அவிழ்க்க வந்தான். அந்தப் பையனின் முகத்தில் ஒரு குத்துவிட்டேன். 'ஐயோ!' என்று கத்திக் கொண்டே ஓட்டம் பிடித்தான். மற்றப் பையன்களும் ஓடிவிட்டார்கள்.

மறைவில் இருந்த முத்து வந்து என்னைத்தட்டிக்கொடுத்துப்பாராட்டினான். தைரியத்தின் அவசியத்தை முத்துவின் மூலம் அறிந்து கொண்டேன்.

சில சமயங்களில் என் நண்பர்களுக்கு நான் பாட்டுக் சொல்லிக் கொடுப்பேன். அண்ணாவும் சொல்லிக் கொடுப்பார்.

ஒருநாள், ''ஸார் ஒரு புதுப் பாட்டுக்கு மெட்டுப் போட்டுச் சொல்லிக் கொடுத்திருக்கிறார். அதை உங்களுக்குக் கற்றுக் கொடுக்கிறேன்'' என்றேன்.

''பாடிக் காட்டுங்கோ பார்ப்போம்'' என்றார்கள் முத்துவும் சுப்புவும்.

''வந்தே மாதரம் என்போம்—
எங்கள்
மாநிலத் தாயை வணங்குதும் என்போம்''

என்று தொடங்கிப் பாடி முடித்தோம்.

''இது யாருடைய பாட்டு?''

''சுப்ரமணிய பாரதின்னு ஒருத்தராம்'' என்றேன். ''இதற்கு சுதேச கீதம் என்று பெயராம்.''

முதன் முதலில் என்னுடைய பத்தாவது வயதில் பாரதியின் பாடல்களை நான் படித்தேன். அது முதல் என் வாழ்நாளில்ஒருநாளாவதுபாரதியின் சில வரிகளையாவது பாடாமலோ, பாடக் கேட்காமலோ நான் இருந்ததில்லை. பழந் தமிழ்க் கவிதைகளின் இன்பத்தை முதன்முதலில் நான் உணரும்படி செய்தது ஆழ்வார் பாசுரங்களே.

பாண்டுரங்கன் பள்ளியில் ஐந்தாம் வகுப்புவரைதான் உண்டு. மாயூரம் முனிசிபல் பள்ளியில்தான் மேலே படிக்க வேண்டும். முத்துவும் சுப்புவும் செல்வக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். அவர்களுக்கு மாயூரத்திலேயே தங்கிப் படிக்க வசதி இருந்தது.



எழுதியவர் யார்?

1. வியாசர் விருந்து — அ. இராமலிங்கர்
2. அலை ஓசை — ஆ. நக்கீரர்
3. அழகின் சிரிப்பு — இ. டாக்டர் மு.வ.
4. திருமந்திரம் — ஈ. ராஜாஜி
5. திருமுருகாற்றுப்படை — உ. திருமூலர்
6. பாஞ்சாலி சபதம் — ஊ. கல்கி.
7. திருவருட்பா — எ. பாரதிதாசன்
8. கரித்துண்டு — ஏ. பாரதியார்.

விடை: 1. ஈ; 2. ஊ; 3. எ.; 4. உ; 5. ஆ; 6. ஏ.; 7. அ; 8. இ.

— ப. தேவேந்திரகுமார் (1418), சென்னை—7.

நானும் அண்ணாவும் ஒரு பாட்டி அம்மாளின் வீட்டில் தங்கிச் சாப்பிட்டுக் கொண்டு படிப்பது என்று ஏற்பாடு செய்தார்கள். முனிசிபல் பள்ளியில் சம்பளம் கிடையாது. ஆனால் அந்தப் பாட்டி அம்மாளுக்கு மாதாமாதம் பணம் கொடுப்பதுகூட அப்போதைய குடும்ப நிலையில் கஷ்டமாக இருந்தது. சில மாதங்களில் அண்ணா பள்ளியிலிருந்து நின்றுவிட்டார். ஒரு வருடத்தில் என் படிப்பும் நின்று போயிற்று.

பதினைந்தாம் வயதில் அண்ணாவுடைய வற்புறுத்தலினால் கர்ணம் பரிக்ஷை எழுதித் தேறினேன். வரி வசூல் மாதங்களிலும், ஜமாபந்தி சமயங்களிலும் அண்ணாவுக்குக் கணக்கு எழுத உதவி செய்து வந்தேன். என் கையெழுத்து மணி மணியாக இருக்கும். கணக்கிலும் பிசகு வராது.

ஹரி கதை செய்வதும் தொடர்ந்து நடந்து வந்தது. 'புத்தமங்கலம் சகோதரர்கள்' என்று எங்களைக் குறிப்பிடுவார்கள்.

ஒருநாள் திருச்சியிலிருந்து என் சித்தி புத்தமங்கலத்துக்கு வந்து சேர்ந்தார். என்னுடைய படிப்பைப் பற்றி அய்யாசாமி ஐயருடைய துணைவியார் சித்தியிடம் பேசினார். என்னைத் திருச்சிக்கு அழைத்துக் கொண்டு போய்ச் சித்தி வீட்டில் வைத்துக்

கொள்ள வேண்டியது. அன்று எப்படியாவது பள்ளிக்கூட சம்பளத்துக்கும் செலவுக்கும் கொஞ்சம் பணம் அனுப்ப வேண்டியது என்று ஏற்பாடாயிற்று. என்னைத் தவிர, மற்ற எல்லாருக்கும் இது நல்ல ஏற்பாடாய்ப் பட்டது. எனக்குப் பதினேழு வயது ஆகியிருந்தது. ஆனால் இடையில் படிப்பு தடைப் பட்டுப் போனதால் இப்போது மூன்றாம் பாரத்தில்தான் சேர்த்துக் கொள்வார்கள். இது எனக்கு அவமானமாக இருந்தது.

''உன்னைப் பார்த்தால் பன்னிரண்டு வயதுக்கு மேல் மதிக்க மாட்டா'' என்றார்கள்.

''முத்துவும் சுப்புவும் காலேஜிலே சேர்ந்திருக்கா. நான் மட்டும் எப்படி அவ்வளவு சின்ன கிளாஸிலே படிக்க முடியும்?'' என்றேன்.

''அவா உன்னைக் கேவலமா நினைக்கவே மாட்டா. நம் குடும்ப நிலைமை தெரியாதா என்ன?''

கடைசியில் அவர்களைத் திருப்தி செய்வதற்காகப் புறப்பட்டேன். கிராமத்து மக்கள் எல்லாரும் சேர்ந்து வழியனுப்பி வைத்தார்கள்.

நான் சேர்ந்து படித்தது ஹிந்து ஸெகண்டரி ஸ்கூல். சேர்ந்த வாரத்திலேயே ''விவேகானந்தரின் தொண்டு'' என்பது பற்றிக் கட்டுரை எழுதச் சொன்னார் தமிழ்ப் பண்டிதர். மறுநாள் வகுப்பில் என்னுடைய கட்டுரையை எல்லா மாணவர்களுக்கும் படித்துக் காட்டினார்.

திருச்சி தேசியப் பள்ளியில் சேர்ந்து படிக்க வேண்டும் என்று நான் ஆசைப்பட்டேன். நன்றாகப் படித்து நிறைய மார்க்குகள் வாங்கியதால் அடுத்த ஆண்டில் தேசியப் பள்ளி அதிகாரிகள் எனக்கு முழுச் சம்பளச் சலுகை அளித்துச் சேர்த்துக் கொண்டார்கள். கணியூர் கிருஷ்ண ஐயர் நடத்தி வந்த இலவச விடுதியில் தங்கவும் இடம் பெற்றேன். குடும்பத்துக்குப் பாரமாக இல்லாமல் படிப்பது எனக்கு மகிழ்ச்சியளித்தது.

திருச்சி நேஷனல் ஹைஸ்கூலில் நான் மூன்று வருடங்கள் படித்தேன். இணையற்ற மகிழ்ச்சி உண்டாக்கிய நாட்கள் அவை. 1921 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் மகாத்மாவின் ஒத்துழையாமை இயக்கத்தில் சேர்ந்து, நான் பள்ளிக் கூடத்தையும் படிப்பையும் துறந்து தேசப் பணிக்கும் விடுதலைப் போராட்டத்துக்கும் என்னை அர்ப்பணித்துக் கொண்டேன்.

ஆதாரம்: சுந்தா எழுதிய 'பொன்னியின் புதல்வர்'.

தொகுப்பு: ஆனந்தி.

அடுத்த இதழில்...

என் குழந்தைப் பருவம்



கவியோகி சுத்தானந்த பாரதியார்

பாரதி புதிர் - 10




பாரதியார் பாடலில் சில வரிகளுக்கான விளக்கம் மேலே உள்ளது. பாடல் எது? வரிகள் என்னென்ன என்று கூறமுடியுமா? விடை 21-ஆம் பக்கம்.

கேளுங்கள் சொல்கிறோம்

* கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் ஒரு சிரிப்பு நடிகர்தானே! அவருக்கு மாம்பலத்தில் ஒரு சிலை இருக்கிறதே. அது போதாதா? 'பாலர் அரங்கம்' என்று இருந்த இடத்தை 'கலைவாணர் அரங்கம்' என்று மாற்றிவிட்டார்களே. இது சரியா?

— பெ. சங்கரன், சென்னை—5.

கலைவாணரை வெறும் சிரிப்பு நடிகர் என்று சொல்லக்கூடாது. அவர் மக்களைச் சிரிக்க வைத்து, அதே சமயம் சிந்திக்கவும் வைத்த ஒரு மிகப் பெரிய கலைஞர். அவருக்கு நினைவுச் சின்னங்கள் வைத்தது மிகப் பொருத்தமே. அவர் பெயரில் தனியாக ஓர்



அரங்கமே கட்டியிருக்கலாம். இதற்கு முன்பு இருந்த அரசு, பாலர் அரங்கத்தின் பெயரைக் கலைவாணர் அரங்கம் என்று மாற்றியது சரியில்லைதான். அட, மாற்றியதுதான் மாற்றினார்களே, 'கலைவாணர் சிறுவர் அரங்கம்' என்றாவது மாற்றியிருக்கக் கூடாதா? அப்படிச் செய்து, அங்கு சிறுவர்களின் கலை நிகழ்ச்சிகள் நடைபெறவும், சிறுவர் திரைப்படங்கள் காட்டவும் ஏற்பாடு செய்திருக்கலாமே!

* நாங்கள் கேட்கும் கேள்விகளுக்கெல்லாம் டாண், டாண் என்று பதில் கூறுகிறீர்களே, அது எப்படி? உண்மையிலே நீங்கள் மிகப் பெரிய அறிஞராகத்தான் இருக்க வேண்டும்!

— சி. கோமதி, மம்சாபுரம்.

அப்படி ஒன்றுமில்லை. நீங்கள் கேட்கும் கேள்விகளில் சிலவற்றிற்குத்தான் உடனே பதில் கூற முடிகிறது. பல கேள்விகளுக்கு விடைகளை, தமிழிலும் ஆங்கிலத்திலும் வெளிவந்துள்ள கலைக் களஞ்சியங்கள் மற்றும் பல அறிவியல் நூல்கள், பெரியோரின் வாழ்க்கை வரலாறுகள் போன்ற பலவற்றிலிருந்துதேடிப்பிடித்துத்தருகிறோம். சில கேள்விகளுக்கு அவை சம்பந்தப்பட்டவர்களுக்குக் கடிதம் எழுதியோ, நேரில் பார்த்தோ, தொலைபேசியில் தொடர்பு கொண்டோ பதில் பெறுகிறோம். உங்களுடைய கேள்விகளில்பலஎங்கள் சிந்தனையைத் தூண்டுவதோடு, நாங்களும் பல விஷயங்களைத் தெரிந்து கொள்ளவும் உதவுகின்றன.

* சமீபத்தில் நம் கோகுலம் கௌரவ ஆசிரியர், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில், 'உள்ளம் கவரும் பிள்ளைப் பாடல்கள்' என்ற தலைப்பில் இரண்டு நாட்கள் பேசினதாகவும், மிக நன்றாக இருந்தது என்றும் என் மாமா சொன்னார். அவர்பேசியதுபுத்தகமாகவெளி வருமா?

— என். வேணுகோபாலன், சிதம்பரம்.

வெளி வரலாம்.

* தமிழ்நாட்டில் இப்போது எத்தனை பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன? மாணவர்கள் எத்தனை பேர்?

— வீர. கேசவன், தாம்பரம்.

1984—85 கணக்குப்படி மேல்நிலைப் பள்ளிகள் 1474, உயர்நிலைப் பள்ளிகள் 2476, நடுநிலைப் பள்ளிகள் 5691. தொடக்கப் பள்ளிகள் 28, 847. ஆக மொத்தம் 38,488 பள்ளிகள். இவற்றில் படிக்கும் ஆண்கள் 59,46,494, பெண்கள் 45,99,525. மொத்த மாணவர் தொகை 1,05,46,019. இப்பள்ளிகள் யாவும் அரசு அங்கீகாரம்



பெற்றவை. அங்கோரம் பெருமல் பல பள்ளிகள் இருக்கின்றன. அங்கு படிக்கும் மாணவர்களும் லட்சக் கணக்கில் இருப்பார்கள்.

* எங்களுக்கும் ஓட்டுப் போடும் உரிமை இருந்தால், 'எங்களுக்கான திரைப்படங்களை எடுங்கள். எங்களுக்கு ஆங்கிலத்திலும், இந்தியிலும் இருப்பதுபோல் கலர்ப்படங்களுடன் புத்தகங்கள் வெளிவர ஏற்பாடு செய்யுங்கள். இல்லாதபோனால், ஓட்டுப் போட மாட்டோம்' என்று தகராறு செய்யலாமல்லவா?

— கே. பிரபு, மதுரை—2.



செய்யலாம். ஆனால் கல்வி கற்க வேண்டிய காலத்தில் தகராறு, கிளர்ச்சி என்று ஆரம்பித்தால், படிப்பு பாழாகிவிடுமே! இதற்குப் பதிலாக நம் தமிழக முதல்வருக்கு மிகப் பணிவாக ஒரு வேண்டுகோள் எழுதி, அதில் நூற்றுக்கணக்கான சிறுவர், சிறுமியர் கையெழுத்துப் போட்டு அனுப்பினால், நிச்சயம் பலன் கிடைக்கும்.

* என் அம்மா என்போல் சிறுமியாக இருந்தபோது பாலர் மலர், சங்கு, டமாரம் என்ற பத்திரிகைகளையெல்லாம் படித்ததாக அடிக்கடி சொல்லுகிறாள். அந்தப் பத்திரிகைகளை நடத்தியவர் யார் என்று கூறுவீர்களா?

— ப. சங்கரி, திருவள்ளூர்.

பாலர் மலர் (மாதம் இருமுறை — விலை ஓரணா) டமாரம் (வார இதழ் — விலை அரையணா) சங்கு (வாரம் இருமுறை — விலை காலணா) ஆகிய மூன்றையும் புதுக்கோட்டையிலிருந்து வெளியிட்டவர் வ. சுப. நடேசன் என்பவர். அவர் இப்போது இல்லை.

* கீரி — பாம்புச் சண்டை பார்த்திருக்கிறீர்களா? கீரியைப் பாம்பு கடித்தால், அதற்கு எதுவும் ஆகாதா?

— வி. ஜெகதாசன், கும்மிடிப்பூண்டி.

பாம்பினால் கீரியின் உடம்பைக் கடிக்க முடியாது. காரணம், கீரியின் உடம்பில் உரோமம் அடர்த்தியாக இருக்கிறது. பாம்புடன் சண்டை போடும்போது, கீரி உரோமத்தைச் சிலிர்த்துக் கொள்ளும். ஆகையால், பாம்பு கடித்தாலும் உரோமத்தில்தான் படும். உடம்பில் படாது. அப்போது கீரி வேகமாகப் பாய்ந்து பாம்பைக் கொன்று விடும்.

* சில பாம்புகள் முட்டை இடுவதில்லையாம். குட்டிகளாகவே பிரசவிக்குமாம். இது நிஜமா?

— ஆர். சீராளன், திண்டுக்கல்.

நிஜம்தான். சில வகைப் பாம்புகளின் முட்டைகள் தாயின் வயிற்றுக்குள்ளேயே தங்கிவிடும். அங்கேயே பொரிக்கப்பட்டு, வெளி வரும்போது குட்டிகளாக வெளி வரும்!

* எருமைக்கு ஒரு பெருமை உண்டு என்றும், அது இந்தியாவிலிருந்துதான் வெளிநாடுகளுக்குச் சென்றது என்றும் சொல்கிறார்களே, இது உண்மைதானா?

— சி. சுந்தர், சத்திரப்பட்டி.

ஆம். இந்தியாவிலிருந்துதான், எகிப்து, இத்தாலி, ஹங்கேரி போன்ற நாடுகளுக்குச் சென்றதாம்.

* நம்மை அதிகமாகக் கடிப்பது ஆண் கொசுவா? பெண் கொசுவா?

— கே. சிதம்பரம், மாயவரம்.

நம்மைக் கடித்து இரத்தத்தை உறிஞ்சுவது பெண் கொசுதான். ஆண் கொசு நம்மிடம் வருவதில்லை. மரச் சாறு, பழரசம் ஆகிய வற்றையே அது தேடிச் சென்று உறிஞ்சி உண்ணும்.

* சுவாமி வேதாசலம், தம்முடைய பெயர் வடமொழியில் இருந்ததால் அதை மறைமலையடிகள் என்று மாற்றிக் கொண்டதாகப் படித்தேன். அவருக்கு முன்பு இப்படி யாராவது மாற்றிக் கொண்டிருக்கிறார்களா?

— ப. சேவுகன், திருவண்ணாமலை.

சென்னை கிறிஸ்தவக் கல்லூரியில் தலைமைத் தமிழாசிரியராயிருந்த சூரிய நாராயண சாஸ்திரி, தம்முடைய பெயரை பரிதிமாற் கலைஞன் என்று மறைமலையடிகளுக்குப் பல ஆண்டுகளுக்கு முன்பே மாற்றிக் கொண்டார்.

* கப்பலோட்டிய தமிழர் வ. உ. சிதம்பரம் பிள்ளை சுயசரிதை எழுதியிருப்பதாகப் படித்தேன். அதை நீங்கள் படித்திருக்கிறீர்களா?


— வே. கருணாகரன், மேலூர்.



ஓ! படித்திருக்கிறேனே! அவர் உரை

நடையில் தமது சரித்திரத்தை எழுதவில்லை. கவிதையிலே இயற்றியிருக்கிறார்.

* சென்னைக்கு நான் சமீபத்தில் வந்தபோது நானும் என் சித்தியும் புரசைவாக்கம் போய்த் திரும்பி வரும்போது மிகவும் திண்டாடிப் போனோம். கொஞ்ச கொஞ்ச தூரம் இடைவெளிவிட்டு, மூன்று இடங்களில் பஸ்கள் நிற்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள். எந்த எந்த பஸ்கள் எங்கு எங்கு நிற்கும் என்பதைத் தெரிந்து கொள்ள முடியாதபடி, அங்கு எழுதி வைத்திருந்த பஸ் நம்பர்கள் மீது கல்லூரியில் நடைபெறும் தேர்தல் போஸ்டர்களை ஒட்டி நம்பர்களை மறைத்து விட்ட



தால், நாங்கள் இங்கும் அங்கும் ஓட வேண்டியதாய்ப் போய்விட்டது. படித்தவர்கள் இப்படிச் செய்யலாமா? அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க முடியாதா?

— எஸ். வேதாசலம், வேலூர்.

ஏன் முடியாது? ஒவ்வொரு போஸ்டரிலும் தான் தேர்தலுக்கு நிற்கும் மாணவரின் புகைப்படம், அவர் எந்தக் கல்லூரியைச் சேர்ந்தவர், எந்தப் பதவிக்கு நிற்கிறார் என்ற விவரங்கள் இருக்கின்றனவே! 'இப்படி போஸ்டர்களை ஒட்டி பஸ் எண்களை மறைத்து, பொது மக்களுக்குத் துன்பம் கொடுத்து வரும் உன் மீது ஏன் நடவடிக்கை எடுக்கக் கூடாது?' என்று போக்குவரத்துக் கழகம் நோட்டீஸ் அனுப்பலாமே! நோட்டீஸ் அனுப்புவார்களோ, இல்லையோ, கல்லூரித்தேர்தல்களெல்லாம் நடந்து பல மாதங்களாகியும், அந்தப் போஸ்டர்களைக் கிழித்தெறியவாவது போக்குவரத்துக் கழகம் ஏற்பாடு செய்திருக்கலாமல்லவா?

* நந்தனார் சரித்திரக் கீர்த்தனைகளை எழுதிய கோபாலகிருஷ்ண பாரதியாரும், சுப்பிரமணிய பாரதியாரும் உறவினரா? கோபாலகிருஷ்ண பாரதியாரின் சொந்த ஊர் எது?

— வே. கோமளம், புத்தூர்.

இருவரும் உறவினர் அல்லர். கோபாலகிருஷ்ண பாரதியார் பிறந்தது நாகபட்டினத்துக்கு அருகிலுள்ள நரிமணம் என்ற ஊரில்.

* மஞ்சள் காமாலைக்கு கரிசலாங்கண்ணிக் கீரை நல்ல மருந்து என்கிறார்களே, உண்மை தானா?

— பி. துரைராஜ், வந்தவாசி.

உண்மை என்றுதான் சொல்லுகிறார்கள். இக்கீரையைச் சமைத்துச் சாப்பிட்டால் காமாலை போகுமாம். தைலம் செய்து, தலை முழுகினால் கண் பார்வை நன்கு தெரியுமாம். அடிக்கடி மயக்கம் வருபவர்கள் இக்கீரையைத் தினம் சாப்பிட்டால் மயக்கம் வராதாம்.

* புகை எப்படி உண்டாகிறது?

— கே. அருணன், அருப்புக்கோட்டை.

ஒரு பொருளை நாம் எரிக்கும்போது அந்தப் பொருள் முழுவதும் எரியாமல் அரைகுறையாக எரிவதால், ஒருவகை நிறமுள்ள வாயுப் பொருள் தோன்றுகிறது. இதுவே புகையாகும். சரிவர எரியாத கார்பன் துகள்கள் புகையில் நிறைய இருக்கும்.

* நமது உடம்பின் வெப்பநிலை சாதாரணமாக எவ்வளவு இருக்கும்?

— கே. பாரிஜாதம், திருவொற்றியூர்.

சாதாரணமாக இருக்க வேண்டிய அளவு 98.4° பாரன்ஹீட், காய்ச்சல் வரும்போது 105° வரை ஏறும். 107°க்கு மேல் போனால் ஆபத்தான நிலை.

* காந்தியடிகள், புத்தர், இயேசு, ஒப்பிடுங்கள்.

— எஸ். ராமானுஜம், திருவானைக்காவல்.


மூவரும் பெரிய மகான்கள். அன்பு நெறியைப் போதித்தவர்கள். உலக அமைதியை விரும்பியவர்கள். எல்லாரும் இன்புற்று வாழத் தியாகம் செய்தவர்கள்.

* எங்காவது எழுத்தாளர் பெயரில் விமான நிலையமோ, ரயில் நிலையமோ இருக்கிறதா?

— பெ. சேஷகிரி, சிங்கம்புணரி.



விமான நிலையம் இருக்கிறதா என்று தெரியவில்லை. ஆனால், ரயில் நிலையம் இருக்கிறது. மகாத்மா காந்தி மிகவும் மதித்துப் போற்றிய ரஷ்ய எழுத்தாளராகிய டால்ஸ்டாய் பெயரில் 'லியோ டால்ஸ்டாய் ரயில் நிலையம்' இருக்கிறது. டால்ஸ்டாய் தமது சொத்துக்களைப் பங்கு போட்டு, ஏழைகளுக்குக் கொடுக்க விரும்பினார். ஆனால், அவருடைய மனைவியும் மக்களும் அதை எதிர்த்ததால் வீட்டை விட்டு வெளியேறினார். வழியில் கடுமையான காய்ச்சல் கண்டது. ஆஸ்ட்டப்போவா என்ற ரயில் நிலையத்தில் அவர் இறந்தார். அந்த நிலையத்திற்கு அவர் பெயரையே வைத்துவிட்டார்கள்.



எல்லாரும் நண்பர்களே!

ஜகத்குரு ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள்

தங்கப்பனும், அழகரும் கட்டிப் புரண்டு சண்டை போட்டார்கள். அச்சண்டை பள்ளிக்கூடத்தின் அருகில் நடந்தது. ஒரு மாணவன் ஓடிச் சென்று ஆசிரியரிடம் கூறிவிட்டான். உடனே, ஆசிரியர் மூன்று மாணவர்களை அனுப்பி அவர்கள் இருவரையும் அழைத்து வரச் செய்தார்.

இருவரையும் சண்டைக்குக் காரணம் கேட்டார். தங்கப்பன் வயதில் சற்று பெரியவன். அழகர் சிறியவன். சற்று மெலிந்து காணபபடுவான். தங்கப்பன் தன்னை, அழகர் தகாத சொற்களால் திட்டினான் என்று கூறினான். அழகர், அவன் பேச்சை மறுத்துத் தங்கப்பன்தான் முதலில் திட்டினான் என்றான்.

''தங்கப்பா, குற்றம் அழகர் மீதே இருக்கட்டும். அதற்காக நீ அவனை அடிக்கலாமா?'' என்று கேட்டார் ஆசிரியர்.

''சார், அழகர் என்னைவிடச் சிறியவனாக இருந்தாலும் அவனுடைய வசவை நான் ஏன் பொறுத்துக் கொள்ள வேண்டும்?'' என்று கேட்டான்.

''தம்பி, நான் கேட்பதற்குப் பதில் சொல். இந்த நிலம் நம்மைவிடப் பெரியதா? சிறியதா?''

''இதில் மறுப்பதற்கு என்ன இருக்கிறது? உறுதியாக நிலம் நம்மைவிடப் பெரியதுதான்.''

''இந்த நிலம் தன்னைத் தோண்டுகிறவர்களைத் தாங்கிக்கொண்டு இருக்கிறது. எத்தனையோ அணுகுண்டு சோதனைகளைக் கூட பூமிக்கடியில் செய்து கொண்டு இருக்கிறார்கள். அவர்களையும் இந்த நிலம் தாங்கிக் கொண்டுதான் இருக்கிறது. அது போல நம்மை இகழ்கிறவர்களையும் நாம் பொறுத்துக் கொள்ள வேண்டும்.''

''அது எப்படி முடியும்?''

''எத்தனையோ பொல்லாதவர்கள் இந்த உலகத்தில் வாழ்கிறார்கள். ஏராளமான மக்களுக்குத் துன்பங்கள் கொடுத்துக்கொண்டே இருக்கிறார்கள். அவர்களைக் கடவுள் பொறுத்துக் கொண்டு இருக்கிறார். ஏன்? காப்பாற்றிக் கொண்டும் இருக்கிறார்.''

''எதற்காக சார் அவர்களைக் காப்பாற்ற வேண்டும்?''

''அவர்களாகத் திருந்துவார்களா என்று கடவுள் அவர்களுக்குச் சந்தர்ப்பம் கொடுத்துக் கொண்டு இருக்கிறார். அந்த வாய்ப்பையும் அவர்களுள் சிலர் தவறாகப் பயன்படுத்திக் கொண்டால், மிகக் கடுமையான தண்டனை கொடுக்கிறார். மறு பிறவியிலும் கடுமையான தண்டனை கொடுக்கிறார்.''

''கடவுளைப் போல் நானும் சிறிது நேரம் பொறுத்துக் கொண்டேன். பிறகுதான் அழகரை அடிக்கத்தொடங்கினேன்.''

"தவறு... தங்கப்பா... தவறு. கடவுள் குற்றமற்றவர்; தூய்மையானவர். அவரைவிட உயர்ந்தவர்கள் எவரும் இல்லை. மேலும், நாம் அவரால்படைக்கப்பட்டவர்கள். அதனால், அவர் நம்மைத் தண்டிக்கிறார். மேலும், அவர் நமக்குக் கொடுக்கும் தண்டனை நாம் செய்யும் குற்றங்களுக்கு மட்டுந்தான். மேலும், அந்தத் தண்டனை நம்மைத் திருத்துவதற்கு மட்டுமே. ஆனால், நீயோ அழகரைப் படைக்கவில்லை; நீ குற்றம் இல்லாதவனும் இல்லை."

"பிறர் வ்ாயாலும், உடம்பாலும், செய்யும் துன்பங்களுக்கு என்ன செய்வது?"

"மிகச் சுலபம். உன்னால் பொறுத்துக் கொள்ள முடியாவிட்டால், வீட்டுப் பெரியோர்களிடம் சொல்லலாம்; ஆசிரியர்களிடம் சொல்லலாம்; ஒன்றும் பயன் இல்லாவிட்டால் கடவுளிடம் வேண்டலாம். அதோடு அமைதியாக இருக்க வேண்டும்."

"அமைதியாக இருக்க எவ்வாறு பழக வேண்டும்?"

"அருமையான கேள்வி கேட்டாய். அமைதி என்பது மனம் குழப்பாமல், நிம்மதியாக இருத்தல். அமைதி எப்போது குலையும்? நாம் பொறுமையை இழக்கும் பொழுது குலையும். பொறுமை எப்போது குறைகிறது? நமக்கு வேண்டியவரோ வேண்டாதவரோ நமக்குத் துன்பம் செய்யும் போது குலைகிறது. உடனே, நாம் பொறுமையை இழந்து எதிர்த்துத் துன்பங்களைச் செய்ய முற்படுகிறோம்."



"பொறுமையாக இருக்க என்ன செய்ய வேண்டும்?"

"நமக்கு ஒருவர் துன்பம் செய்யும் பொழுது நாம் முதலில் அதைப் பொறுத்துக் கொள்ள வேண்டும். பிறகு, அவர் செய்யும் துன்பத்தை மறந்துவிட வேண்டும். அதன்பிறகு அவர் செய்த நன்மையை நினைத்துக் கொள்ளவேண்டும். நன்மை செய்தது மனத்தில் நிற்குமானால், அவர் செய்த கொடுமைமறந்துவிடும். இதுவேசாந்த குணம் எனப்படும்."

"சாந்த குணம் நிலைத்து நிற்க என்ன செய்ய வேண்டும்?"

"முதலில் சாந்த குணத்தை விளக்கி விடுகிறேன். சாந்த குணம் உள்ளவன் — அதாவது அமைதியாக இருப்பவன் இன்பத்தையும், துன்பத்தையும் சமமாக மதிப்பான். இன்பம் வந்தபோது குதிக்கவும் மாட்டான். துன்பம் வந்தபொழுது துவண்டு போகவும் மாட்டான். அமைதி மனப் பழக்கத்தில் சுலபமாக வந்துவிடும். அது நிலைபெற உணவுப் பழக்கம் முக்கியம். புலால் உணவு உட்கொள்ளக் கூடாது. காய்கறி உணவை உண்ண வேண்டும். அதையும் அளவாகஉண்ணவேண்டும். தேவைக்குச் சற்று குறைவாகவே உண்ண வேண்டும். மேலும், நல்ல செய்திகளையே கேட்க வேண்டும். நல்லவைகளையே சிந்திக்க வேண்டும். நல்லவைகளைப் பேச வேண்டும். எப்பொழுதும் நன்மையான செயல்களையே செய்ய வேண்டும். பெரியோர்களுடைய கருத்துக்களையும் கதைகளையும் எப்பொழுதும் படிக்க வேண்டும்."

"சார். சிலர் எப்பொழுதும் பிறருக்கு வேண்டாதவைகளைச் செய்துகொண்டே இருக்கிறார்களே? அவர்களை என்ன செய்வது?"

"அவர்களையும் பொறுத்துக் கொள்ளவேண்டும். மாம்பழம்—தனிச் சுவையுடையது. ஆரஞ்சுப் பழம் தனிச் சுவையுடையது. எலுமிச்சம் பழம் புளிப்புச் சுவை உடையது. எலுமிச்சம் பழத்தில்மாம்பழத்தின்சுவையைஎதிர் பார்க்க முடியாது. அதுபோல ஒவ்வொரு மனிதனும் தனித்தனிக் குணம் உள்ளவன்."

"சிறப்புக் குணங்களைக் கொண்டவனை எவ்வாறு அறிவது?"

"மிகச் சுலபம். சாந்தமும், சகிப்புத் தன்மையும் கொண்டவுன் தனக்குத் தீமை செய்தவனுக்கும் நன்மையே செய்வான். அதைவைத்துக்கொண்டு புரிந்து கொள்ளலாம்."

"நான் தவறுதலாக அழகரை அடித்து விட்டேன். அவன் என்னை விடச் சிறியவன். அவனிடம் நான் மன்னிப்புக் கேட்டுக் கொள்ளலாகாது. அதற்காக, தங்களிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன்." என்றுகூறிய தங்கப்பன் அருகில்நின்ற அழகரைப் பார்த்து, "இனி நீயும் நானும் நண்பர்களாக இருப்போம்" என்றான்.

"தங்கப்பா. நானும் உன்னைத்திட்டியது தவறு. என்னை மன்னித்து விடு." என்றான் அழகர்.

"நீங்கள் இருவர் மட்டுமல்ல; இந்த வகுப்பில் உள்ள பிள்ளைகள் அனைவரும் நண்பர்களே" என்றார் ஆசிரியர்.,

நாலடியார்:

அறிவது அறிந்து அடங்கி
அஞ்சுவது அஞ்சி
உறுவது உலகு உவப்பச் செய்து—
பெறுவதனால்
இன்புற்று வாழும் இயல்புடையார்
எஞ்ஞான்றும்
துன்புற்று வாழ்தல் அரிது.

பாரதி புதிர்.10 விடை

சிப்பியிலே நல்ல முத்துவிளைந்திடுஞ்
செய்தி அறியாயோ—நன்னெஞ்சே!
குப்பை யிலேமலர் கொஞ்சுங் குருக்
கத்திக்
கொடி வளராதோ?—நன்னெஞ்சே!
('பகைவனுக்கருள்வாய்' — பாட்டு)



பிருந்தாவனம்


பறவைகளுக்கு விடுதலை!



ஒருமுறைஓர்ஏழையைக்குற்றவாளி என்று கூறிக் கைது செய்து சிறையில் அடைத்துவிட்டார்கள். சில ஆண்டு களுக்குப் பிறகு, அவன் குற்றவாளி இல்லை என்பது தெரிய வந்தது. அவனைத் தவருகக் கைது செய்ததற் காகக் கொஞ்சம் பணம் கொடுத்து, அவனை விடுதலை செய்தார்கள். அந்தஏழைநேராகச்சந்தைக்குச்சென் ருன். அங்கு ஓரிடத்தில் கூண்டில் அடைக்கப்பட்டிருந்த பறவைகளை, விலைக்கு வாங்கினுன். வாங்கிய உட னேயே கூண்டைத் திறந்து பறவை களைப் பறக்கவிட்டான்.

இதைப் பார்த்தவர்களுக்கு ஒன்றும் புரியவில்லை. "ஏன் இப்படிச் செய் தாய்?" என்று கேட்டதற்கு, "இந்தப் பறவைகளும் ஒரு குற்றமும் செய்ய வில்லையே! அதனுல்தான் அவற்றைச் சிறையிலிருந்து விடுதலை செய்தேன்" என்ருன். "நல்ல அதிசயப் பிறவி!" என்றனர் அங்கிருந்தவர்கள்.

— மு. குமாரவேல் (8371), ஆதம்பாக்கம்.



சன்மானம்!

"நேற்று அந்த நாடகத்திலே நீ பிச்சைக்காரனுக நடித்தாயே, உனக்கு என்ன சன்மானம் கொடுத்தாங்க?"

"பழைய சோறும், ஊறுகாயும்."

— எஸ். மகேஷ் (11,432), ஈரோடு.

சிரிக்காத காரணம்

"பாட்டி, பாட்டி, நாங்க ஒரு வேடிக்கைக்கதைசொல்கிறேம்.சிரிக் கிறியா பாட்டி?"

"கொஞ்சம் முன்னுடி சொல்லி யிருக்கப்படாதா?நான்பல்லைக்கழற்றி வச்சுட்டேனே!"

— சந்திரமௌளி (1470), நாக்பூர்—10.





கல்வி

* கல்வியின் வேர் கசப்பானது; கனி இனிப்பானது. — கிரீஸ்.
* மாணவர்களே பிற்கால ஆசிரியர்கள். — இந்தியா.
* எழுதப் படிக்கத் தெரிந்தவர்களுக்கு நான்கு கண்கள் உண்டு. — அல்பேனியா.
* அறிவும் கல்வியும் வண்டியின் இரு சக்கரங்கள். — ஜப்பான்.
* ஒருபையனுக்குக்கல்வி கற்பிப்பவர் மூன்று பேருக்குக் கல்வி கற்பிக்கிறார். ஓர் இளைஞன், மனிதன், கிழவன். — ஜெர்மனி.

— பி. செந்திில்குமார் (6861), பேரூர்.



ஹொகனேகல் நீர்வீழ்ச்சி

எங்கள் தர்மபுரி மாவட்டத்திற்குப் பெருமை சேர்த்து வருவது ஹொகனேக்கல் நீர்வீழ்ச்சி ஆகும். இந்தப் பெயர் எப்படி வந்தது தெரியுமா? 'ஹொகே' என்றால், கன்னடத்தில் 'புகை' என்று அர்த்தமாம். மேலேயிருந்து நீர் கீழே விழும்போது பாறை மேல் மோதிப் புகை எழுவதுபோல இருப்பதால்தான் இப்பெயர் வந்ததாம்.

— ஏ. எஸ். சதீஷ் ஆறுமுகம் (10,081), தருமபுரி.

'ப'வில் ஒரு வாக்கியம்!

ப

ல்லாவரத்தில்
ழனிச்சாமி
ஸ் ஸ்டாண்ட்
க்கத்தில்
ல் வைத்தியராகப்
ல்லாண்டு
லருக்குப்
ல் வைத்தியம்
ண்ணி
ணக்காரர் ஆனார்.

— எஸ். ஆனந்த் (10,192), திருவான்மியூர், சென்னை.

காய்

தட்டிப் பார்த்தேன்
தட்டைக் காய் ஆனது.

உதைத்துப் பார்த்தேன்
உருளைக் கிழங்கு ஆனது.

கடித்துப் பார்த்தேன்
கடுக்காய் ஆனது.

தேடிப் பார்த்தேன்
தேங்காய் ஆனது.

சாப்பிட்டுப் பார்த்தேன்
சப்பென்று இருந்தது.

— இரா. குமார் (4275), குன்னூர்.




உரிய இலை



சிவனுக்கு உரியது வில்வ இலை.
சக்திக்கு உரியது வேப்பிலை.
திருமாலுக்கு உரியது துளசி இலை.
கணபதிக்கு உரியது அருகம் புல்.
பிரம்மனுக்கு உரியது அத்தி இலை.
எல்லாத் தெய்வங்களுக்கும் உரியது வெற்றிலை.

— ப. தேவேந்திரகுமார் (1418), சென்னை—7.



எத்தனை பழங்கள்?

ஓர் ஆப்பிள் தோட்டத்தில் 7 காவலர்கள் வரிசையாக இருக்கின்றனர். ஆப்பிள் பழம் பறிக்க ஒருவன் வருகிறான். அவனைப் பார்த்து முதல் காவலன், "நீ பறித்து வரும் பழங்களில் சரி பாதியை எனக்குத் தரவேண்டும்" என்கிறான். இப்படியே மற்ற 6 காவலர்களும், 'நீ கொண்டு வரும் பழங்களில் சரிபாதி தர வேண்டும்'' என்கிறார்கள்.

பழங்களைப் பறித்து வந்தவன் ஏழு காவலாளிகளுக்கும் கொடுத்த பிறகு மீதம் இருந்தது ஒரே ஒரு பழம்தான்! அப்படியானால், அவன் பறித்து வந்த பழங்கள் எத்தனை?

விடை: மொத்தப் பழங்கள் = 128.

— டி. எஸ். சேதுராமன் (4271), மன்னார்குடி.

எட்டு

ஓரெட்டில் வளராத வளர்ப்பும்
ஈரெட்டில் படிக்காத கல்வியும்
மூவெட்டில் புரியாத திருமணமும்
நாலெட்டில் பெறாத பிள்ளையும்
ஐந்தெட்டில் தேடாத செல்வமும்
ஆறெட்டில் பங்கிடாத சொத்தும்
ஏழெட்டில் காணாத செல்வமும்
எட்டெட்டில் பெறாத ஓய்வும்
பயனளிக்காது.

— ஹ. சபீர்சலாம் (10,926), பனைக்குளம்.





பெயர்கள்

"டேய் கோபு, பஞ்சப் பாண்டவர்களின் பெயர் தெரியுமா? சொல்லுடா பார்க்கலாம்?"

"நீ முதலில் கௌரவர்கள் நூறு பேர்களின் பெயர்களைச் சொல்; அப்புறம் நான் சொல்கிறேன்."

— எஸ். மாதவன் (204), திருச்சி—14.

எத்தனை நாட்கள்?

ஓர் ஆண்டிற்கு எத்தனை நாட்கள் என்று கேட்டால், 365 நாட்கள் என்று தானே கூறுவோம்? ஆனால், அதுவன்று உண்மையான கணக்கு.

ஓர் ஆண்டிற்கு 365 நாட்கள், 5 மணி, 48 நிமிடங்கள், 46 வினாடிகள். இதுதான் ஓர் ஆண்டின் உண்மையான கணக்கு. இதை சூரிய ஆண்டு என்பார்கள். அதாவது பூமி சூரியனை ஒரு முறைசுற்றி வரும்காலமாகும். ஆனால், நடைமுறையில் 365 நாட்கள் கொண்டதே ஓர் ஆண்டு என்கிறோம். ஆனால், சூரிய ஆண்டு சிறிது அதிகமாக உள்ளதால், அதைச் சரிப்படுத்தவே நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை லீப் ஆண்டு என்கிறோம். அதாவது 366 நாட்கள் கொண்ட ஆண்டு அது. அந்த ஆண்டில் பிப்ரவரி மாதத்திற்கு 29 நாட்கள்.

— ம. அருள் (2167), கதிராமங்கலம்.





15-ம் 3-ம்!

சினிமாவுக்குப் போயிருந்தேன். சினிமா ஆரம்பிப்பதற்கு முன்பு, நான் உட்கார்ந்திருந்த வரிசையில் இருந்த கல்லூரி மாணவர் ஒருவர் சினிமாப் பாட்டுப் புத்தகம் ஒன்றை 'விலை' கொடுத்து வாங்கினார். மறுநிமிடமே, "தம்பி, அதைக் கொஞ்சம் கொடு, பார்த்துவிட்டுத் தருகிறேன்" என்று கூறி முன்வரிசையில் இருந்த ஒரு பெரியவர் வாங்கி, சாவதானமாகப் படிக்கத் தொடங்கிவிட்டார். அப்போது என் அருகில் இருந்த ஒரு மாணவர் பக்கத்தில் இருந்தவரிடம்,

"சுத்த 15க்கு 3 ஆக இருப்பார் போலிருக்கிறது!" என்று கூறிக் கிண்டல் செய்தார். 15க்கு 3 என்றால் என்ன? ஆங்கிலத்தில் 15 வது எழுத்து O, 3 வது எழுத்து C. இரண்டையும் சேர்த்தால் OC (ஓசி)!

— கே. ராஜா (6963), சென்னை—28.


பத்ரகாசி

'பத்ரகாசி' என்று முன்னொரு காலத்தில் அழைக்கப்பெற்ற எங்கள் ஊரை ஓர் அரசர் ஆண்டு வந்தார். அவருக்குக் குழந்தைச் செல்வம் இல்லை. தமக்கு ஒரு குழந்தை பிறந்தால், ஒரே இரவில் ஒரு கோயிலைக் கட்டி முடிப்பதாக வேண்டிக் கொண்டார். அவர் வேண்டுகோளின்படி, அவருக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அன்று இரவே கோயிலைக் கட்டும் வேலையைத் தொடங்கி, சூரியன் உதிப்பதற்குள் ஒரு சிறிய கோயிலைக் கட்டி முடித்துவிட்டார் அரசர். அச்சிறிய கோயில் வளர்ந்து ஒரு பெரிய மலைக் கோயிலாக இன்றும் எங்கள் ஊரில் காட்சியளிக்கிறது. அந்த மலைக் கோயிலின் பெயர்: ஸ்ரீ சந்திரசூடேஸ்வரர் ஆலயம்.

— கே. நரசிம்மன். (7378), ஓசூர்.



பழைய கதை; புதிய பாடல்



யாரைத் தேர்ந்தெடுப்பது?

(மூன்று இளைஞர்கள் ஓரிடத்தில்
சந்திக்கிறார்கள்.)

முதல் இளைஞன்:

என்னிடம் மாய சமுக்காளம்
இருப்பதை நீங்கள் பாருங்கள்.
சென்றிட லாமே நினைத்த இடம்
சேர்ந்திட லாமே இதில்ஏறி!

இரண்டாம் இளைஞன்:

என்னிடம் பார்ப்பீர், மந்திரித்த
எலுமிச் சம்பழம் இருக்கிறது.
துண்டு போட்டே உடம்பினிலே
தேய்த்தால் நோய்கள் தீர்ந்திடுமே!

மூன்றாம் இளைஞன்:

இதுஓர் மாயக் கண்ணாடி
எனக்கே சொந்தம், பாருங்கள்.
இதனில் நினைக்கும் உருவத்தை
எளிதில் காண முடிந்திடுமே!

எலுமிச்சம்பழ இளைஞன்:

அரசன் மகளோ மிகமிகவே
அழகி என்பார். அவளுடைய
உருவம் தன்னைக் காட்டிடுமோ,
உன்னிடம் உள்ள கண்ணாடி?

(கண்ணாடி இளைஞன் தன் கண்ணாடியில்
இளவரசி உருவத்தைக் காட்டி:)

அடடே, உடம்பு மிகமெலிந்து
அரசர் மகளோ கிடக்கின்றாள்.
கடவுளை அரசர் வேண்டுகிறார்;
கண்ணீர் சிந்தி நிற்கின்றார்.

சமுக்காள இளைஞன்:

சரிசரி, மூவரும் என்னுடைய
சமுக்கா ளத்தில் ஏறிடுவோம்.
விரைவில் நோயைத் தீர்த்திடுவோம்
வெகுமதி நிறையப் பெற்றிடுவோம்.

மூவரும் மன்னரைக் கண்டு கூறுகிறார்கள்:

மன்னர் பிரானே, உங்களது
மகளின் நோயைக் குணப்படுத்தி

குழந்தைக் கவிஞர்

இன்றுடன் கவலை தீர்த்திடுவோம்,
எலுமிச் சம்பழ மகிமையினால்!

மன்னர்:

எத்தனை மருத்துவர் வந்தார்கள்!
இயன்றதை யெல்லாம் செய்தார்கள்.
அத்தனை பேரும் கைவிட்டார்
ஆயினும், முயன்று பாருங்கள்.

எலுமிச்சம்பழ இளைஞன்:

எலுமிச்சம்பழம் இதை வாங்கி
இரண்டாய் வெட்டி இளவரசி
நலம்பெற உடம்பில் தேய்த்திடுவீர்
நாளையே நல்ல குணம் தெரியும்.

மறுநாள் மூவரிடமும் மன்னர்:

அற்புதம்! அற்புதம்! என்னுடைய
அருமை மகளும் பிழைத்தெழுந்தாள்.
முற்றிலும் அவள்குணம் பெற்றுவிட்டாள்.
மிகவும் நன்றி மூவருக்கும்.

ஒருவரை உங்கள் மூவரிலே
உடனே என்மகள் தேர்ந்தெடுத்துத்
திருமணம் செய்து கொண்டிடுவாள்.
சிறப்புடன் நானும் நடத்தி வைப்பேன்.

மற்றவர் இருவரை நான்மதித்து
மகிழ்வுடன் ஆயிரம் பொன்தருவேன்.
முற்றிலும் திருப்தி அடைந்திடுவீர்.
விருப்பம் எதுவோ கூறிடுவீர்.

கண்ணாடி இளைஞன்:

என்னிடம் மாயக் கண்ணாடி
இல்லை என்றால் இளவரசி
துன்பப் படுவதை அறிவோமா?
துடிப்புடன் இங்கு வருவோமா!

சமுக்காள இளைஞன்:

என்னிடம் மாய சமுக்காளம்
இருந்ததனாலே இளவரசி
துன்பப் படுவதை அறிந்ததுமே
துரிதமாய் வந்தோம் மூவருமே.

எலுமிச்சம்பழ இளைஞன்:

என்றன் எலுமிச் சம்பழத்தை
இரண்டாய் வெட்டித் தேய்த்ததனால்
மன்னர் மகளும் நோய்தீர்ந்தாள்.
மனத்தில் இன்பம் நாம் அடைந்தோம்.

மன்னர்:

அருமை மகளே, மூவரிலே
யாரை நீயும் தேர்ந்தெடுத்துத்
திருமணம் செய்து கொள்வாயோ!
சிந்தனை செய்து பதில்சொல்வாய்!

இளவரசி:

கண்ணாடியுடன் சமுக்காளம்
கண்முன் அழியா திருக்கிறது.
என்மேல் பூசிய பழம்எங்கே?
இனியும் திரும்பி வந்திடுமோ?

திரும்பவும் கிடைக்கா தெனநன்றாய்த்
தெரிந்தும் உதவினர் ஓர் இளைஞர்.
பொருளைச் சிறிதும் இழக்காமல்
புரிந்தனர், உதவி மற்றிருவர்.

அற்புத எலுமிச் சம்பழத்தை
அளித்தவர் தம்மையே நான் மணப்பேன்.
மற்றவர் பொன்னைப் பெற்றிடுவீர்.
மகிழ்வுடன் நன்றியை ஏற்றிடுவீர்.




மிட்டாய்க் கடைக்காரர் பையன்: எங்கப்பா எதையுமே வீணாக்க மாட்டாருடா!

மற்றவன்: அப்படி என்னடா பண்ணுவாரு?

மி. க. பையன்: இந்த வருடம் தீபாவளிக்கு மிஞ்சின மைசூர்பாகை வைச்சு நான் படிக்க எனக்கு ஒரு சின்ன அறையே கட்டிக் கொடுத்திட்டாரு!

(வி)சித்திரச் செய்திகள்!

கங்காரு வேட்டை!




சிறுவர்களுக்கு மிகவும் வேடிக்கையான விலங்கு கங்காரு. ஆஸ்திரேலியாவில் பல கோடி கங்காருகள் உள்ளன. இவை அதிகமாகப் பெருகி, பயிர்களைப் பெருமளவில் தின்று நாசமாக்குகின்றன. இவற்றைக் கொன்று அழிக்க ஆஸ்திரேலிய அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது. இந்த ஆண்டு லட்சக்கணக்கில் கங்காருகள் கொல்லப்பட்டு அவற்றின் தோல், இறைச்சி முதலியவற்றைப் பயன்படுத்தப் போகிறார்கள்!

மீன் தின்னும் செடி!

லண்டனில் உள்ள டிலாக்புல் மீன்காட்சி சாலையில் புதிதாக ஒரு நீர்த் தாவரம் வைத்திருக்கிறார்கள். அது மீன்களை மட்டுமே உணவாகக் கொள்ளுகிறது. அந்தத் தாவரத்தின் பூ மிகவும் அழகானது. அந்தப் பூ, மீன்களைக் கண்டதும் தன் இதழ்களை விரித்து, மீன்களைக் காந்தம் போல் இழுத்துக் கொள்ளுகிறது. பின்பு மீன்களை வைத்து அப்படியே இதழ்களை மூடிக் கொள்ளுகிறது. சில நாட்களில் மீன் ஜீரணமாகி விடுகிறது!





கண்ணிலே புழு!


ஒரிஸ்ஸா மாநிலத்தில், பெர்ஹாம்பூர் மருத்துவ மனைக்கு, கண்ணில் கட்டி என்று ஒரு பெண் சென்றாள். இடக் கண்ணின் கீழ் இமைக்குள் கட்டிபோல் பெரிதாக இருந்தது. கண் டாக்டர் பரிசோதித்து, அங்கிருந்து சுமார் 2 மீட்டர் (6 அடி) நீளம் உள்ள நாடாப்புழு ஒன்றை எடுத்தார்! மருத்துவ வரலாற்றிலேயே இது புதுமை என்கிறார்கள்.

பண்டைக்காலப் பனிக்கட்டி!

நாற்பதாயிரம் ஆண்டுகளுக்கு முந்திய பனிக்கட்டித் துண்டு ஒன்றை ஆஸ்திரேலிய நிபுணர்கள் கண்டுபிடித்திருக்கின்றனர். தென் துருவ ஆராய்ச்சிக்காகச் சென்று கொண்டிருந்தபோது எண்டர்பி தீவு அருகே கடலில் மிதந்து கொண்டிருந்த இந்தப் பனிக்கட்டியை ஆராய்ந்து கண்டுபிடித்திருக்கிறார்கள்!



பின்னால் ஓட்டும் சாதனை!



கினியாவைச் சேர்ந்த 'எரிக் ஐவரி' என்பவர் ஒரு காரை 820 கி. மீ. தூரத்தை 16¼ மணி நேரத்தில் பின்னோக்கி ஓட்டிச் சாதனை புரிந்திருக்கிறார். இதற்கு முந்திய சாதனை 806 கி. மீ. தான்!

– ஆழி

முதல்வருக்கு வேண்டுகோள்

இந்த இதழ் 'கேளுங்கள்; சொல்லுகிறோம்' பகுதியில் சிறுவருக்கான திரைப்படங்கள், புத்தகங்கள் பற்றிய ஒரு கேள்வியும், அதற்கான பதிலும் வந்திருக்கின்றன.

அதில் கண்டவாறு தமிழகத்தின் மாண்புமிகு முதல்வரவர்களுக்கு எவ்வாறு எழுதலாம் என்பதற்கு ஒரு மாதிரி வேண்டுகோளைக் கீழே தந்திருக்கிறோம். இதுபோல் எழுதி பல ஊர்களிலிருந்தும், (நகரங்களாக இருந்தால் நகரின் பல பகுதிகளிலிருந்தும்) நூற்றுக்கணக்கான சிறுவர் சிறுமியர் கையெழுத்திட்டு அனுப்பினால், நல்ல மனம் கொண்ட நம் முதல்வர் நிச்சயம் ஆவன செய்வார்.

ஒவ்வோர் ஊரிலும் பொதுப் பணியில் ஆர்வம் கொண்ட சிறுவர் சிறுமியர் இருப்பார்கள். அவர்கள் மேற்கண்ட மாதிரி ஒரு வேண்டுகோளைத் தயாரித்து, நிறையப் பேரிடம் கையெழுத்துப் பெற்று முதல்வருக்குத் தபாலில் அனுப்புவார்கள் என நம்புகிறோம். எல்லா இடங்களிலிருந்தும் ஒரு குறிப்பிட்ட மாதத்திற்குள் சென்றால் நல்லது. இந்த ஏப்ரல் மாதத்திலே எல்லோரும் அனுப்பலாமே! வேண்டுகோளை அனுப்பிய பிறகு, கோகுலத்திற்கும் தகவல் தெரிவியுங்கள்.



தமிழக மாண்புமிகு முதல்வர்
எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள்,
தமிழக அரசு தலைமைச் செயலகம்,
கோட்டை, சென்னை — 9.

மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு,

வணக்கம்.

எங்களைப் போன்ற சிறுவர் சிறுமியருக்காகச் சத்துணவுத் திட்டம் கொண்டு வந்து, இலட்சக்கணக்கான குழந்தைகளின் வயிற்றுப் பசியைப் போக்கி வருகிறீர்கள். அதே போல் எங்களின் அறிவுப் பசியை அகற்றவும், எங்களுக்கான கலைகளை வளர்க்கவும் மேலும் பல வழிகளில் உதவ வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

தாங்கள் நாடக மேடைகளிலும், திரைப்படங்களிலும் சீரும் சிறப்புமாக நடித்துப் பல்லாயிரக்கணக்கான மக்களின் உள்ளம் கவர்ந்தவர்கள். அப்படிப்பட்ட தாங்கள் சிறுவருக்கென்று தமிழில் திரைப்படங்கள் இல்லாத குறையை நீக்க ஆவன செய்வீர்கள் என நம்புகிறோம்.

ஆங்கிலத்திலும், இந்தியிலும் வண்ணப் படங்களுடன் மிகச் சிறப்பாக வெளிவந்துள்ள குழந்தைப் புத்தகங்களைப் பார்க்கிறோம். அவற்றைப் பார்க்கும்போது, தமிழிலும் இப்படிப்பட்ட புத்தகங்கள் என்று வெளிவருமோ என்ற ஏக்கம் எங்களுக்கு ஏற்படுகிறது. அந்த ஏக்கத்தை நீக்க குழந்தைப் புத்தக நிறுவனம் ஒன்றை அமைத்தால் பேருதவியாக இருக்கும்.

பல பள்ளிகளில் நூல் நிலையங்கள் இல்லை. இருக்கின்ற நூலகங்களிலும், எங்களுக்காக வெளிவந்துள்ள நல்ல புத்தகங்களைக் காண முடியவில்லை.

இந்தக் குறைகளையெல்லாம் தாங்கள் தயவு செய்து நீக்கியருள வேண்டுமெனப் பணிவோடு கேட்டுக் கொள்ளுகிறோம்.

தங்களன்புள்ள,





பேராசிரியர் சுந்தரம்பிள்ளை

நீங்கள் தினந்தோறும் பாடுகிறீர்களே, 'நீராரும் கடலுடுத்த' என்று தொடங்கும் தமிழ்த் தாய் வாழ்த்து, அதைப் பாடியவர் இவர்தான். 'மனோன்மணீயம்' என்ற நாடக நூலைச் செய்யுளிலே இயற்றிப் புதுமை செய்தவர் இவர். அந்த நாடக நூலின் தொடக்கத்தில் காணப்படுவதுதான் 'நீராரும் கடலுடுத்த' என்ற பாடல்.

இவர் திருவாங்கூரைச் சேர்ந்த ஆலப்புழையில் பிறந்தார். சிறந்த தத்துவப் பேராசிரியராக விளங்கினார்.

தமிழிலும் ஆங்கிலத்திலும் ஆழமான புலமை உடையவர். ஆங்கிலத்தில் இவர் பல ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதிப் புகழ் பெற்றவர்.

இவருடைய திறமையைப் பாராட்டி லண்டனிலுள்ள வரலாற்று ஆராய்ச்சிக் கழகம் இவருக்கு எஃப். ஆர். எச். எஸ். (F.R.H.S.) என்ற பட்டத்தைவழங்கியது. ஆசியஆராய்ச்சிக் கழகம் எம். ஆர். எச். எஸ். (M.R.H.S.) என்ற பட்டத்தை அளித்தது. சென்னை அரசாங்கமும் இவருக்கு ராவ் பகதூர் என்ற விருதினை வழங்கியது.

இவர் கோடக நல்லூர் சுந்தர அடிகளாரிடம் கல்வி கற்றவர். மனோன்மணீயம் என்ற நாடகத்தில் அரசகுருவாகவும், மிகவும்பெருந்தன்மைஉடையவராகவும் வருகின்ற பாத்திரத்திற்கு 'சுந்தர முனிவர்' என்ற தம்முடைய குருவின் பெயரையே வைத்திருக்கிறார். குருவிடம் கொண்டுள்ள இவரது பக்தியையே இது காட்டுகிறது.

டாக்டர் மு. வரதராசனார்

தமிழகத்தின் சிறந்த சிந்தனையாளராக விளங்கியவர் டாக்டர் மு. வ. வித்துவான் பட்டம் பெற்றுத் தமிழாசிரியராயிருந்த இவர், தமது விடா முயற்சியாலும், தணியாத ஆர்வத்தாலும் படிப்படியாக உயர்ந்து டாக்டர் பட்டம் பெற்றார். சென்னை, பச்சையப்பன் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியராயிருந்த இவர், சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறைத் தலைவராகவும், பிறகு மதுரை காமராசர் பல்கலைக் கழகத் துணை வேந்தராகவும் விளங்கி, பலவகையிலும் தமிழ் மொழிக்கும், கல்வி வளர்ச்சிக்கும் பணிபுரிந்தார்.

தமிழ்ப் பேராசிரியராக விளங்கிய இவர், சிறுகதைகள், நாவல்கள், நாடகங்கள் எழுதுவதிலும் சிறந்தவராகத் திகழ்ந்தார். பண்டைய இலக்கியங்களில் மட்டிலுமே ஊறிக் கிடந்த பல தமிழறிஞர்களுக்கும், பேராசிரியர்களுக்கும் புதிய இலக்கியங்களைப் படைக்க வேண்டுமென்ற ஆர்வத்தைத் தூண்டினார். அவர்களில் பலரைச் சிறந்த எழுத்தாளர்களாகவும் கவிஞர்களாகவும் உருவாக்கினார்.

தமிழிலே மிக அதிகமாக விற்பனையான 'திருக்குறள் தெளிவுரை' என்ற நூலைத் தந்தவர் இவரே. இவர் எழுதிய 'அகல் விளக்கு' (நாவல்) சாகித்ய அகாதமிப் பரிசு பெற்றுள்ளது.

இவருடைய நூல்களை மாணவர்கள் மிகவும் ஆர்வத்துடன் படித்து வருகிறார்கள். அதன் காரணமாக மாணவர் உலகில் இவர் மிகுந்த செல்வாக்குப் பெற்று விளங்குகிறார்.

உள் அட்டைப் படங்கள் உதவி: சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.


கோகுலம் சிறுவர் சங்க உறுப்பினர் பட்டியல் (தொடர்ச்சி)


3351 பா. வெங்கடேஸ், S/o. S. பாலசுப்பிரமணியன், No. 52A, பள்ளத் தெரு, திருச்செந்தூர்.
3352 V. கணபதி சுப்ரமணியன், 55, தெற்கு ரத வீதி, தென்கரை, பெரியகுளம்–626 504.
3353 எம். தன நாகராஜ், C/o. சு. முனியப்பன், செல்லம் விறகுக் கடை, ரயில்வே பீடர் ரோடு, பழனி–624 601.
3354 ஆர். ரமேஷ் கண்ணன், No. 69, வடக்கு மாட வீதி, சென்னை–19.
3355 இரா. உதயபானு, 6B/14, அண்ணா நகர், பட்டிவீரன்பட்டி–624 211.
3356 ச. பத்மஜா, C-10, காலனி, தேவனாம்பட்டிணம், கடலூர்–607 001.
3357 க. குமாரதேவன், 158, தியாகி அண்ணாமலை நகர், திருவண்ணாமலை.
3358 I. சோமு, 9, திரு.வி.க. வீதி, காவேரிப்பாக்கம், திண்டிவனம்.
3359 V. கோபிநாத், 12, பாக்குக்காரத் தெரு, வந்தவாசி (N.A. Dist.), 604 408.
3360 S. பாலசுப்பிரமணியம், C/o. S. சோலை ஆசாரி, கீழா நிலை (P.O.) K. புதுப்பட்டி, புதுக்கோட்டை மாவட்டம்–622 202.
3361 பா. நாராயணசாமி, 4586, கீழ 4 ஆம் வீதி, புதுக்கோட்டை
3362 S. ஜோதி குமார் ராஜா, அழகர் எலக்ட்ரிக் ஒர்க்ஸ், 110, அழகர் கோவில் ரோடு, தல்லாகுளம், மதுரை–2.
3363 D. செந்தில்குமார், S/o. M. தாமோதரன், கணபதி பாளையம் – 638 153.
3364 S. சுஜித் ராஜி, 9/2, பஞ்சாயத்து யூனியன் அலுவலர் குடியிருப்பு, மடவார் விளாகம், திருவில்லிபுத்தூர் – 626 125.
3365 ரா. செல்ல கணேஷ், 1/2065, சேர்வைக்கார நாராயண பிள்ளை சந்து, கரந்தட்டாங் குடி, தஞ்சாவூர் – 613 002.
3366 G. சுந்தர ராமன், 20, தெற்கு அக்ரஹாரம், காட்டுப்புத்தூர், – 621 207.
3367 நாச்சியார், F – 12, வீட்டு வசதி வாரியக் குடியிருப்பு, புதிய சிறைச்சாலை, மதுரை–10.
3368 G. பிரகாஷ், S/o. C. கணேசபிள்ளை, குல்லூர் சந்தை அஞ்சல், ராமநாதபுர மாவட்டம், – 626 053.
3369 A. சுப்புலட்சுமி, 10, சிவன் கோவில் தெரு, கோவில்பட்டி.
3370 A. கணேச சண்முகம், 10, சிவன் கோவில் தெரு, கோவில்பட்டி.
3371 ஜெ. ஜெகன் பாபு, 2/1, பவுண்டுத் தெரு, முத்துராமன்பட்டி, விருதுநகர்–626 002.
3372 ச. சுந்தர் காந்தி, 3, சின்னையா பள்ளிக்கூடத் தெரு, விருதுநகர் – 626 001.
3373 M. சரவணன், 242, உள் தெரு, விருதுநகர் – 626 001.
3374 முத்தையா, S/o. பெரிய செட்டியப்பன், 22–b, Tatabad, 9th Street, Coimbatore – 12.
3375 S. அன்புச்செல்வன், 12, பெரிய கோயில் கீழ வீதி, மயிலாடுதுறை – 609 001.
3376 செ. ஸ்ரீனிவாசன், 3, மூன்றாவது தெரு, வடக்கு ஜெகந்நாத நகர், வில்லிவாக்கம், சென்னை–49.
3377 C. R. ஜோதிகுமார், 13, தெற்கு வெளி வீதி, மதுரை – 1.
3378 பெ. மீனா, 133, மேட்டுத் தெரு, உறையூர், திருச்சி–3.
3379 S. Jayanthi, D/o. C. Shenbagarajan, Sri Ganesa Vilasam, Thenmala – 691 308, Quilon District.
3380 க. சத்தியமூர்த்தி, 125A, மெக்கரிக்கர் தெரு, R. S. புரம், கோவை– 641 002.
3381 ரா. ராகவன், S/o. க. ராமதுரை, அழகிய நாயகிபுரம், தஞ்சை மாவட்டம்–614 723.
3382 K. இராஜாராமன், 48/A, தேரடிப் பிள்ளையார் கோயில் தெரு, சிதம்பரம்–608 001.
3383 ப. வேல்முருகன், 14A/3, வெங்கடேசா காலனி, செட்டியார் கோவில் வடக்குத் தெரு, குத்தாலம், மயிலாடுதுறை தாலுகா.
3384 ப. கலைவாணி, D/o. பக்கிரிசாமி, 14A/3, வெங்கடேசா காலனி, செட்டியார் கோவில் வடக்குத் தெரு, குத்தாலம், மயிலாடுதுறை தாலுகா.
3385 R. செந்தில்குமார், 66/W – 1, ராதாகிருஷ்ணா ரோடு, டாடாபாட், கோவை–641 012.
3386 K. ருக்மணி, D/o. S. N. கிருஷ்ணமூர்த்தி, B – 13/6, ரயில்வே காலனி, பொன்மலை, திருச்சி.
3387 K. S. அறிவழகன், த/பெ. K. சண்முகம், கொழுமம் – 638 212.
3388 V. சொர்ண பிரேமாராணி, 164, கன்னிமாரம்மன் கோவில் தெரு, தென்காசி.
3389 D. கணேஷ்குமார், 73/1, மாரியம்மன் கோவில் தெரு, கொசப்பேட்டை, வேலூர்–1.
3390 வெ. மீ. சுந்தரம், 'கற்பகம்' 20, தாமோதர மூர்த்தி தெரு, கீழ்ப்பாக்கம், சென்னை–10.
3391 ஆர். ஸ்ரீதர், 3/15, ரமண கவுண்டர் லே அவுட், கோயமுத்தூர் – 641 043.
3392 எஸ். ரவி, V – 7 – A, கோவைப்புதூர், கோயம்புத்தூர் – 641 042.
3393 K. சீனிவாசன், கௌசல்யா காம்பவுண்ட், சுப்பராய நகர், பூந்தோட்டம், கடலூர்–2.
3394 V. செந்தில்குமரன், கொண்டையம்பள்ளி, ஆத்தூர் தாலுகா – 636 130.


3395 R. ராஜசேகர், 55, மேட்டு அக்ரஹாரம் தெரு, சேலம் — 1.
3396 வை. ராகேஷ், 23/C, பாரதி 2 வது தெரு, நங்கநல்லூர், சென்னை—61.
3397 K. Ramesh, S/o. M. Kannan, TR/189, Padma Road, Kadma, Jamshedpur — 831 005.
3398 P. சுரேஷ்குமார், இலட்சுமியாபுரம், இனும் கரிசல் குளம், ஸ்ரீவில்லிபுத்தூர் தாலுகா—626 125.
3399 Ratna Bhuvanesh, D/o. R. V. Bhuvanesh, 173, Beach Towers P. Balu Marg, Prabhad Bombay.
3400 ந. ஸ்ரீராமன், நெ. 8, I கிராஸ் தெரு, டாக்டர் S. ராதாகிருஷ்ணன் நகர், திருவான்மியூர், சென்னை—600 041.
3401 R. ரமேஷ்குமார், 1 — 2, உத்தமதானபுரம், பாபநாசம், தஞ்சை மாவட்டம்.
3402 A. Anita Josephin Benedicta, Aseayakam, Alankarapuram, West Neyyoor, (p.o.) K. K. District.
3403 இரா. சரவணன், C/o. செந்தில் விநாயகர், தாய் இல்லம், தாழையூத்து, சங்கர் நகர், P.O. திருநெல்வேலி மாவட்டம்.
3404 காயத்திரி நடராஜன், D/o. Dr. நடராஜன், 35, T. S. புரம், திருப்பூர்—638 601.
3405 A. திருநாவுக்கரசு, 69, செக்கு மேடு சந்து, பொன்னுசாமி தெரு, பண்ணுருட்டி 607 106.
3406 P. வெங்கடலட்சுமி, C 19/8, D. R. O. காலனி, தியூநத்தம் ரோடு, மதுரை — 7.
3407 K. R. கீதாபார்வதி, 49, காக்கா தோப்புத் தெரு, மதுரை — 1.
3408 ஜெ. பாலாஜி பரிமள ராஜன், 6, அப்பு தெரு, மைலாப்பூர், சென்னை— 4.
3409 கோபால் செ. ராஜா, 18/A. காலாங்கரை தெரு, சேரன்மகாதேவி, திருநெல்வேலி 627 414.
3410 S. சதீஷ், A/2, சண்முகபுரம், கோரிமேடு, பாண்டி — 6.
3411 T. பாலசுப்பிரமணியம், S/o. V. தளவாய் துரை, 17/9, வடக்குத் தெரு, சத்திரப் பட்டி — 626 102.
3412 S. சௌம்ய நாராயணன், 18, கிருஷ்ணராஜபுர அக்ரஹாரம், மதுரை—625 001.
3413 S. பாரத்ஸ்ரீனிவாசன், 18, கிருஷ்ணராஜபுர அக்ரஹாரம், மதுரை—625 001.
3414 P. M. செந்தில்குமார், H — 68—ஹவுஸிங் யூனிட், பெரியார் நகர், ஈரோடு—1.
3415 மு. கா. இளங்கோ, 243, கீழ் வாணியர் தெரு, காவேரிப்பட்டணம்—635 112.
3416 கி. கணேஷ்குமார், 151, தாம்சன்பேட்டை, காவேரிப்பட்டணம், தருமபுரி—635 112.
3417 வெ. நாகலட்சுமி, D/o. C. வெங்கடாசலம், 10A/7, ஹார்வி ரோடு சந்து, திருப்பூர் — 638 602.
3418 அ. சாந்தி, 342, கடலைக்காரத் தெரு, கோவில்பட்டி — 627 701.
3419 இ. சு. சுப்பம்மாள், B 160, N. G. O. — B காலனி, பெருமாள்புரம் — 627 007.
3420 க. பாபு, 2/102, கம்மாளத் தெரு, கீழ்கொடுங்காலூர் P. O. வந்தவாசி தாலுகா — 604 403.
3421 சுவர்ணா, 25, மேற்கு நஞ்சய தெரு, கரூர் — 639 001.
3422 M. S. வெங்கடரத்னம், 30, பெருமாள் கோவில் வீதி, கோபிசெட்டிப்பாளையம், — 638 452.
3423 A. ராமராஜ், 2/96, பாரதி ரோடு, மணியகாரம்பாளையம் (P. O.) கோயமுத்தூர் — 641 006.
3424 சி. பழனி, த/பெ. சின்னத்தம்பி, கோபிநாதம்பட்டி, மோட்டூர், சின்னங்குயம் அஞ்சல், அரூர் வட்டம், தருமபுரி மாவட்டம்.
3425 வி. ஜே. உஷா, 4/35, 7 வது தெரு (வடக்கு) தியாகராஜநகர், திருநெல்வேலி 627 011.
3426 V. Ravishankar, C — I, Navmonika Co-op Housing Society, Manipada Village Road, Kalina, Bomba — 400 098.
3427 சே. ரிச்சர்டு சுரேஷ், S/o. வ. செல்லப்பன், சத்தியா கார்டன், மணவாளக்குறிச்சி, கன்னியாகுமரி மாவட்டம்.
3428 S. லட்சுமி, நெ. 5, 2 வது கிராஸ் தெரு, அயனாவரம், சென்னை—600 023.
3430 K. உமா, D/o. S. கந்தசுவாமி, 28/72, மேற்கு சம்பந்தம் ரோடு, ஆர்.. எஸ். புரம், கோயம்புத்தூர் — 641 002.
3431 G. முருகேசன், S/o. R. கோவிந்தசாமி, மெய்யனூர், ஏரிக்காடு, சேலம் — 4:
3432 சே. சிவக்குமார், B. O. 6, தபால் தந்தி அலுவலர் குடியிருப்பு, சாயி பாபா மிஷன் போஸ்ட், கோயம்புத்தூர் — 11.
3433 சி. ஆர். ஆனந்தகுமார், 8/14, எஸ். ஆர். ஐயர் காலனி, திருச்சி சாலை, இராமநாத புரம், கோவை — 45.
3434 L. Akila, C/o. N. Lakshminarayanan, 'Sankalpa Nilayam', 17th Cross, Nanjangud, Mysore Dt.
3435 ரா. தினேஷ்குமார், 1/76, சன்னதி தெரு, கோளூர் — 602 101.
3436 L. Jayaraman. S/o. Laxman, Coconut, Potato, Onion Merchant, Dhaki Colony, Andheri Wes Bombay — 58.

(இன்னும் வரும்)


மகாபாரதத்தில் உள்ள நளோபாக்கியானம் என்ற பகுதிக் கதையை வெண்பா என்ற செய்யுள் வடிவில் தமிழில் அளித்தவர் புகழேந்தி.
புலவரே! 'வெண்பாவில் புகழேந்தி' என்ற சிறப்புப் பெயருக்கு நீரே தகுதியுடையவர்!
நளவெண்பா கூறும் கதை, கட்டழகும் வீரமும் மிக்க நிடத தேச அரசன் நளனை நாயகனாகக் கொண்டது. ஒரு நாள் பூஞ்சோலையில்...
அழகான அன்னம்! தெய்வப் பறவையோ?
தமயந்தி சுயம்வரம்
கதை: ஆனந்தி
படம்: வினு
அகப்பட்டுக் கொண்டாயா! நீ அரண்மனையில் செல்லமாய் வளரலாம்!
அரசே! சுதந்திரமின்றி அரண்மனையில் வாழ்ந்து தான் என்ன பயன்?
அடடே! அன்னம் பேசுகிறதே!
அரசே! என்னை விட்டு விடு! உனக்கு உதவுகிறேன்.


அன்னம் அரசனுக்கு உதவுவதா? வேடிக்கைதான்!
விதர்ப்ப நாட்டரசன் வீமனுடைய மகள் தமயந்தி. அழகிலும் கல்வியிலும் அவளுக்கு நிகர் யாருமில்லை...
தமயந்தியை அன்னம் வர்ணிக்க நளன் அவளிடம் காதல் கொண்டு...
அன்னமே! தமயந்தியிடம் எனக்காகத் தூது செல்வாயா?
அன்னம் விதர்ப்ப நாட்டை அடைந்தது. பூஞ்சோலையில் தமயந்தி விளையாட வந்தாள்.
அதோ! நட்சத்திரங்களுக்கு இடையில் சந்திரன் போல் மலர்களுக்கு இடையில் தமயந்தி!
அன்னமும் அரசனுக்கு உதவ முடியும் என்பது புரிகிறதா? இதோ போகிறேன்.
அன்னம் பூஞ்சோலையில் இறங்கியது...
இளவரசி! நான் தெய்வலோகப் பறவை. நிடத நாட்டரசனின் தூதன். நளமகாராஜன் உனக்கு மாலையிட ஆசைப்படுகிறான்.
நளனின் வீரத்தையும், அழகையும் அன்னம் வர்ணிக்க...
அன்னமே! என் மனமும் அவரையே அடைய விரும்புகிறது...


அன்னம் நளனிடம் தமயந்தியின் ஆர்வத்தைக் கூறிவிட்டு....
என் பணி முடிந்தது. சென்று வருகிறேன்.
அன்னமே என் நன்றியை வெளியிட வார்த்தைகள் இல்லை. நீ வாழ்க!
விதர்ப்ப நாட்டில்...
அரசே! நம் மகள் தமயந்தி மணப் பருவத்தை அடைந்து விட்டாள். அவளுக்குத் திருமணம் நடத்தி மகிழ வேண்டாமா?
சுயம் வரத்துக்கு ஏற்பாடு செய்தார் மன்னர். மக்களுக்குத் தெரிவித்தார்.
நம் இளவரசிக்கு ஏற்ற வரனைத் தேர்ந்தெடுக்க சுயம்வரம் நடக்கப் போகிறது....
பலதேசத்து அரசர்களுக்கும் சுயம் வரம் பற்றி செய்தி அனுப்பினர் அரசர்.
வீரர்களே! சுயம்வர ஓலைகள் பத்திரம். வழியில் கால தாமதம் செய்யாதீர்கள்!
செய்தி அறிந்த நாரதர் தேவலோகம் சென்று இந்திரனைச் சந்தித்தார்.
வரவேணும், வரவேணும்! செய்தி ஏதாவது உண்டா?
விசேஷம் இல்லாமல் வருவேனா?


இந்திரா! விதர்ப்ப நாட்டரசன் மகள் தமயந்திக்குச் சுயம்வரம். அவளைப்போன்ற அழகியை மூவுலகங்களிலும் காண முடியாது!
இந்திரா! நிடத நாட்டரசன் நளன் மகா வீரன். கட்டழகன். அவனை விட்டுவிட்டுத் தேவர்களில் ஒருவரைக்கூடத் தமயந்தி தேர்ந்தெடுப்பாள் என்று எனக்குத் தோன்றவில்லை! நான் போய் வருகிறேன்!
அப்படியா! அவ்வாறானால் நானும் சுயம்வரத்துக்குப் போகிறேன்!
இந்திரனுக்கு ரோசம் உண்டாயிற்று...
வருணா! அக்னி! யமா! நம்மைவிட நளன் உயர்ந்தவனாம்! நாரதர் கூறுகிறார்!
நளன்! – கேவலம் மானுடன்!
நாரதர் கூறியதைப் பொய்யாக்கத் தீர்மானித்து நாலு தேவர்களும் விதர்ப்ப நாட்டுக்கு மேலாக வந்தார்கள்...
அடேயப்பா! எத்தனை மன்னர்கள் வருகிறார்கள், சுயம்வரத்துக்கு!
அதோ ரதத்தில் நளன்!
நாலு தேவர்களும் ஒரு தந்திரம் செய்தார்கள். நளனை அணுகி...
எங்களுக்காக ஒரு சின்ன உதவி செய்ய வேணும்!
தேவர்கள் என் வணக்கத்துக்குரியவர்கள். எதைச் சொன்னாலும் செய்கிறேன்!



தமயந்தியை அடைய ஆசைப்பட்டு வந்தோம். எங்களில் ஒருவரையே தேர்ந்தெடுக்குமாறு நீ அவளுக்கு அறிவுரை கூற வேண்டும்.
மனம் கலங்கினான் நளன். ஆயினும் கொடுத்த வாக்கைக் காப்பாற்றத் துணிந்து...
அப்படியே செய்கிறேன். ஆனால் அந்தப்புரத்துக்குள் நான் எப்படிச் செல்ல முடியும்?
யாரும் பார்க்க முடியாமல் அருவமாக நடக்கும் வரம் தருகிறேன்!
நளன் அரண்மனைக்குள் நுழைந்து கன்னிமாடத்தை அடைந்தான். யாரும் தடுக்கவில்லை!
அட! என்ன யாருமே கவனிக்கவில்லையே! வரத்தின் மகிமை!
நந்தவனத்தில் தமயந்தியை நெருங்கிய நளன்...
இனி என் சுய உருவைக் காட்டலாம்.
கன்னிமாடத்தில் திடீரென்று ஓர் ஆண்மகனைக் காணத் தமயந்தி திடுக்கிட்டாள்.
நிடத தேசத்து அரசன் நளன் நான்.


அன்னத்தின் மூலம் நளனைப் பற்றி ஏற்கனவே அறிந்திருந்த தமயந்தி நாணினாள்.
தெரிகிறது...
தமயந்தி! தேவர் நால்வரின் தூதனாக வந்திருக்கிறேன். அவர்கள் சுயம் வரத்துக்கு வந்திருக்கிறார்கள்...
..அவர்களில் ஒருவருக்கே நீ மாலையிட வேண்டும். தேவ கன்னியர் உனக்குப் பணி விடை செய் வார்கள்.
சுவாமி! அன்னத்திடம் தூது அனுப்பியதையெல்லாம் மறந்து விட்டீர்களா? சுயம்வரத்தில் உங்களுக்கே மாலையிடுவேன்!
தேவர்களிடம் நளன் திரும்பினான்.
தூதில் தோல்வியுற்றேன். மன்னவர்களே
அப்படியானால் நாங்கள் வேறு தந்திரத்தைக் கையாள வேண்டியதுதான்!
சுயம் வர மண்டபத்தில் எல்லா தேசத்து அரசர்களும் கூடியிருக்க, நான்கு தேவர்களும் நளனைப் போலவே உருவெடுத்து அமர்ந்திருந் தார்கள்.



மண மாலையுடன் தமயந்தி வந்தாள்...
இவர் சோழ மன்னர். இவர் கலிங்கத்து அரசர். இவர் கேகய வேந்தர். இவர் நிடத நாட்டு....
ஐந்து நளன்களைக் கண்டதும் அறிமுகம் செய்து வந்த தோழி திகைத்தாள். ஆனால் தமயந்தி......
கண்கள் இமையாமலும் மாலைகள் வாடாமலும் இருக்கும் தேவர்களின் அடையாளம் கண்டு கொள்வது கஷ்டமா? ஏமாற மாட்டேன்.
தமயந்தி நளனுக்கே மாலையிட்டாள்.
நாலு தேவர்களும் ஏமாற்றத்துடன் திரும்ப எதிரே கலி புருடன் வந்தான்.
கலியே எங்கே...? போகிறீர். சுயம்வரம் தான் முடிந்து விட்டதே!
நீர் நேரத்தோடு வந்திருந்தாலும் எங்களைப் போல்தான் ஏமாந்து திரும்பியிருப்பீர்!
அப்படியா சமாச்சாரம்! நளனை நான் என்ன செய்கிறேன் பாருங்கள்....!



பன்னிரண்டு ஆண்டுகள் நளனும் தமயந்தியும் இன்பமாய் வாழ்ந்தார்கள். அரசாள ஒரு மகனும்...
அரசுக்கு ஒரு மகளும் பிறக்க, மகிழ்ச்சி பொங்கியது.
கலி புருஷன் நளனை விடாமல் கண்காணித்து வந்தான். ஆனால் நளன் எந்த குற்றமும் செய்யாததால் அவனைப் பிடித்து ஆட்டி வைக்க அவனால் முடியவில்லை.
ஒரு நாள் நளன் கால்களைச் சரியாக அலம்பாமல் சந்தியாவந்தனம் செய்தான்.
இத்தனை நாள் காத்திருந்த சந்தர்ப்பம் கிடைத்தது. இனி நளனை தொலைந்தான்!
நளனுடைய சகோதரன் புட்கரனை அடைந்தான் கலி.
உனக்கு நான் உதவுகிறேன். நளனுடைய நாடு நகரங்களை நீ கைப்பற்றி ஆளலாம்!
நளனுடைய சபைக்கு வந்தான் புட்கரன்.
தம்பி! உன்னைப் பார்த்து நாளாயிற்றே என்று ஆசைப்பட்டு வந்தேன்.
இதென்ன கையில் கொடி?


இதுவா? இது, பகடை யாட்டத்தில் என்னை வெல்ல முடியாது என்பதற்கு அடையாளம்!
ஹ... நான் கூடத்தான் பகடை உருட்டுவதில் தேர்ச்சி பெற்றவன்!
மந்திரிகள் நளனிடம் வந்து...
அரசே! சூதாட்டம் தர்மமல்ல. அதனால் கேடுகளே விளையும்.
ஆடுவதாகக் கூறிவிட்டேன். இனி பின்வாங்குவது கோழைத்தனம்.
சூதாட்டம் தொடங்க...
நான் என் எருதைப் பணயம் வைக்கிறேன்.
நான் என் நவரத்தின மாலையை வைத்து ஆடுகிறேன்.
ஜெயித்தேன்! அடுத்த பணயம் வை!
இந்த அரண்மனையை வைத்தேன்!
நாடு நகரங்கள் உள்பட அனைத்தையும் படிப்படியாகச் சூதாட்டத்தில் இழந்தான் நளன்.
இனி இந்த நாட்டில் உங்களுக்கு இடமில்லை. கிளம்புங்கள்!



நிடத நாட்டை விட்டுச் சென்ற நளன் - தமயந்தியும் குழந்தைகள் இருவரும் களைப்பாற...
நமக்கே கால்கள் கெஞ்சுகின்றன. இந்தக் குழந்தைகளை ஏன் வதைக்க வேண்டும்? தமயந்தி! குழந்தைகளுடன் நீ உன் தந்தையிடம் போய் விடு!
உங்களைப் பிரிய மாட்டேன்.
ஓர் அந்தணர் எதிர்ப்பட்டார்...
ஐயா, இந்தக் குழந்தைகளை விதர்ப்ப தேசத்தில் வீமராஜனிடம் ஒப்படையுங்கள்.
பத்திரமாகக் கொண்டு சேர்க்கிறேன்.
இருவரும் காட்டில் அலைந்து திரிந்தார்கள். கலிபுருடன் பொன்னிறப் பறவையாக அங்கு தோன்றினான்.
என்ன அழகு! பொலிவு!
இந்த ஆடையை வீசிப் பிடித்து விடுகிறேன் பார்!
பறவை ஆடையுடன் பறந்து விட...
ஐயோ! என் இடுப்புத் துணி போச்சே!
அன்பே! என் புடவைத் தலைப்பு நீளமானது. சுற்றிக் கொள்ளுங்கள்.
நளன் அவ்வாறே செய்ய...
நாம் இணை பிரியாமலிருக்கவேண்டும் என்பதற்காக விதி விளையாடியிருக்கிறது!


அன்றிரவு இருவரும் ஒரு பாழடைந்த மண்டபத்தில் படுத்தனர். அசதியில் தமயந்தி தூங்கி விட்டாள்...
இந்த அவமானத்தைத் தாங்க முடியவில்லை. என்னோடு சேர்ந்து இவளும் ஏன் கஷ்டப் பட வேண்டும்?
அப்போது கலி அங்கு ஓர் கத்தியாகக் கிடந்தான்...
இவளை விட்டு விட்டுப் போய் விடுகிறேன். தன் தந்தையிடம் போய் சிரமப் படாமல் வாழட்டும்.
விழித்தெழுந்த தமயந்தி நடந்ததை ஊகித்து வருந்தினள். வழிப்போக்கர்களிடம்...
ஐயா! விதர்ப்ப நாட்டுக்குத் தானே போகிறீர்கள்? என்னையும் அழைத்துப் போங்கள். என் தந்தை சன்மானம் அளிப்பார்.
புடவைத் தலைப்பை வெட்டிக் கொண்டு பிரிந்து சென்ற நளன் காட்டுத் தீயைக் கண்டான்...
அரசே! என்னைக் காப்பாற்று!
ஆ! தீனக் குரல்!
தேவர்கள் கொடுத்த வரம் காரணமாக நளனைத் தீ சுடாது. எனவே...
அட! தீயில் சிக்கி அபயக் குரல் எழுப்புவது இந்தப் பாம்பா!
பாம்பைக் காப்பாற்றி எடுத்து வந்தான் நளன்... ஆனால்...
ஐயோ! என்னைக் கடித்து விட்டாயே! உனக்கு நன்றியே கிடையாதா?


பாம்பின் விஷத்தால் உனதுடைய உருவம் கறுத்து...
நான் கார்க்கோடகன். உனக்கு நன்மையே செய்தேன். விஷத்தால் விகாரமாகி விட்டாய்...
அயோத்திக்குப் போ. ருதுபர்ண மன்னனிடம் தேரோட்டியாக இரு. வாகுகன் என்ற பெயர் சூடிக்கொள்!
இந்தா இரு ஆடைகள்; இவற்றை அணிந்தால் உன் பழைய உருவம் வரும்.
நாகராஜனே! நன்றி!
விதர்ப்ப நாட்டில் தந்தையைச் சென்றடைந்த தமயந்தி கணவனைக் கண்டு பிடிக்கக் கருதி...
அந்தணரே! ஊர் ஊராகப் போய் என் கணவரைத் தேடுங்கள். அங்கங்கே நான் கூறும் ஒரு வாசகத்தைச் சொல்லிப் பாருங்கள்...
சுதேவன் என்ற அந்த அந்தணன் பல நாடு நகரங்களுக்குச் சென்று...
காரிருளில் கானகத்தில் காதலியைக் கைவிட்டு...
யாரோ பைத்தியம்!
அயோத்தியை அடைந்தான் சுதேவன்...
காரிருளில் கானகத்தில் காதலியைக் கைவிட்டுப் போனது வேந்தர்க்குப் போதுமோ?


அந்தணன் பாடியது, ஆற்றங் கரையில் தேர்களைக் கழுவிக் குதிரைகளைக் குளிப்பாட்டிக் கொண்டிருந்த தேரோட்டி வாகுகன் காதில் விழ...
உறங்குங்கால் அப்பெண்ணை அரசன் விடுத்து நீங்கியமை பழவினைப் பயனால் ஆகும்.
சுதேவன் தமயந்தியிடம் திரும்பி வந்து...
அரசி, தங்கள் வாசகத்துக்கு ஒருவர் மட்டும் பதில் அளித்தார். ஆனால் அவர் பார்க்க விகாரமாக இருந்தார்.
இந்தப் பதிலை என் கணவரைத் தவிர வேறு யாரும் கூறியிருக்க முடியாது!
நளனை வரவழைக்க தமயந்தி ஒரு யுக்தி செய்தாள்.
அமைச்சரே! அயோத்திக்குச் சில தூதர்களை அனுப்புங்கள்; தமயந்திக்கு மறுபடி சுயம்வரம் என்ற செய்தியை அங்கு பரவச் செய்யுங்கள்!
செய்தி கேட்ட ருதுபர்ண மகாராஜன் உடனே புறப்பட்டான். ரதசாரதி நளனிடம்...
வாகுகா! சீக்கிரம்! விதர்ப்பநாட்டின் தலைநகரை இன்றிரவே போய்ச் சேர்ந்து விட வேண்டும்!


குதிரைகளை விரட்டிய நளன்...
அப்படி என்ன அவசரம் அரசே?
தமயந்திக்கு நாளை சுயம்வரம். இந்தத் தடவையாவது அவளை நான் அடைய வேண்டும்!
நளன் குதிரைகளின் வேகத்தை அதிகரித்தான்.
தமயந்தி என்னை வரச் செய்வதற்காகவே இந்தத் தந்திரத்தைக் கையாண்டிருக்கிறாள்.
அப்போது ருதுபர்ணனின் மேலாடை காற்றில் பறந்து போனது....
வாகுகா! ரதத்தை உடனே நிறுத்து!
கட்டளை பிறக்கு முன்னரே தேர் பத்து காத தூரம் சென்று விட்டது! ருதுபர்ணன் அதிசயித்தான்.
அடேயப்பா! என்ன வேகம்! வாகுகா! நீ எனக்குத் தேரோட்டக் கற்றுக்கொடுத்தால் எனக்குத் தெரிந்த கணித வித்தையை உனக்குச் சொல்லித் தருவேன்!
இருவரும் ஒருவருக்கொருவர் வித்தைகளைக் கற்பித்தபோது நளனைப் பிடித்திருந்த கலி விலகினான்.
உயர்ந்த குணங்கள் இருக்குமிடத்தில் என்னுடைய குறும்புகள் பலிக்காது!


தலைநகரில் சுயம்வரத்துக்கான ஏற்பாடு ஒன்றையும் காணாததால் ஏற்பட்ட ஏமாற்றத்தை ஒளித்துக் கொண்டான் ருதுபர்ணன். தமயந்தியின் தந்தை வீமன் வரவேற்க...
என்ன திடீர் விஜயம்?
தங்களைக் காணும் ஆவல்தான்!
வாகுகன் தன் அரசனுக்குச் சமைக்கத் தொடங்கினான். அப்போது அவன் மகனும் மகளும் அங்கு வர...
குழந்தைகளே! உங்கள் தந்தை யார்?
நிடத நாட்டரசன் நளன்!
எங்கள் அம்மா தமயந்தி.
பாசத்தை அடக்க முடியாமல் குழந்தைகளை அள்ளி அணைத்துக் கொண்டான் நளன்.
உங்கள் நாட்டை வேறு யாரோ ஆள்கிறார்களாம்! நளன் ஏமாந்துபோனானாமே!
எங்கள் தந்தை சத்தியத்தைக் கைவிடாதவர்.
உனக்கென்ன தெரியும் அவர் பெருமை!
நடந்தவற்றை அறிந்த தமயந்தி தந்தையிடம் சென்று....
அப்பா! அயோத்தி அரசர் ருதுபர்ணனின் தேரோட்டியாக வந்திருப்பவர் என் கணவர்தான்!
என்ன!
வீமன் தேரோட்டியை அழைத்து...
வாகுகா! நீ யார்? உண்மையைச் சொல்!



நளன் நாகராஜன் கார்க்கோடகன் தந்திருந்த திவ்ய ஆடையைத் தோளிலிருந்து எடுத்து அணிய...
ஆ! நளன்! தமயந்தி ஊகித்தது சரிதான்!
சுய உருவம் பெற்ற நளனை தமயந்தி ஓடி வந்து நமஸ்கரித்து எழ...
அப்பா!
பிரபோ!
நளன் புட்கரனை வென்று நாட்டு நகரங்களைத் திரும்பப் பெற்றான்...
சகோதரா! கலிபுருடன் சொல்லைக் கேட்டு உனக்குத் தீங்கு இழைத்து விட்டேன். என்னை மன்னித்து விட்டு விடு!
நளனும் தமயந்தியும் இளவரசன் இளவரசியுடன் பட்டணப் பிரவேசம் செய்தனர்.
நள மகாராஜா வாழ்க! வாழ்க! வாழ்க!

5
கழுகுக்கும் கழுகுக்கும் கடுமையான போர்!



"ஆந்தைகள் அலறுகின்றன!" என்றான் வால்மீகி.

"வந்து... நாம்..." பீமன் என்னவோ சொல்லுவதற்குள் —

'க்வாக்...! க்வாக்...!' என்கிற மெல்லிய கூவல், தலைக்குமேல் தவழ்ந்ததைக் கேட்டவுடன், பீமனும், வால்மீகியும் நிமிர்ந்து பார்த்தார்கள்.

வானவெளியிலே —

வீசியெறிந்த மல்லிகைச் சரம் போல —

வரிசை குலையாமல் பறந்து, போயின, கொக்குகள்.

'சரசரசர...'

கோரைப் புல்வெளியிலிருந்து எழும்பும் சப்தத்தைப் பீமன் கவனிக்கவில்லை. அவன் கொக்குச் சரம் தவழ்ந்து போகும் அழகையே ரசித்துக்கொண்டிருந்தான்.

ஆனால் —

வால்மீகி, இருளை ஊடுருவிக் கவனித்தான்.

சற்றுத் தூரத்திலே —

ஆட்டுக் குட்டியோ...?

பசுங்கன்றோ...?

ஏதோ ஒன்றைக் கவ்வியிழுத்துச் சென்றன, ஓநாய்கள்!

இதைக் கண்ட நொடியில் —

கொக்குகளைப் பார்த்துக் கொண்டிருக்கிற பீமனின் விலாப்புறத்தில் ஜாடையாகச் சீண்டினான் வால்மீகி. பீமன் பார்த்தான். 'பரபரப்படைந்தான். "ஓநாய்கள் இழுத்துப் போவது ஆடா, மாடா...?" என்று மெல்லிய குரலில் கிசுகிசுத்தான்.

அடுத்த நொடி —

'தபக்... தபக்... தபக்...' ஒரு கூட்டமோ, கும்பலோ, திரண்டோடி வருகிற மாதிரி, பூமி சிலிர்க்கக் கிளம்புகிற சப்தத்தைக் கேட்ட நொடியே —

ஏதோ ஒரு பிராணியின் ஜடத்தைக் கவ்வியிழுத்துச் சென்ற ஓநாய்கள், திடுக்கிட்டு நின்று நிமிர்ந்து பார்த்தன., தம்மை நோக்கி ஆக்ரோஷத்துடன் திரண்டு புரண்டு பாய்ந்தோடி

வரும் ஏழெட்டுக் கழுதைப் புலிகளைப் பார்த்தன... பார்த்த நொடியே —

பருந்தைப் பார்த்த பாம்பைப் போல —

பாம்பைப் பார்த்த எலியைப் போல —

திகிலும் திணறலுமாகத் துள்ளித் தாவியோடும் ஓநாய்களைக் கோபா வேசத்துடன் விரட்டிச் சென்றன, கழுதைப் புலிகள்...!

வால்மீகி, பெருமூச்செறிந்து விட்டுக் குறுஞ்சிரிப்புடன் கேட்டான். "எப்படி இருக்கிறது, போராட்டம்?"

"ஹூம்...! நாட்டுக்குள்ளேதான் கால் வயிற்றுக் கஞ்சிக்காகப் போராட்டம் என்றால், அது இந்தக் காட்டுக்குள்ளேயும் நடக்கிறது!" என்று சொன்னான் பீமன்.

அவன் சொல்லி முடித்தவுடனே —

இருளோடு இருளாகச் சர்ர்...ர்ரெனப் பறந்து வந்த ஒரு பெரிய கழுகும், ஒரு சின்னக் கழுகும், எடுப்பாரும் இல்லாமல், கடித்துக் குதறுவாரும் இல்லாமல் புல்வெளியில் கிடக்கிற ஜடத்தை அணுகி, உட்கார்ந்தன. பார்த்தன. ஜடத்தை ஒரு கொத்துக் கொத்திச் சதையைக் கவ்வியிழுத்து விழுங்கின. அடுத்த நொடியே,





அந்தச் சின்னஞ்சிறு காட்டுப் பன்றியின் ஜடத்தைத் தனது கொடிய கால்களால் கவ்வி இறுகப் பற்றிக் கொண்டு, இறக்கைகளைச் சிலிர்த்து வீசிக் குப்பென மேலெழும்பிப் பறந்தது, பெரிய மலைக் கழுகு. அதைத் தொடர்ந்து பறந்து போயிற்று, அதனுடன் வந்த சிறு கழுகு.

இதைக் கண்டதும் —

"ச்சே...! ஒரு பன்றிக் குட்டிக்காக ஓநாய்களும், கழுதைப் புலிகளும் போராடிக் கொண்டிருக்கையில், மூன்றாவதாக வந்த மலைக் கழுகுகள் பன்றிக் குட்டியை அபகரித்துச் சென்றது அநியாயம்!" என்றான் வால்மீகி.

பீமன், என்னவோ யோசனையுடன் சொன்னான்: 'ஏய்! யாரது...? என்று அதட்டிக் கேட்பதற்குக் காவலாளி இல்லாத பழத் தோப்பும், ஏய், ஹேய்! அப்படிப் போ! இப்படி வா!' என்று அடக்கி ஒடுக்கி மேய்ப்பதற்கு இடையன் இல்லாத மந்தையும் சிதைந்து, சீரழிந்து போகும்!' என்று என் தாத்தா சொல்லுவார். அந்த மாதிரி... இந்தப் பயங்கரக் காட்டிலே, கேட்பாரும் இல்லை, மேய்ப்பாரும் இல்லை. காட்டில் எல்லாம், அதனதன் விருப்பத்திற்கு அலைகின்றன. திரிகின்றன. சிறியவைகளைப் பெரியவைகள் வதைக்கின்றன. எளியவைகளை வலியவைகள் கொல்லுகின்றன. சுதந்திரமாக..."

வால்மீகி நீண்ட கொட்டாவியை விட்டபிறகு, தூக்கக் கனலால் வறண்டு கரகரக்கிற குரலில், "டேய் பீமா... வீராயியையும், ஆதியையும் எழுப்பி விட்டுத் தூங்கு..." எனச் சொல்லிய படியே, தூங்கிக் கொண்டிருக்கிற நாகனுக்குப் பக்கத்தில் மல்லாந்து படுத்துக் கொண்டான்.

"ஹூம்! இந்தக் கொடூரமான இருளில், இன்னும் என்னென்ன கொடிய நிகழ்ச்சிகள் நடக்குமோ!" என்று ஆயாசப் பெருமூச்சுடன் திரும்பினான். ஆதியின் தலைப்புறத்தில் சுருண்டு முடங்கிக் கிடக்கும் வீராயியை எழுப்பினான் பீமன்.

. கால்களை நீட்டிக் கைகளைத் தலைக்கு மேல் தூக்கி, உடலை நெளித்து வளைத்துச் சோம்பல் முறித்துக் கொண்டு எழுந்தாள்,. சுற்றிச் சூழக் கவ்விக்

கனத்திருக்கும்காரிருளைப்பார்த்தாள். 'அம்மையம்மா...! அமாவாசை அந்தகாரம்மாதிரி கண்ணை உறுத்தும்இந்தப் பாழும் இருளில்...'' என்று திணறிய வீராயி கேட்டாள். ''ஏண்டா, பீமா வானத்தில் நிலாவையே காணுமே?'

பதிலைக் காணும்.

வீராயி கவனித்தாள்.

பீமன் தூங்கி விட்டிருந்தான்!

° ° °

கிழக்கு வெளுத்தது.

சரசரவெனப் பொழிகிற பனியும், குளுகுளுவெனத் தவழும் மெல்லிய காற்றும் கலந்து குழைந்து, ஜிலுஜிலுவெனத் தழைத்துப் பரவியது.

வானவெளியில் பலவகையான பறவைகள், கிறீச்சிட்டுக்கூவிப்பறந்து உலாவின.

சிக்கிமுக்கிக் கல் பாறையில் அயர்ந்து தூங்கிக் கொண்டிருக்கிறவர்களுள், தூக்கம் கலைந்து எழுந்தான், ஆதி. பார்த்தான். ''அட! பொழுது விடிந்து போயிற்றே...!'' என்று வியப்புடன் முனகியபடியே சுற்றும் முற்றும் கவனித்தான். ஆளரவம் கேட்டதும் வளையமாய்ச் சுருண்டு கொள்கிற மலை எலியைப் போல, காட்டுக்குளிரைத்தாங்காமல்கைகளை மடக்கித் தலையை மூடிச் சுருண்டு முடங்கித் தூங்குகிற வீராயியைப் பார்த்தான். ''ஏய், வீராயி...! இராத்திரி காவலுக்கு என்னை எழுப்பவில்லையே...! ஏய், வீராயி!...'' என்று கூவினான். அவளின் கைகளைப் பிடித்து உலுப்பினான். அவனது கூவலைக் கேட்டு, வீராயி மட்டும் அல்ல —

நாகன்,

பீமன்,

வால்மீகி,

எல்லோரும்தூக்கம் கலைந்து விழித்தார்கள்; எழுந்தார்கள்; பார்த்தார்கள். ''ஓ...! பொழுது விடிந்து போயிற்றே! உம்,ம்... புறப்படுங்கள்! புறப்படுங்கள்...!'' எனப் பதைத்தான் பீமன். கயிற்றுச் சுருணையை ஒழுங்குபடுத்தித் தோளில் மாட்டிக் கொண்டான். தடியை எடுத்துக் கொண்டு, பாறையின் ஓரமாக வந்தான். தாவினான். பாறையிலிருந்து புல் தரையில் குதித்துத் துள்ளி எழுந்த அவன் ''ம்... வாருங்கள்...!' என்று அவசரப்படுத்தினான்.

வெயில் துளிர்த்தது.

துள்ளிப் பாயும் மான்களைப் போல—

எம்பித் தாவும் குரங்குகளைப் போல —

எல்லோரும் பாறையிலிருந்து துள்ளிப் பாய்ந்து தாவிக் குதித்து நடந்தார்கள். இரண்டு, இரண்டரை கிலோ மீட்டர் தூரத்திலே காணும் அக்கினி மலையைப் பார்த்தவாறே நடந்தார்கள்.

''காலை வெயிலில், அக்கினி மலையும், அதன் பாறைகளும் ரொம்பத் தெளிவாகத் தெரிகின்றன...'' என்றான், நாகன்.

''அதாவது... அக்கினி மலையை, ரொம்ப நெருங்கி, நெருங்கிப் போய்க் கொண்டிருக்கிறோம்...'' என்றான், பீமன்.

''அதாவது... இன்னும் கொஞ்ச நேரத்திற்குள், அக்கினி மலைக்குப் போய், ஊர் ஜனங்களைச் சும்மாவாவது திகிலூட்டிக் கொண்டிருக்கிற அக்கினி பூதத்தைப் பார்த்துவிடுவோம்...!'' என்றான், வால்மீகி.

என்னவோ ஓர் உற்சாகம்!

ஏதோ ஒரு தெம்பு!

எல்லோரும் விறுவிறுப்பும் சுறுசுறுப்புமாக நடந்து கொண்டிருக்கையில், நெஞ்சை உறுத்துகிற ஏதோ ஒரு குறுகுறுப்புடன், வீராயியைப் பார்த்தான் ஆதி. ''வீராயி... இராத்திரிக் காவலுக்கு, ஏன் எழுப்பவில்லை...?'' என்று வினவினான்.

''ஆமாம், எழுப்பவில்லை...'' என்றாள், வீராயி.

''நான் உன்னை எழுப்பி விட்டேனே... நீ ஆதியை எழுப்பிவிடவில்லையா...?'' எனக் கேட்டான், பீமன்.

''ஒருவேளை... இவள் தூங்கிவிட்டாளோ,என்னவோ...?'' என்றுகுறும்பாகச் சொன்னான், ஆதி.

''இல்லை!நான்தூங்கவில்லை.விழித்துக் கொண்டுதான் இருந்தேன். ஆனால்... கொஞ்ச நேரத்திற்குப் பிறகு... கப்பிக் கவிந்திருக்கிற இருளோடு, இருளாக, ஆறேழு அடி உயரமுள்ள ஒரு பெரிய உருவம், மெல்ல

மெல்ல ஆடி அசைந்தபடியே வந்தது. நான், எச்சரிக்கையுடன் தடியை வைத்துக்கொண்டு, கம்மென்று இருந்தேன்.

அப்புறம்... அந்தக் கரிய உருவம் அருகில் வந்ததும், கூர்ந்து பார்த்தால், அது ஒரு கரடி! நன்கு கொழுத்து வளர்ந்திருக்கிற பெரிய கரடி! அது, உர் உர்ரென்று உறுமிக் கொண்டே பாறையை நெருங்கியது. எம்பி நின்று, முகத்தை நிமிர்த்திப் பாறையிலிருக்கும் நம்மையெல்லாம் ஒரு நோட்டம் பார்த்தது. அதற்கப்புறம்... பாறையைச் சுற்றி வந்...'' வீராயி, மேலும் சொல்லுவதற்குள் —

''டேய், டேய்...! இங்கே பாருங்களேன்...!'' எனக் கூவினான், நாகன். எல்லோரும் நாகனை அணுகினார்கள். அவன் காட்டிய மணற்பாங்கான பூமியில், தண்ணீர் சுரந்து பொங்கிப் பொங்கி மணலுக்குள் பம்மிக்கொண்டிருந்தது.

அதைக் கண்டதும் —

''பூமிக்குக் கீழே நீரோட்டமுள்ள இடத்தில்தான், இப்படித் தண்ணீர் சுரக்கும்...'' என்றான், வால்மீகி.

ஆதி, என்னவோ யோசனையுடன் போனான். தண்ணீர் சுரக்கும் மணல் பூமியைத் தடியில் குத்திக் கிளறிப் பள்ளம் பறித்தான்.

தண்ணீர் குபுகுபுத்தது!

தண்ணீரைக் கண்டதும் —

வெயிலைக் கண்ட பூப்போல —

உள்ளம் மலர்ந்தது.

எல்லோரும்சேர்ந்துதடியால்குத்தி, அரிவாளால் கிளறிப் பள்ளத்தைப் பெரிதாகத் தோண்டினார்கள். கசிந்து பொங்கித் தேங்கித் தளும்புகிற தண்ணீரில் கை, கால், முகமெல்லாம் அலம்பிக் கொண்டு, பளீரெனப் பிரகாசிக்கிற சூரியனைப் பார்த்துக் கும்பிட்டார்கள். பிறகு, அக்கினி மலையை நோக்கிப் பயணத்தைத் தொடர்ந்



தார்கள். மரம், செடி, கொடி, புல், பூண்டு, கல், கரடு யாவையும் கடந்து, பரந்து விரிந்திருக்கிற மணற்பாங்கான பூமியில் நடந்தார்கள். ரொம்பத் துரிதமாக நடந்தார்கள்.

"இதென்ன பாலைவனமா...?" என்றாள், வீராயி.

"சுற்றிச் சூழக் காடுகளாக நிறைந்திருக்கும்போது, பாலைவனம் எப்படித் தோன்றும்...?" என்றான், ஆதி.

"இது பாலைவனம் அல்ல, காட்டைச் சார்ந்திருக்கிற மணல்காடு..." என்று சொன்னான், பீமன்.

"இங்கே... ஏதோ ஒரு காலத்தில்... பிரும்மாண்டமான ஏரி ஒன்று இருந்து, அது காலக் கோளாறுகளால் நீர் வற்றி வறண்டு, இப்போது வெறும் மணல் வெளியாய்ப் போயிருக்கிறது..." என்று பெரிய ஆராய்ச்சியாளனைப் போல் கூறினான், ஆதி.

"ஆமாம், அப்படித்தான்..." ஏதோ சொல்ல முனைந்து, சொல்லாமல் நிறுத்திக் கொண்டாள். சட்டென்று நின்றாள். சற்றுத் தூரத்திலுள்ள மணல் சரிவான பள்ளத்தாக்கைப் பார்த்தவாறே, "அதோ... அங்கே பாருங்கள்..." என்றாள், வீராயி.

எல்லோரும் பார்த்தார்கள்.


அங்கே —

அந்தப் பள்ளத்தாக்கில் —

கொழுத்துப் பருத்துக் கிடக்கும் ஒரு பெரிய காட்டெருதுவின் ஜடத்தை ஓரிரண்டு மலைக் கழுகுகளும், நாலைந்து நரிகளுமாய்ச் சூழ்ந்து கொண்டு கடித்துக் குதறிப் பிய்த்துப் பிடுங்கிச் சிதைத்து விழுங்குகிற கோரத்தைப் பார்த்ததும் —

"இந்த அசிங்கத்தை எதற்காகப் பார்ப்பது,...?ம், வாருங்கள்..." எரிச்சலுடன் காறித் துப்பிய ஆதி, முன்





மிகச் சிறிய புத்தகம்!

உலகிலேயே மிகச் சிறிய புத்தகம் ஜப்பானில் இருக்கிறது. 2 சதுர மில்லி மீட்டர் அளவே உள்ளது. (ஒருகோதுமைத் தானியம் போல) அதில் எழுதியிருப்பதைப் படிக்க வேண்டுமானால், பூதக் கண்ணாடியின் உதவி தேவை.

நடந்தான். மற்றவர்கள், அவனைத் தொடர்ந்தார்கள். பள்ளமும் மேடுமாய்க் காணும் மணல் வெளியிலே, மணலில் கால்கள் புதையப் புதையச் சரக், புரக்கென்று நடந்தார்கள். மூசு மூசு என்று மூச்சு முட்டித் திணற நடந்து கொண்டிருந்தார்கள்.

நாலைந்து நிமிஷங்களுக்குப் பிறகு—

கண்ணுக்கெட்டிய தொலைவில் தெரியும் அக்கினி மலைச்சாரலையொட்டிய கரடு முரடான பிரதேசத்தைக் கவனித்தபடியே, கால் வலியைப் பொருட்படுத்தாமல் மணல் காட்டைக் கடந்து போகும் சமயத்தில் —

✦ ✦ ✦

''சர்க், சர்க், சர்க்...''

தங்களுக்குப் பின்பக்கமிருந்து எழும் சப்தத்தைக் கேட்டதும், எல்லோரும் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தார்கள்.

என்னவோ ஒருவெறியும்,வேட்கையுமாகப் பல்லை இளித்துக் கொண்டு பாய்ந்தோடி வரும் நாலைந்து நரிகளைப் பார்த்ததும் —

திகீரென்றது!

''டேய்! டேய்! அந்தப் பாழும் நரிகள் நம்மைத்தான் வேட்டையாடப் பாய்ந்தோடி வருகின்றன...!'' என்று திகிலுடன் அலறினான், நாகன்.

''ஓடி வாருங்கள்! ஓடி வாருங்கள்...!'' பின்வாங்கிய வால்மீகி, முன்னே விரைந்தோட, அவனைத் தொடர்ந்து எல்லோரும் ஓடினார்கள்.

''கைத்தடியால் துரத்தி வரும் நரிகளை மண்டையைப் பிளக்காமல்... பயந்து ஓடுகிறீர்களே...!'' என்று ஆத்திரமாய்க் கூவியபடியே ஓடினான் பீமன்.

நாலைந்து விநாடிகளில் —

மணல் காட்டைக் கடந்து ஓடினார்கள். அக்கினி மலை அடிவாரத்தைச் சுற்றிக் கொண்டு பாயும் ஒரு சிற்றாற்றின் கரையில் நின்றார்கள். செம்மண்ணும், செடியும் கொடியும், கொத்துக் கொத்தாகக் கோரைப் புற்களும், கூழாங்கற்களும், சரளைக் கற்களுமாய்ச்செருமிப்பரந்திருக்கிறமேட்டுப் பாங்கான இடத்தில் நின்றார்கள். பார்த்தார்கள்.

ஒரு தென்னங்கிடைத் தூரத்தில்—

துரத்தி வந்த நரிகள், அங்கும் இங்குமாக நின்று, கோரைப் பற்களை இளித்துக் காட்டி வெறித்தனமாக உறுமின!

''மண்டையைப் பிளக்கட்டுமா..?'' என்றவாறே கைத்தடியைத் தலைக்கு மேல் தூக்கி ஓங்கினான், பீமன்.

''கண்டதைத் தின்று கொழுத்த இந்தக் கழிசடைகளைக் காலை முறிக்கட்டுமா...?'' எனக் கைத்தடியைச் சுழற்றியவாறே கிறீச்சிட்டாள், வீராயி.

''தடிகளைக் கீழே வையுங்கள்... கால்களுக்கு அடியில் காணும் கற்களை எடுத்துச் சரமாரியாக வீசுங்கள்...!'' என்றான், வால்மீகி.

மறுநொடியே —

பையப் பைய நெருங்கி வரும் நரிகளை நோக்கிக் கூழாங்கற்களும், சரளைக் கற்களுமாய்க் கலந்த கல் புயல் வீசியது!

அந்தத் திடீர்க் கல் மழை வீச்சில் —

காலிலும், மண்டையிலும் அடிபட்டுத் துடித்து, துள்ளித் தாவி, விழுந்து எழுந்து, 'ஊய்ய்ங்...! ஊய்ங்...!' என ஊளையிட்டவாறே ஓடிய நரிகள்...

அடுத்த நொடி —

தாழப் பறந்து வந்த ஒரு மலைக் கழுகு, பாய்ந்தோடும் நரிகளை நோக்கி, விச்சாகத் தாவி, கால்களுக்குச் சிக்கிய ஒரு குட்டி நரியைக் கவ்வி இறுக்கிக் கொண்டு, மேலேறிப் பறந்தது!

எல்லோருக்கும் வியப்பும், விதிர்ப்பும் வியர்வையாய்த் துளிர்த்தது! அக்கினி மலை உச்சியை நோக்கிப் பறந்து போகும் கழுகையும், அதன் கொடிய கால்களில் சிக்கித் துடித்துத் தவிக்கும் அண்ணாந்து பார்த்துக் கொண்டிருக்கும்போதே —

கழுகின் இறுகிய பிடியிலிருந்து, எப்படியோ துள்ளித்துடித்துவிடுபட்ட நரி, வானவெளியில் தலைகீழாக உருண்டு புரண்டு சுருண்டு வந்து, மலையடிவாரத்தில் வளைந்து நெளிந்து பாயும் சிற்றாற்றில், 'தொபீர்...!' என விழுந்தது!

திடீரென்று —

உடலை நீருக்குள்ளும், தலையைக் கரையிலுமாக வைத்துப் படுத்திருக்கிற ரணவாய் முதலை துள்ளியது! தாவியது! ஆழநீரில் விழுந்து தவிக்கிற நரியைநோக்கிப்பாய்ந்தது! கவ்வியது! கடித்துக் குதறியவாறே, நீருக்குள் மூழ்கி மறைந்தது...!

''அடப்பாவமே...!'' எனக் கூவினாள் வீராயி.

''பாவமாவது! புண்ணியமாவது! இந்தப் பயங்கர வனாந்தரத்திலே, எது எது, எதை எதைத் தின்னும், தின்னாது என்று சொல்ல முடியாது! கண்டது கண்டதைக் கடிக்கும்! கிழிக்கும்! கொல்லும்! கழுதைப் புலிகள் கரடியைக் கொல்லும்! கட்டெறும்புகள் காட்டெருதைத் தின்னும்...!'' என்று வெறுப்பும், எரிச்சலுமாகச் சொன்னான், வால்மீகி.

''ஹூம்! அரசனில்லாத நாடும், அப்பன் இல்லாத வீடும் அதோகதி! என்பார்கள். அந்த மாதிரி, இந்த அதி பயங்கரக் காட்டிலே ராஜாவும் கிடையாது. கூஜாவும்கிடையாது! மந்திரியும் கிடையாது. மண்ணாங்கட்டியும் கிடையாது! அப்புறம் என்ன....? அதட்டிக் கேட்பதற்கு அண்ணன் இல்லையென்றால், அம்பிக்கு இரட்டை வால் முளைக்கத்தானே செய்யும்...!'' எனச் சொல்லிப் பெருமூச்செறிந்தாள், வீராயி.

வெயில் கனலேறிக் காய்ந்தது!

''வாருங்கள், போகலாம்...'' என்றபடி நடந்தான், நாகன்.

''எப்படிப் போவது...?'' தயங்கி நின்று வினவினான், பீமன்.

''இந்தச் சிற்றாற்றைக் கடந்து தானே அக்கினி மலைக்குப் போக வேண்டும்...? பயங்கர முதலைகள் பதுங்கிக் கிடக்கும் இந்த ஆற்றை எப்படிக் கடப்பது...?'' ஆற்றில் அங்கும் இங்குமாய்க் காணுகிற முதலைகளைப் பார்த்தவாறேகேட்டான், ஆதி.

''சரி... இந்த ஆற்றைக் கடந்து போவதற்கு எங்கேயாவது, ஏதாவது வழிவகை இருக்கிறதா? — என்று கவனிக்கலாம்,வாருங்கள்...'' ஆற்றங் கரையோரமாக நடந்தான், வால்மீகி.

எல்லோரும் ஆற்றின் அமைப்பையும், அக்கினி மலையின் இருப்பையும் கருத்துடன் கவனித்தபடியே கரையோரமாக நடந்தார்கள்.

சுமார்... முப்பது முப்பத்தைந்து மீட்டர் அகலத்திற்குப் பரந்திருக்கிற ஆற்றில், காவி நிறத் தண்ணீர் ததும்பிப் புரண்டு பாய்ந்து கொண்டிருந்தது.

பிரும்மாண்டமான சிக்கிமுக்கிக் கல் பாறைகளும், கருநீலப் பாறைகளும் வானளாவ ஓங்கி உயர்ந்து, அக்கினி மலையைச் சுற்றிச் சூழ்ந்து அணைத்து நின்று, ஒரு கல் கோட்டையின் பாதுகாப்புச் சுவர் மாதிரி திகழ்ந்தன.

பெருமூச்செறிந்த பின், ஆயாசத்துடன் பீமன் சொன்னான்:- ''இந்த முதலை ஆற்றைக் கடப்பதும் சிரமம்! அதைவிட, இந்த மலையைச் சூழ்ந்திருக்கும்பாறைகளில்ஏறிக்குதிச்சிக்குப்போவதும், ரொம்ப ரொம்பக் கடினம்...!''

இதைக் கேட்டதும் —

வீராயி முகஞ்சுளித்தாள்.

''ஹூம்...! ஊக்கமில்லாத சோம்பேறிக்கு உரித்துக்கொடுத்தாலும், கொஞ்சம் ஊட்டிவிடு என்பானாம்! அந்த மாதிரி நீ பேசாதே! சிரமத்தை எண்ணிச் சிணுங்காதே! கடினத்தைக் கண்டுகலங்காதே! திகிலூட்டிக்கொல்லும் அக்கினி பூதத்தைத் தீர்த்துக் கட்டுகிற தீரத்துடன், பயங்கரக் காட்டைக்

கடந்து வந்து, காரியம் கைகூடுகிற நேரத்தில் கோழைத்தனமாகப் பேசாதே! முயன்று பார்க்க முடிவெடுத்திருக்கிறோம். சலிப்படையாமல், சஞ்சலப்படாமல் முனைந்து பார்க்கலாம், வாடா...!'' என்று ஆத்திரமும் ஆக்ரோஷமுமாகச் சீறியவாறே, நடந்தாள்.

அவளது பேச்சைக் கேட்டதும் —

''பலே! பலே!...'' கைதட்டி ஆரவாரித்தான், ஆதி.

''ஓ...! பார்த்தால், இரண்டடி உயரந்தான் இருக்கிறாள். ஆனால், இவளது வாய்ப்பேச்சு,ஒன்பதுகிலோ மீட்டர் நீளமிருக்கிறதே...!'' என்று குறுஞ்சிரிப்புடன் சொன்னான், பீமன்.

அவனது தமாஷ் பேச்சைக் கேட்டு, எல்லோரும் கலகலவெனச் சிரித்தார்கள்!

இவ்வாறு, ஏதேதோ பேசிச் சிரித்தபடியே சற்றுத் தூரம் நடந்தார்கள். கரையோரத்தில், காலை உறுத்துகிற உருளைக் கற்களும், சரளைக் கற்களும் நிறைந்திருப்பதையும் சட்டை செய்யாமல் நடந்து கொண்டிருக்கையில் —

ஆற்றின் அகலம் சற்றுக்குறுகியிருந்தது. அக்கரையில் ஓரிரண்டு அசோக மரங்கள் நெட்டுக் குத்தாக ஓங்கி உயர்ந்து வளர்ந்திருந்தன. அம்மரங்களின் நிழல்கள், ஆற்று நீரில் சாய்ந்திருந்தன. நிழலில் குளிர்ந்த நீரில் முதலைகளும், முதலைக் குட்டிகளுமாக நெளிந்து புரண்டு கொண்டிருந்தன.

அசோகமரங்களுக்கு அப்பாலே—

அக்கினி மலை, சிகரத்திலிருந்து சாய்ந்து சரிந்து, தாழ்ந்து, அடிவாரம் வரையில் பரந்திருந்தது! மழை நீர், கீற்றுக் கீற்றாக அரித்திருக்கிற பிளவுகளும், உருளையும், திரளையுமான சின்னஞ்சிறு கற்களும், யானையும் காண்டா மிருகமாயும் காணும் பெரியபெரிய பாறுங்கற்களும்நிறைந்திருக்கிற நெட்டுக் குத்தான சரிவை, நெடுநேரமாகப் பார்த்தார்கள்.

''இந்தச் சரிவில் ஏற முடியுமா...?'' என்றான், நாகன்.

''ஏறலாம்... ஆனால்...'' என்று ஏதோ தயக்கத்துடன் மென்று விழுங்கினான், பீமன்.

''என்ன ஆனால்...?'' என்றான், நாகன்.

பீமன், தயங்கியபடியே சொன்னான்: ''ஏறலாம். ஆனால்... ஏறும் பொழுது... பாறைகள் சரிந்து விழுந்தால்...!''

''சரிந்து விழுந்தால், சரிந்து விழும் பாறைகளோடுநாமும்சரிந்துவிழுந்து, உருண்டு, புரண்டு, நசுங்கிச் சிதைந்து கூழ் கூழாகிக் கழுகுகளுக்குச் சட்டினியாக வேண்டியதுதான்...!'' எனக் கிண்டலாகச் சொல்லிச் சிரித்தான், ஆதி.

அவன் சொல்லிச் சிரித்து முடிப்பதற்குள் —

கொன்று தின்பதிலே சண்டை வந்ததோ...? கூடி வாழ்வதிலே சண்டை வந்ததோ...? இரண்டுமலைக்கழுகுகள், பயங்கரமாகச் சண்டையிட்டுக் கொண்டன! முற்பகலில் அத்திமரக் காட்டில் தொடங்கிய சண்டை, நடுப்பகலில் பாலை மணல் காட்டுப் பள்ளத்தில் வெகு நேரமாக வளர்ந்து, இப்போது அக்கினி மலைச் சிகரத்திலே மும்முரப்பட்டது! கோபமும், கொடூரமுமாக ஒன்றை ஒன்று கொத்திக் குதறி, இறக்கைகளால் வீசிச் சாடித் தாக்கியவாறே, மலைச்சரிவில் ஒடித் தவித்துத் தடுமாறி விழுந்து உருண்டன!

அவைகளுடன் —

முரட்டுக் கழுகுகளின் மூர்க்கத்தனமானமோதுதலால்அசைந்து,நகர்ந்து, இடம் பெயர்ந்த கற்களும், பாறைகளும் ஒன்றோடொன்று மோதிப் புரண்டு...

ஓ! பயங்கரம்...!

செம்மணல் தூசிப் படலம் குபுகுபுவெனப் பொங்கியெழுந்து மேக மண்டலமாய்ப் பரவ, கற்களும் பாறைகளும் ஒரு மாபெரும் யானைப் படை பாய்ந்தோடி-வருகிற மாதிரி, தடதடவெனும் பெருஞ்சப்தத்துடன் உருண்டு திரண்டு சரிந்து விழுந்தன!

இந்தப் படுபயங்கரக் காட்சியைக் கண்டதும், கதி கலங்கியது! ஆளுக்கு ஒரு பக்கமாகத் தாவியோடி, அங்கும் இங்குமாக ஒதுங்கினார்கள்...! பதுங்கினார்கள்...!

(தொடரும்)

சுதந்திர தேவி சிலை

சிறப்பு நாணயங்கள்

நியூயார்க் நகரின் தலைவாயிலில், எல்லிஸ் தீவில் நிறுவப்பட்டுள்ள சுதந்திரதேவி சிலையைக் கௌரவிக்கும் வகையில் வெளியிடப்பட்டுள்ள சிறப்பு நாணயங்கள் இவை.

இந்த நாணயங்களை வெளியிடுவதற்கு அமெரிக்க அரசின் நாணயச் சாலைக்கு அமெரிக்க பார்லிமெண்ட் அங்கீகாரம் வழங்கியுள்ளது.

மேல் வரிசையில் இடம் பெற்றிருப்பது 5 டாலர் தங்க நாணயம். இதன் ஒரு பக்கத்தில் சுதந்திரதேவி சிலையின் தலைப்பகுதியும், மற்றொரு பக்கத்தில் அமெரிக்க அரசின் சின்னமான கழுகின் படமும் பொறிக்கப்பட்டுள்ளன. 5 டாலர் தங்கநாணயத்தை, அமெரிக்க



அரசு, 50 ஆண்டுகளுக்குப் பிறகு இப்போதுதான் முதன்முதலாக வெளியிடுகிறது.

இரண்டாவது வரிசையில் உள்ளது ஒரு டாலர் வெள்ளி நாணயத்தின் படம். இதன் ஒருபுறத்தில் ''எல்லிஸ் தீவு — அமெரிக்காவின் நுழைவாயில்'' என்னும் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன; சுதந்திரதேவி சிலையும் இடம் பெற்றுள்ளது. மற்றொரு புறத்தில் அந்தச் சிலையின் கையிலுள்ள ஒளிச்சுடர் மட்டும் பெரிதாகச் சித்திரிக்கப்பட்டுள்ளது.

''சுதந்திரக் காற்றைச் சுவாசிக்கத்
துடித்து,
வாடி வதங்கிக் கிரங்கிக் கிடக்கும்
கோடி கோடி மன்னுயிர் தம்மைத்
தருவீர் என்னிடம்...''

என்னும் கவிதை வரிகளும் இடம் பெற்றுள்ளன. எம்மா லாசரஸ் என்னும் அமெரிக்கக் கவிஞர் எழுதிய இப்புகழ்பெற்ற கவிதை, சுதந்திர தேவி சிலையின் பீடத்தில் பொறிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

கீழ் வரிசையிலுள்ளது புதிய 'அரை டாலர்' நாணயத்தின் படம்; அமெரிக்காவில் குடியேற விரும்புவோர் ஒரு கப்பலில் நியூயார்க் துறைமுகத்தில் நுழைவது போலவும், சுதந்திரதேவி சிலை அவர்களை வரவேற்பது போலவும், இந்த நாணயத்தின் ஒரு பக்கத்தில் வரையப்பட்டுள்ளது; இவ்வாறு குடியேறிய ஒரு குடும்பத்தினர் தங்கள் மூட்டை முடிச்சுகளுடன், கரையில் நின்றிருப்பது போல, அதன் பின்புறம் பொறிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சிறப்பு நாணயங்களின் விற்பனையின் மூலம் கிடைக்கும் லாபத்தைக் கொண்டு, சுதந்திரதேவி சிலையும், எல்லிஸ் தீவும் சீரமைக்கப்படும்.

— அமெரிக்கத் தகவல் நிலையம்.

எப்படிச் சொல்றீங்க?



அவர்: உங்க குடும்பத்தில் உள்ளவர்களுக்கு எல்லாம் கந்தசாமி கடையில் தான் ஜவுளி எடுக்கறீங்களா?

இவர்: ஆமாம்!

அவர்: 'வேல்முருகன் ஸ்டோர்' லேதான் மளிகை சாமான்கள் வாங்கறீங்க போலிருக்கு?

இவர்: ஆமாம் சார்!

அவர்: மேஜை நாற்காலியெல்லாம் கூட 'மாடர்ன் & கோ' வில்தான் வாங்கறீங்களா?

இவர்: அடடே, ஆமாம்!

அவர்: ம்... அப்புறம், 'தேவி மெடிக்கல்ஸி' ல்தான் மருந்து வாங்கற மாதிரி தெரியுதே...?

இவர்: அடடே! ஆமாம் சார்! எப்படி எல்லாத்தையும் இவ்வளவு கரெக்டா சொல்றீங்க...?

அவர்: உங்க வீட்டுச் சுவரிலே மாட்டியிருக்கிற காலண்டர்களைப் பார்த்தே தான் இவ்வளவும் சொன்னேன்!

— ஆர். அரிகோபி.

குரங்குக் குட்டி போல...

ரா.பொன்ராசன்



'குரங்குக் குட்டி போல நீயும்
இருந்திட வேண்டும்' — என்று
குருமுனிவர் முன்னொருநாள்
அறவுரை சொன்னார்.
குருமுனிவர் சொல்லைக் கேட்ட
நாள் முதலாக — நான்
குட்டிச்சிறு குரங்கைப் போன்றே
நடக்க முனைந்தேன்.

விதியிலே எண்ணில்லாத
வித்தைகள் செய்தேன் — சொந்த
வீட்டுக் குள்ளும் எண்ணிஎண்ணிக்
குறும்புகள் செய்தேன்.
பாதிமரம் ஏறிநின்று
பல்லை இளித்தேன் — பிறர்
பார்க்கும்போதே பாய்ந்து பாய்ந்து
கர்ணம் அடித்தேன்.

என்னுடைய நடத்தையினைப்
பார்த்த பெரியோர் — என்னுள்
ஏதோ நடந்து விட்டதாக
எண்ணிப் பயந்தார்.

இன்னும்சில நாட்களுக்குள்
என்னைப் பிடித்து — வேறு
எவ்விடமோ அனுப்புதற்கு
முடிவும் எடுத்தார்.

முதியவர்கள் முடிவைக்கேட்டு
நெஞ்சம் பயந்தேன் — அந்த
முனிவரிடம் ஓடிச்சென்று
கொஞ்சிப் பணிந்தேன்.
நடந்ததெல்லாம் அறிந்திருந்த
முனிவர் சிரித்தார் — நான்
நடந்து கொள்ள வேண்டியதை
உணர்த்தி மகிழ்ந்தார்.

"குரங்குக்குட்டி தாயைப்பற்றிக்
கொள்வதைப் போன்றே — நல்ல
குணமுள்ளோரைப் பற்றிக் கொள்வாய்
என்று நம்பினேன்;
உறுதியாக உயர்ந்தோரை நாம்
பற்றிக் கொண்டாலே — இந்த
உலகநலம் அத்தனையும்
நம்மைச் சேருமே!"



தங்கப் பதக்கம் பெற்ற படகு வீரர்கள் — ஆனந்த ரங்கநாத், ஸ்ரீராம் சிவராம், சேஷசாயி நரசிம்மன், ராகுல் சேகு மற்றும் பால் ஜார்ஜ்.

படங்கள் : யோகா.

படகுப் போட்டியில் தங்கங்கள்

கிறிஸ்து பிறப்பதற்கு முன்னால் 1427 ல் அமன் ஹட்டப் என்பவர் ஒரு சிறந்த படைத்தலைவர் மட்டுமல்ல; படகோட்டுவதில் வல்லுநரும் கூட. கிரேக்க ரோம இலக்கியங்கள் படகோட்டுவதின் சிறப்பை நவில்கின்றன. வெர்ஜில் என்ற கவிஞர் படகுப் போட்டிக்கு மிகுந்த முக்கியத்துவம் இலக்கியத்தில் தந்திருப்பவர். எயினெய்ட் தமது தந்தையின் ஞாபகார்த்தமாகப் படகுப் போட்டிகளை நடத்தியிருக்கிறார்.

பதினெட்டாம் நூற்றாண்டில் லண்டனிலுள்ள தேம்ஸில் ஸ்டார், ஆரோ, ஷார்க் என்ற பெயர்களில் படகு கிளப்புகள் இயங்கின. 1793 ஆம் ஆண்டில் ஈட்டன் கல்லூரி படகு செலுத்தும் பந்தயங்களில் ஈடுபட்டது. ஆக்ஸ்போர்டு சர்வகலா சாலைக்கும் கேம்பிரிட்ஜ் சர்வகலாசாலைக்கும் படகுப் போட்டிகள் நடத்துவதற்குக் கவிஞர் வொட்ஸ்வொர்த்தின் மருமகன் சார்லஸ் உதவியிருக்கிறார். இந்தப் போட்டிகளைப் பார்வையிட இருபதினாயிரத்துக்கு மேற்பட்ட ரசிகர்கள் குழுமினார்கள். இந்தப் போட்டிகளுக்குப் பரிசாக 500 பவுன் கொடுக்கலாம் என்று நிர்வாகிகள் தீர்மானித்தனர். ஆனால் அமெச்சூர் படகுப் போட்டியாளர்கள் இந்தப் பந்தயப் பணத்தை ஏற்றுக் கொள்ள முன் வரவில்லை. இங்கிலாந்தில் புரொ



10 வது தேசியப் படகுப் போட்டியில் வெற்றி பெற்ற தமிழ்நாடு அணி — முன் வரிசை, இடமிருந்து வலம்: டாக்டர் எஸ். ஆச்சார்யா, போரன் சந்தா, ரா. சந்திர மௌலி (கேப்டன்), கே. கே. அருண் கிருஷ்ணன். பின் வரிசை: பர்ஹான் அகமது, ஸ்ரீராம் சிவராம், ஆனந்த ரங்கநாத், என். சேஷசாயி, சுந்தரவடிவேல் மதிசாகரன், ராகுல் கேக.

பெஷனல் படகுப் போட்டியாளர்களுக்கும் ஒரு கழகம் தோன்றியது. புரொபஷனல் ஆட்டக்காரர்கள் அமெரிக்கா, கானடா, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளிலும் உள்ளனர். நியூ சௌத்வேல்ஸைச் சேர்ந்த எட்வர்ட் ஹனியன் படகுப் போட்டியில் உலக சாம்பியனாகத் திகழ்ந்தார். இவருக்குச் சவால் விட்டுப் போட்டிக்கு அழைத்தவர் கோர்ட்னீ. இவர் அமெச்சூர் படகு ஓட்டும் விற்பன்னர். இந்தப் போட்டிக்குப் பரிசாக ஆறு யிரம் டாலர்கள் கொடுக்க முன்வந்தனர் பந்தய நிர்வாகிகள். அமெச்சூர் கோர்ட்னீயின் படகு உடைந்து போய் பந்தயம் நடைபெறாமல் போய்விட்டது.

அமெரிக்காவில் படகுப் போட்டிகள் 1756 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டன. ஆனால் ரஷ்யாவில் இந்தப் போட்டிகள் இருபதாம் நூற்றாண்டில்தான் அறிமுகமாயிற்று. 1896 ஒலிம்பிக்கில்தான் படகுப் போட்டிகள் அங்குரார்ப்பணமாயிற்று. இந்தப் போட்டிகள் கடுமையான காற்று வீச்சுக்குப் பலியாகி நடக்க முடியாமல் போய் விட்டன. 1900 ஆம் ஆண்டு ஒலிம்பிக்ஸில் ஐந்து வகைப் படகுப் போட்டிகள் நடந்தன. அதிகார பூர்வமாகப் படகுப்போட்டிக்கு 1908 ஆம் ஆண்டு ஒலிம்பிக்கில்தான் அந்தஸ்து கிடைத்தது. முதல் ஒலிம்பிக் படகுப் போட்டிகளில் பிரிட்டன் நான்கு வகைப் பந்தயங்களில் வெற்றிவாகை சூடியது. ஒலிம்பிக் படகுப் போட்டிகளில் தூரம் 1 மைல் 427 கெஜமாகும். பெண்களுக்கான படகுப்போட்டிகள் 1976 ஆம் ஆண்டில்தான் தொடங்கப் பட்டது.

பிரிட்டனில் படகுப் போட்டிகளைச் சிறப்பாகக் கற்றுக் கொடுக்க அந்தக் காலத்தில் 205 படகு கிளப்கள் இருந்தன. 1882 ஆம் ஆண்டில் அமெச்சூர் படகுக் கழகம் ஆரம்பிக்கப்பட்டது.

சமீபத்தில் ஹைதராபாத்தில் நடந்த தேசியப் படகுப் போட்டியில் தமிழ் நாட்டு அணி முதல் இடம் பெற்று, 'சார்மினார் சாலஞ்ச்' கோப்பையைப் பெற்றது. இந்தப் போட்டியில் தமிழ் நாட்டுக்குக் கிடைத்தது நான்கு தங்கப் பதக்கங்கள். அதில் இரண்டு

குண்டுமணி

தங்கப் பதக்கங்களின் வெற்றிக்குக் காரணம் 18 வயதுக்குட்பட்ட ஐந்து இளம் பாலகர்கள். ஆனந்த்ரங்கநாத், ஸ்ரீராம் சிவராம், சேஷசாயி நரசிம்மன், ராகுல்கேசு, பால் ஜார்ஜ் என்ற இளைஞர்கள் தமிழகத்துக்குப் புகழைத் தேடித் தந்தார்கள்.

தமிழகத்துக்கு மேலும் இரண்டு தங்கப் பதக்கங்களைப் படகுப் போட்டியில் பெற்றுத் தந்தவர்கள் டாக்டர் ஸ்ரீதர் ஆச்சார்யாவும் கே. கே. அருண் கிருஷ்ணனும் ஆவர். தமிழகக் குழுவினர் சென்னை அடையாறு ஆற்றில் உள்ள படகு குழாமில் உறுப்பினர்களாக இருப்பதோடு இடைவிடாத பயிற்சியும் மேற்கொண்டவர்கள்.

ஹைதராபாத்தில் நடந்தது பத்தாவது தேசியப் போட்டியாகும். தேசியப் போட்டிகளில் தமிழகப் படகுக் குழுவினர் ஒவ்வொரு வருஷமும் பங்கேற்றுத் தங்கப் பதக்கங்களைப் பெற்றுள்ளார்கள்.

1980 ஆம் ஆண்டில் கல்கத்தாவில் நடந்த படகுப் போட்டியில் தங்கப் பதக்கம் முதன் முறையாகப் பெற்றது தமிழகம். தமிழ்நாட்டுக்கு வெற்றி தேடித் தந்த நால்வரில் ஒருவரான ரா. சந்திரமௌலி இன்று தமிழக அணியின் காப்டனாகச் செயல்படுகிறார். நால்வரில் மற்றொருவரான சிக்கந்தர் பக்த் தமிழக ஜூனியர் அணிக்கு 'கோச்'சாகப் பணிபுரிந்து அவர்கள் வெற்றிக்கு வித்திட்டவர்.

ஹைதராபாத்தில் நடைபெற்ற படகுப் போட்டி ரொம்பக் கஷ்டமானது. ஊட்டி, கோடையில் நடைபெறுவதுபோல் 'எளிதானதல்ல. ஹைதராபாத்தில் நடைபெற்ற போட்டிக்குப் பயன்பட்ட படகுகள் வித்தியாசமானவை. நால்வர் செலுத்தும் இந்தப் படகு நாற்பது அடி நீளமும் இரண்டு அடி அகலமும் கொண்டது. இந்தக் குறுகிய படகைச் செலுத்துவதற்குப் பல மாதங்கள் இடைவிடாத பயிற்சி தேவை.

இந்தப் படகுப் போட்டியில் கலந்து கொண்ட இளைஞர்கள் ஓட்டம், உடற்பயிற்சி ஆகியவற்றிலும் ஈடுபட்டு, தங்கள் உடல் பலத்தையும் மனோதிடத்தையும் பெருக்கிக் கொள்கிறார்கள்.

தமிழக அணியின் இளைஞர்கள் அடையாறு நீரில் விடாது செய்த பயிற்சிகளே அவர்களது வெற்றிக்கு வழிவகுத்தன. பரீட்சை, படிப்பு இவைகளின் கெடுபிடிகளுக்கு மத்தியில் பதினெட்டு வயது இளைஞர்கள் ஏகாக்ர சித்தத்துடன் தினம் பயிற்சியில் முழு மூச்சோடு பழகியதால்தான் இந்த வெற்றி அவர்களுக்குக் கிடைத்ததாகக் காப்டன் சந்திரமௌலி சொல்கிறார்.

அடையாறு படகு கிளப்பில் வெற்றி பெற்ற இளைஞர்களுக்குப் பாராட்டு விழாவும் விருந்தும் சமீபத்தில் நடைபெற்றன. தமிழகப் படகு செலுத்துவோர் அமெச்சூர் கழகத்தின் தலைவர் வெற்றிபெற்ற இளைஞர்களைப் பாராட்டியதோடு, நினைவுப் பரிசும் வழங்கிக் கௌரவித்தார். படகுப் போட்டியில் இந்த இளைஞர்களுக்கு இன்னும் பல வெற்றி வாய்ப்புக்கள் காத்திருக்கின்றன. படிப்பையும் விடாமல் போட்டியிலும் பங்கேற்கும் இந்த இளம் தங்கக் கலைஞர்களுக்கு நம் வாழ்த்துக்கள்.

அச்சமில்லை! அச்சமில்லை!



திரு. ஏ. கே. செட்டியார் ஜப்பான் நாட்டுக்குப் போயிருந்த போது ஒரு விடுதியிலுள்ள சிலர் போர்ப்பாட்டு ஒன்றைப் பாடி மகிழ்ந்து கொண்டிருந்தார்களாம். திரு. செட்டியார் அவர்களைப் பார்த்த போது, "நீங்களும் இப்படி ஒரு பாடலைப் பாடுங்கள்" என்றார்களாம்.

செட்டியார் திகைத்துவிட்டு, அப்பால், "அச்சம் இல்லை. அச்சம் இல்லை" என்று தொடங்கும் பாரதி பாடலைப் பாடவும் அவர்கள் வெறும் ஓசையிலேயே அதிசயமுற்று அப்படியே தங்கள் மொழியில் எழுதிக் கொண்டார்களாம்.

—ஆதாரம்: பேராசிரியர் அ. முத்து சிவனின் கவிதை (விமர்சனம்).

அனுப்பியவர்: இன்பவாணன்.



வெள்ளை நிறத்தில் ஒரு பூனை

பேரளம் புகழ்மதி

புகைப்படம்: எம். நடராஜன்

அந்தக் கிராமத்தில் மாடி வீட்டில் வசித்து வரும் சுரேஷ் அம்மாவிடம் சத்தம் போட்டுக் கொண்டிருந்தான். ''அம்மா... அந்த வெள்ளைப் பூனை நாலு குட்டி போட்டிருக்குதே; அதிலே அந்த சாந்து நிறத்திலேயும், பால் நிறத்திலேயும் உள்ள குட்டிங்கதான் அழகா இருக்கு... மீதி இரண்டும் அசிங்கமா இருக்கு... வெளியிலே தூக்கிஎறி அந்தஇரண்டையும்'' என்று கத்தினான்.

''ஐயையோ, என்னடா அப்படிச் சொல்றே? குட்டிங்க அழகா இருந்தாத்தான் தாய் அன்பு செலுத்துமா?'' அழகு வெறும் கண்ணிலே இல்லையடா; மனத்திலே இருக்கு! நம்ம இந்தியத் தாய்க்கு எல்லா மக்களும் எப்படி ஒரே மாதிரியோ அது மாதிரி தான் இதுவும்'' என்றாள், அம்மா.

''இந்த அம்மாவே இப்படித் தான்'' என்று முணுமுணுத்தபடி ''சரி, சரி, இன்னைக்கு ஸ்கூலிலே சினிமா காட்டுறாங்க...நேரமாயிடுச்சு.சீக்கிரம்போகணும்'' என்று சொல்லியபடி சைக்கிளை எடுத்துக் கொண்டு பக்கத்து நகரப் பள்ளிக்குப் புறப்பட்டான். ஏழெட்டு சைக்கிள்களில் நண்பர் புடைசூழச் சென்று கொண்டிருந்தான்.

சுரேஷ் உற்சாகமாகப் பாடியபடி வந்தான். அவனுக்கு நல்ல குரல் வளமுண்டு. பள்ளியில் எந்த விழாவானாலும், அவன் பாடல் நிச்சயமிருக்கும்.

''டேய்.. டேய், அதோ பாருடா, நீக்ரோ போகுது,'' என்றான் ஒருவன். தூரத்தே ராமன் போய்க்கொண்டிருந்தான். அவன் முன்னோர்கள் 'சிக்கிம்' மாநிலத்திலிருந்து வந்த மலைவாழ் ஜனங்களாவார்கள். ராமன் மிகவும் ஏழை. அவன் தந்தை பக்கத்து நகரத்தில் ஒரு தொழிலகத்தில் 'கூர்க்கா'வாகப் பணிபுரிகிறார்.

நடந்தபடி சென்ற அவனை சைக்கிளில் வந்த கூட்டம் கிண்டல் செய்தபடி சென்றது. ''மூக்கைப் பாருடா, சரியான சப்பை!''; ''கண்ணைப் பாருடா; சரியான ஆந்தை!''; ''முகத்தைப் பாருடா; சரியான குரங்கு!'';

"சரியான அட்டைக் கரி.... நம்ம பள்ளிக்கூடத்திலே இவன் படிக்கிறதே நமக்கு அவமானம்! படிப்பிலே கெட்டிக்காரனு இருந்தால் போதுமா? பார்க்க படு அசிங்கமாயிருக்கானே!"

இவ்வாறு கேலிசெய்தபடி மெல்லச் சென்றசைக்கிள்கள், "சரி, சரி...வாங்கடா, சினிமாவுக்கு நேரமாயிடுத்து" என்று கூறியபடி சிட்டாகப் பறந்தன.

ராமன் அமைதியாக எதுவும் பேசாமல் சென்று கொண்டிருந்தான்.

சைக்கிள்கள் சற்று தூரம் போனவுடன், "டேய், அதோ பாருடா.. ஒரு கார் மரத்திலே மோதிக் கிடக்கு;" என்முன் ஒருவன். "அந்தக் காரில் ஒருவர் காயங்களோடு இரத்தம் சொட்டச் சொட்ட அரை மயக்கத்திலே நமக்கு கை ஜாடை செய்யறார்டா" என்முன் இன்னொருவன். அருகில் சென்றனர்!

"'வாட்டர்,' 'வாட்டர்,' 'வாட்டர்'' என்று காரில் அடிபட்டிருந்தவரின் உதடுகள் முணுமுணுத்தன. அதற்குள் சுரேஷ்... "டேய் சினிமாவுக்கு நேரமாயிட்டுது...' காயம் பட்டவங்களைக் கவனிக்க 'கவர்ன்மெண்ட்' இருக்கு, வாங்கடா, போகலாம்" என்று சொல்லியபடி அனைவரையும் கூட்டிக் கொண்டு விரைந்து சென்முன்.

பதினைந்து நாட்கள் சென்றன. ஒரு நாள் பள்ளி பரபரப்பாக இருந்தது. மாணவர் கூட்டத்திற்குத் தலைமையாசிரியர் ஏற்பாடு செய்தார். எல்லா மாணவர்களும் மைய மண்டபத்தில் கூடினர். முதன்மைக் கல்வி அதிகாரி தலைமை தாங்கினர்.

அதோ, அது யார்? அன்று காரில் அடிபட்டவர் போல இருக்கிறதே! கையில் கட்டுடன் உள்ளாரே!

தலைமை ஆசிரியர் ஒலி பெருக்கி அருகே வந்தார். "இராமன் என்ற மாணவன் உடனே இங்கு வரவும்" என்றார். சுரேஷ் தன் நண்பர்களிடம், "பார்த்தியா, ராமன் சரியா மாட்டிக்கிட்டான். அன்னிக்கே நினைச்சேன்... இந்தப் பயல் அந்தக் காரிலே ஏதாவது திருடியிருப்பான்... இவரு ரிப்போர்ட் பண்ணியிருப்பாரு" என்று தம்பட்டமடித்தான்.

இராமன் கூச்சத்தோடு மேடைக்குப் போனன். தலைமையாசிரியர் கணீரென்ற குரலில் கூற ஆரம்பித்தார்: "இதோ... இந்த மாணவன், யாரும் கவனிப்பாரற்ற கிராம ரஸ்தாவில் அடிபட்டுக் கிடந்த இவரை மெல்லத் தூக்கி, தண்ணீர் கொடுத்து, தன் தோளில் சாய்த்தபடி நகரத்து ஆஸ்பத்திரியில் சேர்த்திருக்கிறன். அது மட்டுமல்ல; போலீஸ் ஸ்டேஷனில் அவருடைய முக்கிய பொருட்கள், பர்ஸ், முக்கியமான பத்திரங்கள் ஆகியவற்றையும் ஒப்படைத்து விபத்துப் பற்றிச் சொல்லியிருக்கிறன். காரில் அடிபட்டவர் யார் தெரியுமா? அமெரிக்காவிலுள்ள ஐக்கிய நாடுகள் நிறுவனத்தில் மிக முக்கியமான ஓர் அதிகாரி! ஒரு முக்கியமான பிரச்னை பற்றித் தனிமையிலே யோசிக்கறதுக்காக தானே காரை ஓட்டிக் கொண்டு வரும்போது இந்த விபத்து நடந்துட்டுது! உடல்நிலை சரியானவுடனே இந்த மாணவருக்குப் பத்தாயிரம் ரூபாய் அன்பளிப்பாக அளிக்க முன்வந்தார். ஆனல், நமது ராமனே அந்தப் பணத்தைத் தானே எடுத்துக் கொள்ளாமல், அந்தப் பணத்திலே நமது பள்ளியிலே ஒரு புதிய வகுப்பறை கட்ட வேண்டினன்! அவனுடைய விருப்பப்படியே அடுத்த வாரம் புதிய வகுப்பறையின் கட்டட வேலை தொடங்கப் போகுது. அவன் எவ்வளவோ மறுத்தும்கூட அவன் பெயரையே அந்த வகுப்பறைக்கு வைக்கணும்னு பிடிவாதமா நாங்கள் முடிவெடுத்திருக்கிறோம்! இத்தகைய சிறந்த மாணவனல், நமது பள்ளிக்கே பெருமை! அவனைத் தற்போது தலைமைக் கல்வி அதிகாரி பாராட்டுவார்!"

அனைத்து ஆசிரியர்களும் மாணவர்களும் திக்பிரமையோடு கேட்டுக் கொண்டிருந்தனர். கல்வி அதிகாரி பேசி முடித்தவுடன் கரகோஷம் வானைப் பிளந்தது! எல்லோரும் பெருமிதத்தோடு இராமனைப் பார்த்தனர்!


"டேய், சுரேஷ்! அந்தப் புதிய வகுப்பறைக்குத்தான் நம்ம கிளாஸ் மாறப் போகுதாம்" மகிழ்ச்சியோடு ஒருவன் கூறினன். 'எவனைப் பார்க்கவே அசிங்கம் என்றேமோ, அவன் பேரில்

அமைந்த வகுப்பறையில் நாம் படிக்கப் போகிறோம்'' — சுரேஷின் கண்களில் கண்ணீர் ததும்பியது. ''அழகு வெறும் கண்ணிலே இல்லையடா, மனத்திலே இருக்கு.'' — அம்மாவின் குரல் அவன் செவிகளில் அப்போது ஒலித்தது!

''தற்போது சுரேஷைப் பாடுவதற்காக மேடைக்கு அழைக்கிறேன்'' என்றார் தலைமையாசிரியர்.

சுரேஷ் மெல்ல மேடைக்குப் போனான். ''வெள்ளை நிறத்தொரு பூனை...'' என்ற பாரதியாரின் பாடலைக் கம்பீரமாகப் பாட ஆரம்பித்தான். ஓ! அவன் குரலில்தான் எத்தனை உருக்கம்! எல்லோருடைய மனமும் பாகாய் உருகியது! சுரேஷ் இப்பொழுது ஒரு புதிய மாணவன்!

விஞ்ஞான அற்புதங்கள்



நிலத்தை அளந்தது விஞ்ஞானம் — மனிதன்
நிலவில் நடந்ததும் விஞ்ஞானம்.
கலத்தைச் செலுத்திடும் விஞ்ஞானம் — சில
கலகம் செய்வதும் விஞ்ஞானம்!

விண்ணை அளந்தது விஞ்ஞானம் — இங்கே
மின்னொளி கண்டதும் விஞ்ஞானம்.
கண்ணில் தெரியாக் காட்சிகளைத் — தொலைக்
காட்சியில் காட்டிடும் விஞ்ஞானம்.

வானில் பறந்திடும் விந்தைகளை — மனிதக்
கோளைச் செலுத்திடும் அற்புதத்தைத்
தானே இயங்கிடும் இயந்திரங்கள் — இங்கே
தந்து சிறந்ததும் விஞ்ஞானம்.

அணுவைப் பிளந்திடும் விஞ்ஞானம் — உயர்
அண்டத்தைக் கண்டதும் விஞ்ஞானம்.
உணவைப் பெருக்கிடும் விஞ்ஞானம் — இந்த
உலகை இணைத்திடும் விஞ்ஞானம்.

முகமது ஆரிப் மியான்

பிருந்தாவனக் கவியரங்கம்


குட்டிப்பூனை

குட்டிப் பூனை வந்தது.
எட்டி நாயைப் பார்த்தது.
பெட்டி மேலே சட்டியில்
கட்டித் தயிரைக் கண்டது!

கிட்ட வந்து சட்டியை
முட்டித் தள்ளி விட்டது.
சட்டி உடைந்து போனது.
கட்டித் தயிரும் கொட்டவே.

குட்டிப் பூனை நாவினால்
சப்புக் கொட்டித் தின்றது.
கட்டிக் கிடந்த நாயினால்
எட்டித் தாக்க முடியுமோ?

—ம. முருகானந்தம் (7117).
செங்கவல்லி.





உதவும் மருந்து

ஏட்டில் உள்ள அனைத்தையும்
எழுத்துக் கூட்டிப் படித்து நீ
போட்டித் தேர்வில் வெல்வதே
போதும் என்று நினைப்பதோ?

பூட்டைத் திறக்கும் சாவிபோல்
புவிக்குத் தேவை தொழிலடா.
சாட்டை இல்லாப் பம்பரம்
சரியாய் நின்று ஆடுமோ?

உன்னால் இயன்ற தொழில்களில்
ஒன்றி ரண்டைக் கற்றுக்கொள்.
பின்னால் உனக்கு உதவுமே.
பிணியைத் தீர்க்கும் மருந்துபோல்!

—நெ. அன்புச்செழியன் (1727), பண்ணுருட்டி.

சின்னப் பொண்ணு

சலசலக்கு சத்தம் போடும்
கொலுசு இருக்கு காலிலே.

ஜிலுஜிலுக்கு சத்தம் போடும்
வளையல் இருக்கு கையிலே.

பளபளன்னு மின்னு கின்ற
தோடு இருக்கு காதிலே.

தகதகன்னு மின்னு கின்ற
சங்கி லிபார் கழுத்திலே.

அனைத்து நகையும் சேர்ந்திருக்கு
யாருடைய உடம்பிலே.

தினமும் நாங்கள் பார்த்துமகிழும்
சின்னப் பொண்ணு உடம்பிலே!

—இ. மு. ஜெயந்திமரகதம் (7732),
காரைக்குடி.



வங்கியின் பயன்

அழகன் சிறந்த உழைப்பாளி
அதனால் தினமும் பணம்சேர்த்தான்.
அலமாரி ஒன்று வாங்கி அதில்
அடுக்கி வைத்தான் பணத்தினையே.

திருடன் ஒருநாள் வந்தானே.
திருடிக் கொண்டு போனானே!
திருதிரு என்று அழகனுமே
சித்தம் கலங்கி அழுதானே!

வங்கியின் பயனை அறிந்தானே
மகிழ்வுடன் பணத்தைப் போட்டானே.
வட்டியும் அதனுடன் சேர்ந்ததனால்
வளமுடன் நன்கு வாழ்ந்தானே!

நாமும் பணத்தைச் சேமித்து
நலம்பெற வங்கியில் போட்டிடுவோம்.
நாடும் இதனால் வளம்பெறுமே.
நற்பணி பலவும் சிறந்திடுமே.

— ந. நாகராசன் (10,084), ஒசூர்.





பள்ளி விட்டதும்

பள்ளிக் கூடம் விட்டவுடன்
பறந்தே ஓடி வந்தாச்சு!
அம்மா தந்த காப்பியினை
ஆசை யோடு குடிச்சாச்சு!

விச்சுப் பயல் வந்ததுமே
விளையா டவுமே போயாச்சு.
கதிரவன் கடலில் விழுந்ததுமே
கடமை நினைவில் வந்தாச்சு.

புத்த கத்தை விளக்கொளியில்
புரட்டி நன்றாய்ப் படிச்சாச்சு.
அப்பா வந்ததும், சந்தேகம்
அவரிடம் கேட்டுப் புரிஞ்சாச்சு.

இரவு நேர உணவதனை
இனிதே நானும் உண்டாச்சு.
பாட்டி கதையைக் கேட்டிடவே
படுக்கையில் மெல்ல விழுந்தாச்சு.

—பேராவி. து. விஜயகுமார் (3308),
கிள்ளியூர்.

எங்கள் பாட்டி

பாட்டி சொல்லும் சிறுகதைகள்
பாகாய் இனிக்கும் நற்கதைகள்!

நெஞ்சில் என்றும் நிலைத்துவிடும்
நீதிக் கதைகள் கூறிடுவாள்.

கடவுள் கதைகள் சொல்லிடுவாள்;
கண்ணீர் கசியச் செய்திடுவாள்.

வீரக் கதைகள் சொல்லிடுவாள்;
விம்மிப் புடைக்கும் நெஞ்சமுமே.

குலுங்கிக் குலுங்கிச் சிரித்திடவும்
கூறிடு வாளே சிலகதைகள்.

சுவையாய் என்றும் கதைசொல்லும்
திறமை மிக்கவள் என் பாட்டி.

அப்பா அம்மா என்கூட
ஆசையாய்க் கேட்டு மகிழ்வாரே!

—T. ரமேஷ்பாபு (703), குடியாத்தம்.



புதிர்க் கதை 8



என்ன வேண்டினான்?

எ. சோதி

முன்னொரு காலத்தில் ஓர் ஊரில் பிச்சைக்காரன் ஒருவன் இருந்தான். அவன் பெயர் முருகன். அவனுக்கு அந்த ஊரில் நாள்தோறும் வயிறு நிரம்ப உணவு கிடைப்பதில்லை; பசியாலும் பட்டினியாலும் வாடினான்.

முருகனுடைய பரிதாபமான நிலையைக் கண்டு அங்கிருந்த சிலர் இரக்கப்பட்டனர். அவனுக்கு உதவி செய்ய நினைத்த அவர்கள், ''ஏன் அங்கிருந்து துன்பப்படுகிறாய்? எப்படியேனும் நம் தலைநகராகிய முத்து நகரத்திற்குச் சென்றுவிடு. அங்கு வந்தவர்களுக்கு வாரி வழங்கக் கூடிய வள்ளல்கள் பலர் உள்ளனர்; எப்பொழுதும் உணவு வழங்கக்கூடிய அன்ன சத்திரங்கள் பல இருக்கின்றன. நீ அங்கு சென்றால் கவலையின்றி மகிழ்ச்சியாக வாழலாம்'' என்று சொன்னார்கள்.

இதைக் கேட்ட முருகன், ''நீங்கள் தாம் நான் தலைநகர் செல்ல உதவ வேண்டும்'' என்று வேண்டினான்.

அவர்களும் தங்களால் இயன்ற பணம் திரட்டி அவனிடம் தந்தனர். அவனும் வழி கேட்டுக் கொண்டே பலநாள் பயணம் செய்து தலைநகரை அடைந்தான்.

நெடிதுயர்ந்த மாட மாளிகைகளும் தேரோடும் அகன்ற வீதிகளும் அவனுக்கு வியப்பைத் தந்தன. அவற்றை எல்லாம் வேடிக்கை பார்த்தபடியே சென்று கொண்டிருந்தான்.

திடீரென்று வீதியில் பரபரப்பு ஏற்பட்டது. முரசு அடிப்பவன் ஒருவன், ''அரசர்க்கெல்லாம் அரசர், செங்கோல் நெறி தவறாச் சீராளர், குடிமக்களின் உள்ளங் கவர்ந்த பேரரசர் வளவனார் அவர்களின் ஐம்பதாவது பிறந்த நாள் விழா ஊர்வலம் சீரும் சிறப்புமாக இந்நகர வீதி வழியாக வரப் போகிறது. குடிமக்கள் அனைவரும் கண்டு களிக்கலாம்'' என்று முரசடித்துக் கொண்டே சென்றான்.

இதைக் கேட்ட முருகனுக்கு அரசரின் ஊர்வலத்தைப் பார்க்க வேண்டுமென்ற ஆர்வம் உண்டாயிற்று; அங்கேயே நின்று கொண்டிருந்தான்.

சிறிது நேரத்திற்குள் வீதியின் இரு மருங்கிலும் பெருங்கூட்டம் கூடிவிட்டது.

அரசரின் பிறந்தநாள் விழா ஊர் வலம் வரத் தொடங்கிற்று. முதலில் வண்ண வண்ண விளக்குகள் வர வாண வேடிக்கைகள் நிகழ்ந்தன. அதைத் தொடர்ந்து பொய்க்கால் குதிரை, கரகம், சிலம்பாட்டம் போன்ற ஆட்டங்களை ஆடிக் கொண்டே கலைஞர்கள் பலர் வந் தனர்.

அதற்கடுத்துச் சீருடை அணிந்த வீரர்கள் மிக அழகாக அணிவகுத்து நடந்து வந்தனர். அடுத்ததாகக் குதிரை களின் அணிவகுப்பும் யானைகளின் அணிவகுப்பும் வந்தன.

அதைத் தொடர்ந்து 'அலங்கார உடை அணிந்த அரசர் தேரில் அமர்ந்த படி வந்தார். மாளிகையின் மாடத்தி லிருந்த பெண்கள் பல வண்ண மலர் களை அரசர் மீது தூவினர்.

கடல் போலக் கூடி இருந்த மக்கள், 'அரசர் வாழ்க! அரசர் வாழ்க!' என்று பெரும் வாழ்த்தொலி எழுப்பினார் கள்.

அரசரின் ஊர்வலம் முடிந்தது. முருகனால்தன் கண்களையேநம்பமுடிய வில்லை.

'வாழ்ந்தால் அரசனாக வாழ வேண் டும். இல்லையேல் வாழ்வதால் என்ன பயன்?' என்று நினைத்தான் அவன்.

சிறிது நேரம் கழிந்தது. வேறு திசையை நோக்கி நடக்கத் தொடங் கினான். சிறிது தூரத்தில் மக்கள் பலர் கூட்டமாக நின்றிருந்தனர். முருகன் கூட்டத்திற்குள் நுழைந்தான்.

அங்கே வீரப் போட்டி நடந்து கொண்டிருந்தது. கட்டுடல் அமைந்த வீரர்கள் ஒவ்வொருவரும் தத்தம் திற மையைக் காட்டிக் கொண்டு இருந் தனர்.

அங்கிருந்த மக்கள் ஒவ்வொரு வீரச் செயலுக்கும் கைதட்டி ஆரவா ரம் செய்தனர்.

எல்லாப் போட்டிகளிலும் வெற்றி பெற்ற 'வீரநிலவன்' என்ற இளைஞ னுக்கு 'மாவீரன்' என்ற பட்டம் தந்து மாலை சூட்டினர்.

அங்கிருந்த மக்கள் எல்லோரும் 'மாவீரன் வீரநிலவன் வாழ்க! வாழ்க!' என வாழ்த்தினார்கள்.

இதைப் பார்த்ததும் முருகனுக்கு, 'நான் அரசனாகப் பிறக்க முடியாவிட் டாலும், இப்படிப்பட்ட மாவீரனாக வாவது விளங்க வேண்டும்' என்று எண்ணினான்.

பிறகு வேறு திசையில் நடக்கத் தொடங்கிய முருகன், 'அறிவரங்கம்' என்ற பெயர்ப் பலகையை உடைய பெரிய மாளிகையைக் கண்டான். என்ன நிகழ்கிறது பார்ப்போம் என்று அதற்குள் நுழைந்தான்.

உள்ளே பெருங்கூட்டம் குழுமி இருந்தது. தலைவராக இருந்தவர் எழுந் தார். "அறிஞர் பெருமக்களே! இப் பொழுது அறிவுப் போட்டி நிகழப் போகிறது. எல்லோரையும் வெல்லும் அறிவுக் கூர்மை உடையவருக்குப் 'பேரறிஞர்' என்ற பட்டம் தரப்படும். இந்த நாட்டிலுள்ள எல்லாரும் அவரைப் பணிந்து தங்கள் ஆசிரிய ராக ஏற்றுக் கொள்வார்கள்," என்று கூறி அமர்ந்தார்.

போட்டி தொடங்கியது. யார் வெற்றி அடைவார், யார் தோல்வி அடைவார் என்பதை அறிய முடியாத படி போட்டி விறுவிறுப்பாக நடந்தது. இறுதியில் 'வாழியன்' என்பவரே 'பேரறிஞர்' பட்டம் பெற்றார். அவ ருக்கு ஏராளமான மாலைகளும் பாராட் டுகளும் குவிந்தன.

இதைக் கண்ட முருகன், 'அறிஞ னாக இருப்பதே மிகவும் சிறந்தது. நான் எப்படி அறிஞனாவது?' என்று சிந்தித்தான்.

இரவுப் பொழுது வந்தது. முருகன் ஒரு விடுதியில தங்கினான்.

அவன் சிந்தனை முழுவதும் அன்று நடந்த நிகழ்ச்சிகளிலேயே உழன்றது.

'இந்நாட்டு மக்கள் அரசனுக்கு ஒருவகையில் மதிப்பு தருகின்றனர். வீரனை வேறொரு வகையில் பாராட்டு கின்றனர். அறிஞனை மற்றொரு வகை யில் சிறப்புச் செய்கின்றனர். இம் மூன்று வகை சிறப்புக்களையும் நான் ஒரே சமயத்தில் பெற வேண்டும். என்ன செய்வது?' என்று சிந்தித்த படியே உறங்கினான்.

பொழுதுவிடிந்தது. தூக்கம்கலைந்து எழுந்த முருகன் விடுதியை விட்டு வெளியே வந்தான்.

வீதி வழியே சிலர் கையில் பூக்கூடையுடன் சென்று கொண்டிருப்பதைப் பார்த்தான்.

அவர்களைப் பார்த்து, "நீங்கள் எங்கே செல்கிறீர்கள்?" என்று கேட்டான்.

அவர்களில் ஒருவன், "நம் நகரத்திற்குத் துறவியார் ஒருவர் வருகை தந்துள்ளார். யார் என்ன கேட்டாலும் அவர்கள் கேட்டது கிடைக்க வழி செய்கிறார்" என்றான்.

இதைக் கேட்ட முருகன் தன் ஆசை நிறைவேற வழி கிடைத்துவிட்டது என்று மகிழ்ந்தான். குளித்து முடித்து நெற்றியில் திருநீறு துலங்க, துறவியார் இருக்குமிடம் சென்றான். அவர் கால்களில் விழுந்து பணிவாக வணங்கினான்.

துறவியார் அருளொழுகும் கண்களால் முருகனைக் கனிவாகப் பார்த்தார். "அன்பனே! எழுந்திரு! உனக்கு என்ன வேண்டும்?" என்று அன்புடன் கேட்டார்.

அதற்கு முருகன், 'தான் நகரத்தில் பார்த்ததை எல்லாம் விளக்கி, நான் ஒரே சமயத்தில் பேரரசனாகவும், பெருவீரனாகவும், பேரறிஞனாகவும் திகழ வேண்டும். தாங்கள் தாம் அருள் செய்ய வேண்டும்" என்று வேண்டினான்.

"அன்பனே! உன் ஆசை எதுவும் இப்பிறப்பில் ஈடேறாது. மறுபிறப்பில் ஏதேனும் ஒரே ஒரு ஆசை மட்டும் நிறைவேற வழி சொல்கிறேன்.

இங்கிருந்து பத்து கல் தொலைவில் தெய்வகங்கை என்ற ஆறு ஓடுகிறது. அந்த ஆற்றிற்கு ஒரு சிறப்பு உள்ளது. முழுநிலவன்று அதிகாலையில் ஏதேனும் ஒரே ஒரு ஆசையைச் சொல்லிவிட்டு அதில் மூழ்கி இறந்தால் மறுபிறப்பில் அந்த ஆசை நிறைவேறும். ஒன்றிற்கு மேற்பட்ட ஆசைகளைச் சொன்னால் எந்த ஆசையுமே நிறைவேறாது. உனக்கு வெற்றி உண்டாகட்டும். போய் வா" என்றார் துறவியார்.

துறவியாரிடம் விடைபெற்றுக் கொண்டு வெளியே வந்தான் முருகன். முழுநிலவு நாளன்று தெய்வ கங்கை ஆற்றை நோக்கி நடந்தான்.

'மறுபிறப்பில் அரசனாவதா? வீரனாவதா? அறிஞனாவதா? எதைச் சொல்லி விட்டு ஆற்றில் மூழ்குவது? மூன்றில் எதை இழந்தாலும் அதனால் வரும் சிறப்புப் போய்விடுமே' என்று சிந்தித்தபடியே ஆற்றங்கரையை அடைந்தான் அவன்.

ஆற்றில் வெள்ளம் கரைபுரண்டு ஓடிக் கொண்டிருந்தது. அவனுக்கு முன் மூழ்கி இறப்பதற்காக மூன்று பெண்கள் நின்றிருந்தனர்.

அவர்கள் என்ன வேண்டுகிறார்கள் என்பதை மறைந்து நின்று கவனித்தான் முருகன்.

முதலாமவள் ஆற்றைப் பார்த்து, "நான் அடுத்த பிறப்பில் அரசியாகப் பிறக்க வேண்டும். அரசர்களையும் வென்று வெற்றிவாகை சூடிய பேரரசரையே நான் மணக்க வேண்டும். இந்த ஒரே ஆசையை என் அடுத்த பிறப்பில் நிறைவேற்றி வைப்பாயாக," என்று வேண்டி மூழ்கினாள்.

இரண்டாமவள், "நான் அடுத்த பிறப்பில் பல அறிஞர்களை வெல்லக் கூடிய அறிவுக் கூர்மை உடையவளாகப் பிறக்க வேண்டும். என்னையே வெல்லும் பேரறிஞரையே நான் திருமணம் செய்து கொள்ள வேண்டும்" என்று ஆற்றில் மூழ்கினாள்.

மூன்றாமவள், "நான் வீரத்தையே விரும்புகிறேன். ஈடு இணையற்ற மாவீரன் ஒருவனே எனக்குக் கணவனாக வேண்டும்," என்று ஆற்றில் மூழ்கினாள்.

இதை எல்லாம் கேட்டுக் கொண்டிருந்த முருகன் ஏதோ சொல்லிவிட்டு ஆற்றில் மூழ்கினான்.

மறுபிறப்பில் அவன் பேரரசனாகவும், மாவீரனாகவும், பேரறிஞனாகவும் விளங்கினான்.

அவன் என்ன வேண்டி ஆற்றில் மூழ்கி இருப்பான்?

விடை:

"சற்று முன் ஆற்றில் மூழ்கிய மூவரும் அடுத்த பிறப்பில் எனக்கு மனைவியாக அமைய வேண்டும்" என்று வேண்டி மூழ்கினான்.


ரயில் பயணங்கள்


நீராவியால் இயங்கும் ரயில் எஞ்சினைக் கண்டுபிடித்து ரயில்களை ஓட்டுவதற்கு முன்பே, ஒரு ரயில்வே நிறுவனம் இயங்கி வந்திருக்கிறது. இந்தச் செய்தி ஆச்சரியமானதுதான்! ஆனால் உண்மை. அந்த ரயில் நிறுவனம் இங்கிலாந்திலுள்ள சௌத் வேல்ஸில் தொடங்கப்பட்டு 'ஆயிஸ்டர் மவுத்' (Oyster mouth) என்ற பெயரில் குதிரைகளை வைத்து இயக்கப்பட்டது. தண்டவாளங்களுக்கு இடையே குதிரை ஓட, தண்டவாளத்தில் பயணிகளுடன் ரயில் பெட்டிகள் ஓடின.

உண்மையான ரயில் போக்குவரத்துக்கு வித்திட்டது, ஸ்காட்லாந்தைச் சேர்ந்த ஜார்ஜ் ஸ்டீபன்சன் என்பவர் கண்டுபிடித்த 'ராக்கெட்' என்ற நீராவியால் இயங்கிய ரயில் வண்டிதான். அதை அவர் பயணிகளுடன் 25.9.1825 ல் வெற்றிகரமாக ஓட்டிக் காட்டினார். அந்த ரயில் 12 மைல் தூரம் செல்ல 3 மணி 7 நிமிடம் எடுத்துக் கொண்டது. இந்த ரயிலைக் கண்டுபிடித்ததன் மூலம் போக்குவரத்தில் புரட்சி ஏற்படுத்திய ஸ்டீபன்சன் நீண்ட நாட்கள் வரை ஒரு ரயில் டிரைவராகவும் பணியாற்றியிருக்கிறார். அந்த சமயத்தில்தான் உலகின் முதல் ரயில் விபத்து, ரயிலைக் கண்டுபிடித்த இவர் கண் முன்பே நடந்தது.

ஒருமுறை லிவர்பூல் மான்செஸ்டர் நகருக்கு இடையேயான ரயிலை இவர் ஓட்டிச் சென்றார். ரயில் ஒரு ஸ்டேஷனில் நின்றதும் அதில் பயணம் செய்த வில்லியம் டிக்கின்ஸன் என்ற பிரிட்டிஷ் பாராளுமன்ற உறுப்பினர் கீழே இறங்கி, மீண்டும் ரயில் ஓடத் துவங்கியதும் ஏற முயன்றார். ரயில் பெட்டியின் கதவு மோதி, அடுத்த தண்டவாளங்களுக்கு இடையே விழுந்து, அதில் வந்த ஒரு ரயில் மோதி உயிரிழந்தார். ரயில் விபத்தில் மரணமடைந்த முதல் நபர் என்பதால், அவருக்குச் சிலை செய்து லிவர்பூலில் வைத்திருக்கிறார்கள்!

இங்கிலாந்தில் ரயில் பயணம் தொடர்ந்ததை அடுத்துப் பல உலக நாடுகள் இங்கிலாந்திலிருந்து எஞ்சினியர்களை வரவழைத்து, தங்கள் நாடுகளிலும் ரயிலை ஓடவிட்டன. கி. பி. 1922 முதல் 1941 வரை லண்டனின் வடகிழக்கு ரயில்வேயில் ஒரு பொறியியல் எஞ்சினியராகப் பணியாற்றிய ஹெர்பட் நிகல் கிரஸ்லி என்பவர் கண்டுபிடித்து, மணிக்கு 100 மைல் வேகத்தில் ஓடிய 'பிளையிங் ஸ்காட்ஸ்மென்'' என்ற ரயிலும் அந்தக் கால கட்டத்தில் பயணம் செய்ய உதவி





புரிந்தது.

ருடல்ப் டீசல் என்பவர் டீசல் எஞ்சினைக் கண்டுபிடித்த பிறகு, முதன் முதலாக டீசலில் இயங்கும் ரயிலை ஸ்வீடன் நாட்டில் பயன்படுத்தினர். அதில் சில மாற்றங்களுடன் ஜெர்மனி பயன்படுத்தியது. ஜெர்மனியில் 1924 ல் தயாரான டீசல் எஞ்சினைக் கொண்டு ரஷ்யா ரயில் போக்குவரத்தை விரிவுபடுத்தியது. இங்கிலாந்தில் 1934 ல்தான் டீசல் எஞ்சின் கொண்ட ரயில்கள் ஓடவிடப்பட்டன!

அதற்கு முன்பு இங்கிலாந்தில் அந்நாட்டைச் சேர்ந்த ராபர்ட் டேவிட்சன் என்பவர் கண்டுபிடித்த மின்சார பேட்டரியால் இயங்கும் ரயில் ஓடியது. எடின்பர்க் முதல் கிளாஸ்கோ வரை ஓடிய அந்த ரயில் சிறந்த இடத்தைப் பெறமுடியாததால், ஜெர்மன் எஞ்சினியரான வெர்னர் வான் சைமன் என்பவர் மின்சார ரயிலைக் கண்டுபிடித்து 1879 ல் பெர்லினில் சிறப்பான முறையில் வெள்ளோட்டம் நடத்தினார். அவர் உருவாக்கிய உலகின் முதல் மின்சார ரயில் 1881 ல் ஜெர்மனியின் லிச்டர்ஃபெல்டு என்ற நகரில் ஓடியது.

ஏர்கண்டிஷன் செய்யப்பட்ட ரயிலை முதன் முதலில் அமெரிக்கா 1931 ல் பால்டிமோருக்கும் ஒஹியோவிற்கும் இடையில் ஓடவிட்டது. என்றாலும், 1870 ல் இந்தியாவில் ரயிலில் பயணம் செய்பவர்களுக்கு வசதியாக ரயில்பெட்டியில் அமைக்கப்பட்ட ஓட்டைகளில், ஈரத் துணியைக் கட்டி பயணிகளை உஷ்ணம் தாக்காதவாறு எளிய முறையில் ஏர்கண்டிஷன் வசதி செய்துள்ளார்கள் என்பதற்கு ஆதாரங்கள் இருக்கின்றன. இப்படி, படிப்படியாகப் பயணம் செய்து முன்னேறியுள்ள ரயில்வே நிர்வாக அமைப்புக்களைப் பற்றிய சுவையான தகவல்கள் வருமாறு:

** நியூயார்க்கிலுள்ள கிராண்ட் சென்ட்ரல் டெர்மினல் ரயில் நிலையம்தான் உலகிலேயே மிகப் பெரியது. இங்கு தினமும் 550 ரயில்களும், 18,000 பயணிகளும் வந்து போகின்றனர். பன்னிரண்டு பிளாட்பாரங்கள் உள்ளன.

** சீனாவில் பீகிங் ரயில் நிலையத்திலுள்ள வெயிட்டிங் ரூம்கள்தான் உலகிலேயே பெரியது. சுமார் 14,000 பேர் தங்கலாம்.

** தென் அமெரிக்காவில் சிலி நாட்டில் 15,817 அடி உயரத்திலுள்ள ரயில் நிலையம்தான் உலகிலேயே உயரமான ரயில் நிலையம்.

** ஐரோப்பாவிலேயே உயரமான ரயில் நிலையம் சுவிஸ் நாட்டில் உள்ள ஜாங்ஃபிராவ் ரயில் நிலையம்தான். உயரம் 11,333 அடி.

** மேற்கு வங்காள மாநிலத்தின் கோரக்பூர் ரயில் நிலைய பிளாட்பாரம்தான் உலகிலேயே நீளமானது. இதன் நீளம் 2,733 அடி (833 மீட்டர்).

** நீளமான ரயில் பாலம் சோன் நதியின்மேல் அமைந்துள்ளது. அதன் நீளம் 3.064 கி. மீ.

** நீளமான சுரங்க ரயில்பாதை டார்சி ரயில் பாதைதான். இது 1,200 மீட்டர் நீளமுள்ளது.

** பூமிக்கடியில் செல்லும் ரயில் பாதைகளிலேயே மிகவும் நீளமானது லண்டனில் இருக்கிறது. 252 மைல் நீளம் கொண்ட அந்த ரயில் பாதை 279 ரயில் நிலையங்களை இணைக்கிறது.

தில்லை. வெ. தமிழரசன்

மூன்று வயதுப் பையன் முதல் முதலாக அவனது நிழலைப் பார்த்து,

"இது என்னப்பா?" என்று கேட்கிறான்.

"இது உன் நிழல்தாண்டா."

"நான் என்ன இவ்வளவு கறுப்பாகவா இருக்கிறேன்?"

— வாணு.



பொங்கி எழும் சிங்கங்கள்-12

சுதந்திர எரிமலை



கங்காராமமூர்த்தி

பாரதத்தின் விடுதலைக்காக, தாய்நாட்டில் இருந்து உழைத்தவர்களைப் போலவே, வெளிநாட்டில் இருந்து கொண்டே போராடிய இந்தியர்களும் ஏராளமானவர்களாவர். அவர்களில் ஆங்கில அரசினரைக் கலங்கடித்தவர்களில் விநாயக் தாமோதர் சாவர்க்கரும் ஒருவராவார்.

"இந்தியன் ஹவுஸ்" என்று அழைக்கப்பட்ட ஒரு மாளிகை, லண்டனில் வாழ்ந்து வந்த இந்தியர்களின் சங்கமாக இருந்தது. இதிலே இருந்தவர்கள், இந்திய விடுதலையைத் தங்களது வாழ்வின் முதல் லட்சியமாகக் கொண்டிருந்தார்கள்.

இந்தியாவில் போர்த் தளவாடங்களைக் குவிப்பதுதான் முதல் பணி என நினைத்த சாவர்க்கர், அதற்குரிய நூல்களைப் படித்தார். நண்பர்களுக்கும் பரிசளித்தார். "வெடிகுண்டுகள் தயாரிப்பது எப்படி?" என்ற நூல் அவர்களுக்குப் பயனளிப்பதாக இருந்தது.

இரகசியமான கூட்டம் ஒன்றைக் கூட்டி, அதில் இந்தியர் சிறைகளில் வாழும் கொடுமைகளைச் சுட்டிக் காட்டிப்பேசினார். விநாயக்தாமோதர் சாவர்க்கரின் உடனிருந்த ஒருவர், இவைகளை லண்டன் அரசுக்குத் தெரிவித்துவிட்டார். சாவர்க்கரின் உயிர்த் தோழர் அதனைக் கண்டறிந்து, உடனடியாக, கீர்த்திகர் என்ற அந்த துரோகியை பயமுறுத்தித் துரத்திவிட்டார்.

சாவர்க்கரின் உடன் பிறந்த, கணேஷ் ராவ் தேச விடுதலைக் கவிதைகள் எழுதியதற்காக அவர்மீது குற்றம் சாட்டி, அரசாங்கம் அவரைச் சிறையிலடைத்தது. விசாரணைக்காக கணேஷ் ராவைக் கலெக்டர் அழைத்துச் சென்றபோது, ஒருவன் கலெக்டரைச் சுட்டுக் கொன்றான்.

சில நாளில் விநாயக் தாமோதர சாவர்க்கரும் இலண்டன் இரயில் நிலையத்தில் கைது செய்யப்பட்டார்.

எஸ்.எஸ்.மோர்யா என்றகப்பலில் ஜூலை 1ம் தேதி 1910ம் ஆண்டு இந்தியாவுக்குக் கிளம்பினார்கள்: பிரான்சின் துறைமுகமான மோர் சேய்ல்ஸில் சிலநாள் நிற்கும் என்று வீர சாவர்க்கர் அறிந்தார். போலீஸ் அதிகாரியிடம், "கழிப்பறைக்குச் செல்ல வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார். "சில நிமிடங்களில் வர வேண்டும்" என்று கூறி அனுமதி அளித்தார் போலீஸ் அதிகாரி.

கழிப்பறையின் மேல்புறத்திலிருந்த

வளையின் வழியாக வெளியே கடலில் குதித்த வீர சாவர்க்கரை, கப்பல் தளத்திலிருந்த அதிகாரி ஒருவன் பார்த்துவிட்டான். பின்பு சும்மா இருப்பானா? தேடிச் சென்று, வீர சாவர்க்கரை மீண்டும் கப்பலேற்றினார்கள்.

பம்பாயில் தனி விசாரணை நடந்தது. ''போர் உணர்ச்சியைத் தூண்டி, ஆயுதங்கள் செய்து விநியோகித்தார்'' என்று குற்றம் சாட்டப்பட்டார். கலெக்டர் ஜாக்சனைக் கொன்ற துப்பாக்கி வெடி மருந்துகள், சாவர்க்கரால் இலண்டனிலிருந்து அனுப்பப்பட்டவை என்று கூறினார்கள். எனவே, இக்குற்றங்களுக்காக நீதிமன்றம் சாவர்க்கரை நாடு கடத்த வேண்டும் என்று தீர்ப்பளித்தது. வீரவுரை ஆற்றுவதிலே புகழ் பெற்ற சாவர்க்கர் நீதிமன்றத்திலேயும்; யாவரும் கலங்கும் உரை நிகழ்த்தினார்: ''தியாகங்களும், துன்பங்களும்தான் ஒரு நாட்டுக்குச் சுதந்திரத்தை அளிக்க வல்லவை.''

சாவர்க்கரை பம்பாயில் டோங்ரி ஜெயிலுக்கு அழைத்துச் சென்றார்கள். இரண்டு குற்றங்களுக்காக, மொத்தம் 50 ஆண்டுகள் சிறைவாசம் இருக்க வேண்டும் என்று கூறிய சிறை அதிகாரிகளை நோக்கி, ''ஓ! இன்னும் ஐம்பது ஆண்டுகள் உங்கள் ஆட்சி நிலைத்திருக்கும் என்று கனவு காண்கிறீர்களா?'' என்று கேட்டார். அவரது வாசகங்கள் ஒவ்வொரு விடுதலைப் போராட்ட வீரனின் நெஞ்சிலும் எதிரொலிக்கத் துவங்கின.

பல சிறைகளுக்கு அவரை மாற்றி, பிறகு, சென்னைக்கு வந்து, அங்கிருந்து அந்தமான் தீவுகளுக்குச் செல்ல கப்பல் ஏற்றினார்கள்.

வங்காள விரிகுடாவில் உள்ள பல தீவுத் தொடர்கள் அந்தமான் எனப்படும். அத்தீவில் ஆங்கில அரசாங்கம் பல சிறைகளைக் கட்டியிருந்தது. பயங்கரமான குற்றவாளிகளும், சுதந்திரப் போராட்ட வீரர்களும் ஆயிரக்கணக்கில் இந்தத் தீவில் சிறை வைக்கப்பட்டிருந்தனர். தாய்நாட்டுடன், அவர்களது தொடர்புகளைத் துண்டிப்பது தானே அரசின் நோக்கம்? சாவர்க்கரையும் ஒரு தனியறையில் பூட்டி வைத்தது.

ஜெயிலராக அங்கு இருந்தவர் மிஸ்டர் பாரி என்பவர். ''சாவர்க்கர் அங்கு வருவதற்கு முன்பே, அவரது பெயர் மிகவும் பிரபலமாகியிருந்தது. எனவே, பாரி, சாவர்க்கரைக் கண்டதும், ''ஓ! நீதான் மார்சேயில்ஸில் தப்பி ஓட முயன்றவனோ?'' என்று கிண்டலாகக் கேட்டார்.

''ஆம். என்னை விடுவித்துக் கொள்ளவே தப்ப முயன்றேன்'' என்று துணிவாகக் கூறினார் சாவர்க்கர்.

''இங்கேயும் அதுபோல் செய்து விடாதே! உன் நன்மைக்குத்தான் சொல்கிறேன். இந்தச் சிறைச்சாலையின் நான்கு புறங்களிலும் அடர்ந்த காடுகள் இருக்கின்றன. அங்கே ஆதிவாசிகள் வசிக்கிறார்கள். உன்னைப் பிடித்தால் அடித்துக் கொன்று தின்று விடுவார்கள்.''

''எனக்குத் தெரியும். இது போர்ட் பிளேயர், மார்சேயில்ஸ் இல்லை!'' என்று கூறினார் சாவர்க்கர்.

சிறைச்சாலையில் தனிமையில் அடைந்து கிடப்பதோடு, கடுமையான வேலையும் செய்ய வேண்டும். கனமான சுத்தியலால், மரங்களைத் துண்டு துண்டாக்குவதுதான் சாவர்க்கரின் பணி.

அதற்குப் பிறகு தேங்காய் எண்ணெய் பிழியும் செக்குகளை ஓட்டும் பணியைச் சாவர்க்கருக்குக் கொடுத்தார்கள். கடினமான அந்தச் செக்கிழுக்கும் வேலையில் சாவர்க்கர் ஈடுபடும்போது மிகுந்த களைப்பும் உடல் வலியும் உண்டாயின அவருக்கு.

''தண்ணீர், தண்ணீர்'' என்று நாவறளக் கேட்டார்.

''தண்ணீரா? ஒரு சிறைக் கைதிக்கு இரு கோப்பைகள் தண்ணீர்தான் தர வேண்டும் என்பது விதி. உனக்கு இது வரை மூன்று கோப்பைகள் தந்தாயிற்று. ம். செக்கை இழு'' என்று மிரட்டினான் சிப்பாய்.

தாகத்தாலும் சோர்வாலும் மயங்கிக் கீழே விழுந்துவிட்ட சாவர்க்கரைக் காலால் உதைத்து எழுப்பினான்.

பெருமூச்சு விட்டுக்கொண்டே வேலை செய்த சாவர்க்கருக்கு, களைப்பினால், ஜெயிலில் தந்த உணவையும் உண்ண முடியவில்லை. மாலையில்,

சாவர்க்கர் இழுத்ததால்கிடைத்தஎண்ணெயின் அளவு குறைவாக இருப்பதாக ஜெயில் அதிகாரி கூறினான். அதற்குத் தண்டனையாக, அன்று இரவு முழுவதும் செக்கிழுக்க வேண்டும் என்றும் சாவர்க்கருக்குக் கட்டளையிட்டான்.

பல கொடுமைகளை சாவர்க்கர் அனுபவித்தாலும், அவரது மனம் சுதந்திரமாகச் சுற்றித் திரிந்தது. கற்பனையில் தாய் நாட்டின் சுதந்திரத்தைக் கண்டார்.

சிறைச்சாலையின் கொடுமைகளைப் பற்றி அறிந்திருந்தாலும், நேரிலே அவைகளைக் காண நேர்ந்தபோது, சாவர்க்கரின் நெஞ்சம் துடித்தது. சிறைக் கைதிகளிடையே கொடுமைகளை எதிர்க்கும் உணர்ச்சியைத் தூண்ட வேண்டும் என்று பலவாறு சிந்தித்தார்.

மோசமான உணவும், ஒரே மாதிரியான வேலையும், கொடுமையான தனிமையும் பலரைத் துன்புறுத்தியுள்ளன. இவற்றின் விளைவாக இந்து பூஷன் ராய் என்ற கைதி, தன் உயிரைத் தானே மாய்த்துக் கொண்டார். உல்லாகர் தத் என்பவரோ பைத்தியமாகி விட்டார். கொடுமைகள் கொஞ்சமா நஞ்சமா? பலவிதமான நிலைகளில் சங்கிலிகளால் பிணைக்கப்பட்டு குனியவும் நிமிரவும், கைகளையோ கால்களையோ அசைக்கவும் முடியாத நிலையிலும் வைக்கப்பட்டனர். இவைகள் வெளியுலகுக்குத் தெரிய வர வேண்டும் என்று சாவர்க்கர் நினைத்தார்.

கல்லுடைக்கும் போதும், தறி ஓட்டும் போதும் சாவர்க்கர் மெல்லிய குரலில், உடன் இருக்கும் கைதிகளுக்கு உங்கள் நிலைமையைச் சீர்திருத்தப் போராட வேண்டும் என்று யோசனைகள் சொல்வார். சிலநாள் கைதிகளை அறை மாறிப் போகச் சொல்லுவார். சாவர்க்கர் அறையில் ஜனநாயக தத்துவங்களை ஜெயில் சுவரில் எழுதியிருந்தார். பல கைதிகள் அவைகளைப் படிக்க நேர்ந்தது. தாய்நாட்டிற்காக உதிரம் சிந்தத் தயாராக இருப்போம் என்ற நிலையில் அவர்கள் இருந்தார்கள்.

"செக்கிழுக்க மாட்டோம்" என்று பல கைதிக்ன் போராடினார்கள். கசையடிகள் கிடைத்தன. அதையெல்லாம் பொறுத்துக் கொண்டார்கள். இவை



கள் எல்லாம் சில கைதிகள் அனுப்பிய கடிதங்கள் மூலமாக வெளியுலகுக்கு எட்டியது. அவ்வளவுதான். உலகத்திலுள்ள பத்திரிகைகள் எல்லாம் அந்தமானில் ஆங்கில அரசு கைதிகளை நடத்தும் விதங்களைக் கண்டித்திருந்தன.

இதன் விளைவாக இங்கிலாந்திலிருந்து ஒரு பெரிய அதிகாரி, அந்தமானுக்குவந்துஜெயில்களைப்பார்வையிட்டார். அதிகாரவர்க்கத்தின் ஓர் அங்கமான அவர் கண்களுக்கு, அந்தமானில் சிறைக் கைதிகளை நடத்தும் விதம் குறித்து எந்தவிதமான தவறும் தெரியவில்லை. சாவர்க்கரைக் கண்டு இவர் பேசினார்.

''சாவர்க்கர், நாங்கள் கொடுமையாகவா நடத்துகிறோம்? இதுவே உங்கள் ராஜாக்களாக இருந்தார்களானால் உங்களையெல்லாம் யானையின் காலால் இடறச் செய்திருப்பார்களா இல்லையா?''

''புரட்சிக்காரர்கள் யானையின் காலால் இடறப்பட வேண்டியவர்கள்தான். ஆனால், அதே புரட்சிக்காரர்கள் வெற்றி பெற்றுவிட்டால், நாட்டின் அரசன் தலை இழக்க நேரிடும். உங்கள் முதலாம் சார்லஸ் மன்னரைப் போல.''

பலர் உண்ணாவிரதமும், வேலை செய்யாத போராட்டமும் செய்ததால் அரசாங்கம் சிறைவிதிகளில் சிலவற்றை உடனடியாக மாற்றியது. ஆயுள் தண்டனையை 14 வருடங்கள் என்று குறைத்தது. வீர சாவர்க்கரின் தண்டனைக் காலம் ஐம்பதாண்டுகள் என்றிருந்தது இருபத்து எட்டு ஆண்டுகளாயின..

1921 ஆம் ஆண்டு, முதலாம் யுத்தம் முடிந்தபின்பே அரசாங்கம் விடுத்த அறிவிப்பின்படி அந்தமானிலிருந்த கைதிகள் தாய்நாடு திரும்பினர். தாய்நாட்டுக்கு வந்தபோதிலும் வீர சாவர்க்கரை 'ஓர் எரிமலை' என்றே வர்ணித்த ஆங்கில அரசு தனது கண்காணிப்பிலேயே வைத்திருந்து 1937 ஆம் ஆண்டுதான் விடுதலை செய்தது.

விடுதலைக்காக அயராது போராடிய வீர சாவர்க்கர் இந்திய மண்ணிலே சுதந்திரத் திருநாளைக் காணும் பேறு பெற்றார்! சுதந்திர எரிமலையான வீர சாவர்க்கர் சுதந்திரத்தைக் கண்டு மகிழ்ந்தார்.

புரிந்து




ஒரு சிறுவனின் வலது கை நினைத்தது: 'நாம் எத்தனை வேலை செய்கிறோம்? காலையில் எழுந்தது முதல் இரவு படுக்கைக்குச் செல்லும்வரை 'உழைப்பு, உழைப்பு, உழைப்புத்தான்! என்னை இடைவிடாமல் சில சமயம் பயன்படுத்துகிறானே மனிதன்; என்னைப் போல இடது கை உழைக்கிறதா! இடது கை இருந்தும் ஒன்றுதான், இல்லாமலும் ஒன்றுதான்!'

அப்போது வலது முழங்கையில் 'சுரீர்' என்று ஓர் எறும்பு கடித்தது. உடனே, இடது கை சடாரென்று அந்த எறும்பைத் தட்டிவிட்டுக் கடித்த இடத்தைத் தடவிக் கொடுத்தது. இப்போது வலது கைக்குப் புத்திவந்தது தன் அகம்பாவத்தைஎண்ணி வருந்தியது. இடது கையை ஆரத் தழுவி மன்னிப்புக் கேட்டுக் கொள்ளச் சமயம் பார்த்தது.

அந்தச் சிறுவன் பூஜை அறையினுள் நுழைந்தான். வலது கையும், இடது கையும் ஒன்றாகச் சேர்த்துக் குவித்து இறைவனை வணங்கினான். வலதுகை இப்போது ஒரு பெரும் தத்துவத்தையே புரிந்து கொண்ட பெருமிதத்தில் இடதுகையுடன் இரகசியம் பேசியது: 'நீயில்லையேல் நானில்லை; நானில்லையேல் நீயில்லை!'

— ஆர். ராஜலட்சுமி



தொண்டை அடைப்பான்

குழந்தைகளைப் பாதிக்கக் கூடிய நோய்களுள் மிகவும் முக்கியமானதும், உயிருக்கு ஆபத்து தரக் கூடியதுமான 'டிப்தீரியா' (Diphtheria) என்றழைக்கப்படும் 'தொண்டை அடைப்பான்' நோயைப் பற்றி இக்கட்டுரையில் பார்ப்போம்.

இந்நோய் பெரும்பாலும் இரண்டு வயது முதல் ஐந்து வயது வரையிலான குழந்தைகளையே அதிகமாகப் பாதிக்கும். சில சமயங்களில் பத்து வயது வரையிலான குழந்தைகளையும் இது பாதிக்கக் கூடும்.

நகரங்களில் குப்பை கூளம் நிறைந்த இடங்களிலும், தூசு படிந்த அறைகளிலும், அழுக்கு நிறைந்த சேரிகளிலும், சுகாதாரக் குறைவான கிராமப்புறங்களிலும் இந்நோய்க் கிருமிகள் அதிகமாகக் காணப்படுகின்றன.

பாதிக்கப்பட்ட நோயாளியின் தொண்டையிலும், உமிழ்நீரிலும், மூக்குச் சளியிலும் இக்கிருமிகள் மில்லியன் கணக்கில் வாசம் செய்யும்.

இச்சமயங்களில் நோயாளியோடு பழகுவதாலும், ஈ, கொசு, போன்றவற்றாலும் இக்கிருமிகள் மற்றவர்களுக்கு எளிதாகப் பரவி விடுகின்றன.

சில சமயங்களில் நோய் குணமான பிறகும் கூட பாதிக்கப்பட்ட குழந்தையின் தொண்டையிலும், உமிழ்நீரிலும் நச்சுத் தன்மை கொண்ட 'டிப்தீரியா கிருமிகள்' சில மாதங்களுக்கு உயிருடன் இருக்கும்.

இதை அறியாத சில பெற்றோர்கள் அவசரப்பட்டு அக்குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்பிவிடுகிறார்கள். அதனால் பள்ளியில் மற்றக் குழந்தைகளுக்கும் 'டிப்தீரியா' நோய் பரவி விடக் கூடிய அபாயம் நேரிடுகிறது.

டிப்தீரியா கிருமிகள் நம் உடலுக்குள் புகுந்ததும், முதல் வேலையாகத் தொண்டையில்தான் வாசம் செய்யும். அங்கிருந்துகொண்டு 'டாக்ஸின்' (Toxin) எனப்படும் நஞ்சை இரத்தத்தில் கலந்துவிடும். இந்த நஞ்சு உடலின் முக்கிய உறுப்புக்களான இதயம், சிறு

டாக்டர் கு. கணேசன்

நீரகம், மூளை, நரம்பு மண்டலம் ஆகியவற்றைப் பாதிக்கக் கூடியது.

இந்நோயை மூளையிலேயே கிள்ளி எறியாவிட்டால் இதயம் பாதிப்படைந்து உயிருக்கு ஆபத்து விளைவிக்கும். மூளையும், நரம்பு மண்டலமும் பாதிக்கப்படும் போது, மூச்சு விடுவதில் சிரமம் ஏற்படும். கண் பார்வையை இழக்க நேரிடும். கை, கால் நரம்புகள் செயலிழந்து 'வாத நோய்' (Paralysis) வரக் கூடும்.

இந்நோயின் ஆரம்ப அறிகுறிகள் யாவை? இலேசான காய்ச்சல், தொண்டை வலி, இருமல், உடல் பலவீனம் ஆகியவை ஆரம்பத்தில் இருக்கும். இரண்டாம் நாள் காய்ச்சல் அதிகமாகும்; தொண்டை வலி கூடும்; இருமல் அதிகரிக்கும்; வாந்தி வரும்; கழுத்தில் நெறி கட்டும். பேசுவதிலும் உணவு விழுங்குவதிலும் சிரமம் ஏற்படும்.

நோய் ஆரம்பித்த 48 வது மணி நேரத்தில் தொண்டையில் வெள்ளையும் மாநிறமும் கலந்த நிறத்தில் ஒரு ஜவ்வு படர ஆரம்பிக்கும். இதை லேசாகச் சுரண்டினால்கூட இரத்தம் பீறிட்டு வரும். அதனால்தான் இந்த ஜவ்வை அகற்ற முடிவதில்லை.

இது தொண்டையில் மட்டுமல்லாமல், மூச்சுக் குழலையும் சேர்த்துப் படர ஆரம்பித்துவிட்டால் மூச்சுக் குழல் அடைபட்டு நோயாளி இறந்துவிடக் கூடும்.

எனவே, உயிருக்கு ஆபத்து தரக் கூடிய இந்நோயை ஆரம்பத்திலேயே கவனிக்க வேண்டியது மிகவும் அவசியம்.

குழந்தைகளுக்குக் காய்ச்சலும், தொண்டை வலியும் வந்துவிட்டால், உடனே மருத்துவரிடம் காண்பித்து முறையான ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

மருத்துவர், 'டிப்தீரியாவாக இருக்குமோ' என்று சந்தேகித்தால், பாதிக்கப்பட்ட குழந்தையின் தொண்டையை 'Throat Swab' ஆல் துடைத்தெடுத்து, பாடம் செய்து, மைக்ரோஸ்கோப் மூலம் டிப்தீரியா கிருமிகளைக் கண்டறிந்து நோயை ஊர்ஜிதம் செய்வார்.

அதன் பின்னர் குறைந்தது மூன்று வாரங்களுக்கு மருத்துவமனையில் வைத்தியம் செய்து கொள்ள வேண்டும்.

முதலில் டிப்தீரியா உள்ள குழந்தையை மற்றக் குழந்தைகளிடமிருந்து பிரித்து வைக்க வேண்டும். நோயின் தீவிரத்தை அறிந்து ஆன்டி டிப்திரிடிக் சீரம்' (Anti-Diphtheritic Serum) என்ற மருந்தை, சதை ஊசியாகவோ, நரம்பு ஊசியாகவோ தேவையான அளவுக்கு மருத்துவர் செலுத்துவார். நோயின் வீரியத்தைக் குறைக்கத் தகுந்த மருந்தைக் கொடுப்பார். இதயம், மூளை, நரம்பு மண்டலம் ஆகியவை பாதிக்கப்படாமல் இருக்கத் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வார்.

இவ்வளவு சிரமம் எதற்கு? இந்நோய் வருமுன்பே காக்க வழிமுறைகள் இல்லையா என்றுதானே கேட்கிறீர்கள்?

இருக்கிறதே!

அந்தத் தடுப்பு முறைகளைச் சரியான வகையில் கடைப்பிடித்தால் 'டிப்தீரியா' குழந்தைகளை அண்டாது என்பது உண்மை.

இதோ அந்தத் தடுப்பு முறைகள்:

— குழந்தை பிறந்த மூன்று, நான்கு, ஐந்தாவது மாதங்களில் 'டிரிபிள் ஆன்டிஜன்' (Triple Antigen) என்று சொல்லப்படும் 'முத்தடுப்பு ஊசி'யை நான்கு

* உலகிலேயே பெரிய சைக்கிள் தொழிற்சாலை நாட்டிங்காமில் உள்ள ராலி கம்பெனிதான். 62 ஏக்கர் நிலத்தில் அமைந்துள்ள இந்தக் கம்பெனியில் 10,000க்கும் மேற்பட்டவர்கள் பணி புரிகிறார்கள். இங்கு ஆண்டொன்றுக்கு 10,00,000 சைக்கிள்கள் தயாரிக்கப் படுகின்றன.



வாரங்களுக்கு ஒருமுறை மொத்தம் மூன்று ஊசிகள் போட்டுக் கொள்ள வேண்டும்.

— அதற்குப் பிறகு ஒன்றரை வயதிலும், ஐந்து வயதிலும் மீண்டும் இரு ஊசிகள் போட்டுக்கொள்ள வேண்டும்.

— அதன் பின்னர் பத்து வயதில் 'டிப்தீரியா — டெட்டனஸ்' (DT) என்ற தடுப்பு ஊசியைப் போட்டுக் கொள்ள வேண்டும்.

(இந்தத் தடுப்பு ஊசிகளின் விலை மிகக் குறைவுதான். அரசாங்க மருத்துவமனைகளிலும், தனியார் மருத்துவ மனைகளிலும் இவை எளிதாகக் கிடைக்கின்றன.)

— டிப்தீரியாவால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுடன் மற்றக் குழந்தைகள் குறைந்தது இரண்டு மாதங்களுக்குப் பழகக் கூடாது.

— குறிப்பிட்ட நகரங்களில் அல்லது கிராமங்களில் டிப்தீரியா பரவி வரும்போது, குழந்தைகளை முன்னெச்சரிக்கையாக மருத்துவரிடம் காண்பித்து மருத்துவம் செய்து கொள்ள வேண்டும்.

— கடைசியாக ஒரு வார்த்தை — உங்களையும் உங்கள் சுற்றுப்புறத்தையும் சுத்தமாகவும், சுகாதாரத்துடனும் பேணி வாருங்கள். அந்தச் சுத்தம் உங்களுக்கு சுகம் தரும்.



தலைமுதல் தாள்வரை

* தலைக்கு மேலே சாண் போனால் என்ன முழம் போனால் என்ன?
* மயிர் சுட்டுக் கரியாகுமா?
* குடல் கூழுக்கு அழுகிறது. கொண்டை பூவுக்கு அழுகிறது.
* முகத்துக்கு முகம் கண்ணாடி.
* அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.
* கண்ணுக்குப் புருவம் காத தூரமா?
* மூக்கு உள்ளவரை சளியும் உண்டு.
* கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசை.
* உதட்டிலே உறவும் உள்ளே பகையும்.
* கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லை.
* நா அசைய நாடு அசையும்.
* ஆலும் வேலும் பல்லுக்கு உறுதி; நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி.
* வெறும் காதுக்கு ஓலைக் காது மேல்.
* தோளுக்கு மிஞ்சினால் தோழன்.
* கையில் பிடிப்பது ஜபமாலை; கக்கத்தில் இடுக்குவது கன்னக்கோல்.
* தேனை எடுத்தவன் புறங்கையை நக்காமல் இருப்பானா?
* நகத்தால் கிள்ளாததைக் கோடரி கொண்டு வெட்ட வேண்டும்.
* தன் முதுகு தனக்குத் தெரியாது.
* இரவல்சேலையை நம்பி இடுப்புக்கந்தையை எறியாதே.
* வளர்த்த கடா மார்பிலே பாய்ந்தது போல.
* குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும்.
* வயிற்றுப் பிள்ளையை நம்பி கைப்பிள்ளையைப் பறிகொடுத்தது போல.
* குடல் காய்ந்தால் குதிரையும் வைக்கோல் தின்னும்.
* மடியில் கனமிருந்தால் வழியில் பயம்.
* காலுக்கு உதவாத செருப்பைக் கழற்றி எறி.
* குரைக்காத நாய் குதிகாலைக் கடிக்கும்.

— என். சேத்தாலட்சுமி.

மாறுதல்



கொள்ளுத் தாத்தா நாளிலே
கூ.கூ. ரயில் வந்ததாம்!

எங்கள் தாத்தா நாளிலே
ஏரோப் பிளேன் வந்ததாம்!


அப்பா பார்த்த நாளிலே
அரிய ஸ்பூட்னிக் வந்ததாம்!

அண்ணன் சின்ன வயதிலே
விண்வெளியில் பயணமாம்!

எங்கள் எதிரே மாறுதல்
எத்தனையோ, எத்தனை!

இன்னும் கொஞ்ச நாளிலே
இவையும் மாறிப் போகுமோ!

தம்பி சீனிவாசன்



டைனசார் துரத்துகிறது!

எம்.சோலையன்

கொள்ளிடக் கரையோரம் குணவாசல் என்று ஒரு சிற்றூர்! அன்று அச்சிற்றூரே விழாக் கோலம் பூண்டிருந்தது. காரணம் என்ன தெரியுமா? அவ்வூருக்குப் புதிதாகச் சாமியார் ஒருவர் வந்திருந்தார்!

சாமியார் என்றதும் சாதாரணமாக எண்ணிவிட வேண்டாம். அவர் பெயரோ 'குடமுருட்டிச் சாமியார்' என்பதாகும்! அதென்ன குடமுருட்டிச் சாமியார் என்று கேட்கிறீர்களா? நன்றாகக் கேளுங்கள்! பித்தளைக் குடம், வெண்கலக் குடம், எவர்சில்வர் குடம், வெள்ளிக் குடம் எதுவாக இருந்தாலும் சாமியார் வாங்கிக் கொள்வார். ஓர் இரவு முழுவதும் பூஜைகள் புரிவார். விடிகாலைப் பொழுதில் அவற்றைத் தங்கமாக உருட்டித் தந்து விடுவாராம்!

அது மட்டுமா? தேர்வில் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற வேண்டுமா? (புத்தகம் சிறிதும் படிக்க வேண்டாம்!) வியாபாரத்தில் அதிக லாபம் பெற வேண்டுமா? (முதலே தேவையில்லை!) நோய் நொடிகள் நீங்க வேண்டுமா? (மருத்துவரிடம் போக வேண்டாம்!) உங்கள் எதிரிகளைத் தவிடு பொடியாக்க வேண்டுமா? (கராத்தே, கிராத்தே எதுவும் 'ஆஹ்... ஊஹ்!' என்று கற்க வேண்டாம்!) எல்லாவற்றுக்கும் ஒரு தாயத்து இருக்கிறது. அதை அணிந்து கொண்டாலே போதும்! நினைத்தது எல்லாம் நிறைவேறும்!

சாமியார் தம்முடைய சிஷ்ய கோடிகளுடன் அரச மரத்தடியில் வந்து இறங்கியிருந்தார். அவரைச் சுற்றிலும் குடங்கள் சூழ்ந்திருந்தன. கிராமத்து மக்கள் சற்றுத் தள்ளி அச்சத்துடன் கைகூப்பி நின்றனர்.

தம்முடைய குடமிளகாய் மூக்கைச் சற்றே தேய்த்து விட்டுக் கொண்டார் சாமியார்.

"ஹூம்! இன்னும் யாராவது குடம் கொண்டு வராதவர் இருந்தால் கொண்டு வாருங்கள்! குடங்களை இங்கே வைத்துவிட்டுப் போங்கள்! விடிகாலையில் வந்து தங்கக்கட்டிகளைப் பெற்றுப் பலன் அடையுங்கள்!" என்று திருவாய் மலர்ந்து அருளினார் குடமுருட்டிச் சாமியார்.

அப்பொழுது —

தூரத்தில் யாரோ 'தபதப'வென்று ஓடிவரும் ஒலி கேட்டது. சாமியாரும் மற்றவர்களும், ஒலி வந்த திசையில் திரும்பிப் பார்த்தார்கள். ஆண்டியப்பன் என்னும் சிறுவன் தலை தெறிக்க ஓடிவந்து கொண்டிருந்தான். அவர்கள் அருகில் வந்தபோது அவ



னுக்கு மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்கியது.

"டைனசார் துரத்துகிறது! டைனசார் துரத்துகிறது!" என்று அலறிக் கொண்டே வந்தான் அவன்.

கிராமத்தார்கள் விழித்தார்கள். குடமுருட்டிச் சாமியார் சற்றே கண்களை அகல விரித்தார்.

"டைனசாரா? பல லட்சக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னே வாழ்ந்த விலங்காயிற்றே! இப்போது இங்கே எங்கே வந்தது? எப்படி வந்தது?" என்று வினாக்களை வீசினார் சாமியார்.

"அதெல்லாம்எனக்குத்தெரியாது! அதோ மேற்கே பாருங்கள்!" என்று மேற்குத் திசையில் சுட்டிக் காட்டினான் ஆண்டியப்பன்.

எல்லோருடைய தலைகளும் மேற்குப் பக்கம் திரும்பின!

ஆம்! டைனசாரேதான்! குட்டையான முன்னங்கால்கள் இரண்டும் மேலே உயர்ந்திருந்தன! மெல்ல நகர்ந்து வந்தது அந்த ராட்சதப் பல்லி!

"ஐயோ!" என்று அலறியவாறு தம் மூட்டை முடிச்சுக்களைக் கூட எடுக்காமல் கிழக்குத் திக்கைப் பார்த்துக். குடமுருட்டியார் எடுத்தார் ஓட்டம்! வழியில் கிடந்த குடங்கள் உருண்டு ஓடின! அவருடைய சிஷ்ய கோடிகளும் அவரைத் 'துரத்தி'க் கொண்டு ஓடினார்கள்!

கிராமத்து மக்கள் 'ஓடுவதா இல்லையா?' என்று விழித்துக் கொண்டிருந்தார்கள்.

அப்போது ஆண்டியப்பன், "நீங்களும் ஓடி விடாதீர்கள்! கொஞ்சம் பொறுங்கள்! அந்தப் பொம்மை அருகில் வரட்டும்!" என்றான்.

"பொம்மையா!" என்றுவிழித்தார்கள் கிராமத்து மக்கள்.

"ஆமாம்" என்று ஆண்டியப்பன் பதில் சொல்வதற்குள் டைனசார் அருகில் வந்துவிட்டது!

டைனசாரை — இல்லை — அந்தத் தோல் பொம்மையைச் சிறுவர் இருவர் பின்னிருந்து தள்ளி வந்தது அருகில் வந்ததும்தான் தெரிந்தது! அந்தப் பொம்மையின் கால்களுக்குக் கீழே சக்கரங்கள் இருப்பதும் அப்போதுதான் தெரிய வந்தது!

"அடடா! இதற்கா அஞ்சி இந்தச் சாமியார் ஓடினார்?" என்று கேட்டார் ஒருவர்.

"ஐயா, எதெதற்கோ சாமியார் தாயத்துக்கள் தந்தாரே! அந்தத் தாயத்து மகிமையால் இந்த டைனசாரையும் அவர் எதிர்த்து வீழ்த்த

வேண்டியதுதானே! ஏனிப்படி ஓடினார்?'' என்று கேட்டான் ஆண்டியப்பன்.

''அதுதானே! ஏன் ஓடினார்? அப்படியானால்... சரிதான்! இப்பொழுது தான் புரிகிறது! தாயத்தில் மகிமை ஏதும் இல்லை; நாம் ஏமாந்து விட்டோம்!'' என்றார் வயதானவர் ஒருவர்.

''ஆமாம்! அது மட்டுமல்ல! நான் மட்டும் அவர் குட்டை உடைக்காமல் இருந்திருந்தால் என்ன நடக்கும் தெரியுமா? உங்கள் குடங்களையும் நடு இரவில் வாரிச் சுருட்டிக் கொண்டு போய்ச் சேர்ந்திருப்பார்! விடிகாலையில் நீங்கள் வந்து இங்கே பார்க்கும் போது குடங்களும் இருக்காது! குடமுருட்டிச் சாமியாரும் இருக்க மாட்டார்!'' என்று விளக்கம் கொடுத்தான் ஆண்டியப்பன்.

''ஆகா! ஆண்டியப்பா! மிகவும் நன்றியப்பா!'' என்று கூறிய பெரியவர், ''அடடே! அதோ, பணப்பையையும் சாமியார் போட்டுவிட்டுப் போய் விட்டார்! எல்லாம் நாம் கொடுத்த பணந்தான்! பிரித்து எடுத்துக் கொள்ளலாம்!'' என்றார்.

இதற்கிடையில் அவ்வூரின் மறு கோடியில் கொள்ளிடக் கரையோரம் அல்லோலகல்லோலப்பட்டுக் கொண்டிருந்தது!

காரணம் என்ன?

'கிட்டலாச்சார்யா' படக் குழுவினர் வெளிப்புறப் படப்பிடிப்புக்காக அங்கு வந்து தங்கியிருந்தனர்.

அப்படத்தில் கதாநாயகன் கொள்ளிடக் கரையோரம் டைனசாருடன் சண்டையிட்டு அதைக் குத்திக் கொல்கிறான். அடுத்தாற்போல் ஆற்றில் பாய்ந்து நீந்தும்போது பத்து முதலைகளுடன் போராடி வெற்றி கொள்கிறான். மறுகரையில் உள்ள பாதாளச் சிறைச்சாலையின் காவலர்களை வீழ்த்துகிறான். அங்கிருக்கும் மலைப்பாம்புடன் உருண்டு புரண்டு சண்டையிட்டு இறுதியில் அதனையும் சாகடிக்கிறான். சிறைச்சாலையில் அடைபட்டிருக்கும் இளவரசியை விடுவித்து மணம் புரிந்து கொள்கிறான்...

கதை இப்படிப் போகிறது! இதற்காகத்தான் அந்தக் 'கிட்டலாச்சார்யா' குழுவினர் டைனசார் தோல் பொம்மையைக் கொண்டு வந்திருந்தனர். ஆனால் ஆண்டியப்பன் குழுவினர் அதனை ஒரு 'நல்ல செயலுக்காக'க் கடத்திக் கொண்டு போனது அவர்களுக்குத் தெரிந்திருக்க வழியில்லை! எனவேதான் டைனசாரைக் காணாமல் படக்குழுவினர் திகைத்துப் பெரும் பரபரப்பு அடைந்திருந்தனர்!



இளமையில் ஏற்றம் பெற்றவர்கள்

மார்க்கோ போலோவின் பிரயாண வரலாறு துவங்கியபோது அவர் வயது 17.

ஹுமாயூனுக்குப் பிறகு அவர் மகன் அக்பர் அரியணை ஏறியபோது, அவரின் வயது 13.

மாம்பழக் கவிராயர் தமிழ் நூல்களைத் தெளிவாகக் கற்றுச் சிறந்த கவிஞராக விளங்கியபோது அவருடைய வயது 12.

மாவீரன் சிவாஜி தன்னைப் போன்ற இளைஞர்களுக்குப் போர்ப்பயிற்சியளித்து சிறந்த படையை உருவாக்கி பிஜப்பூர் சுல்தானுக்குச் சொந்தமான கோட்டைகளைப் பிடிக்கும்போது அவருக்கு வயது 19.

— மெர்வின்.

உருவகக் கதைகள்

மூன்றாவது கட்சி!

மஜீயமான்



ஒரு மாபெரும் வரிக் குதிரைக் கூட்டத்தில், இரண்டு பிரிவுகள் இருந்தன.

"எல்லா விலங்குகளையும்விட சிங்கமே பலம் உடையது" என்பது ஒரு பிரிவின் வாதம்.

"இது சரியல்ல. புலிதான் பேராற்றல் கொண்டது" என்பது மற்றொரு பிரிவின் பிடிவாதம்.

இந்த இரு பிரிவுகளும் முதலில் பேச்சளவில் தங்கள் வாதத்தை வைத்துக் கொண்டிருந்தன. பிறகு, அது பகையாக மாறியது. அந்தப் பகைமையும் முற்றி, ஒன்றை ஒன்று தாக்கிக் கொள்ளும் அளவுக்கு நிலைமை மோசமாகிவிட்டது. இதனால், அடிக்கடி, அவை தங்களுக்குள் பலத்த சண்டை போட்டுக் கொண்டன. சிலவற்றின் கால்களும் ஒடிந்தன. ஒரு சில இறந்து போயின.

இவற்றை ஒரு வரிக் குதிரை கூர்ந்து கவனித்தது. தனிமையில் சிந்தனை செய்தது. இரு பிரிவுகளையும் இணைப்பதற்குத் திட்டமும் போட்டது. சண்டை போடும் இடத்திற்கெல்லாம் சென்று அமைதிக்காகப் பாடுபட்டது. அனைவருக்கும் அறிவுரை கூறியது.


முதலில், அதன் சொற்களை யாரும் ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால், அதன் விடாமுயற்சியால், சில வரிக் குதிரைக் குட்டிகள் அதன் கருத்தை ஏற்றுக் கொண்டன. விரைவில், அந்த வரிக் குதிரையின் தலைமையை ஏற்றுக் கொள்ளும் அளவுக்கு ஒரு தனிப் பிரிவே உண்டாகிவிட்டது!

இந்த மூன்றாம் பிரிவு, மற்ற இரு பிரிவுகளையும் இணைக்கும் முயற்சியில் நாள்தோறும் உழைத்தது. ஆனால், அவற்றின் தொண்டு வெற்றி பெற்றதாகக் கூற முடியவில்லை. அதற்குள், அந்த மூன்றாம் கட்சியின் தலைமைக் குதிரை ஒருநாள் திடீரென்று இறந்துவிட்டது. ஆகவே, மற்றொரு குதிரை தலைமை ஏற்றுக் கொண்டது.

அந்த குதிரை "எல்லா விலங்குகளையும்விட யானையே பலம் வாய்ந்தது" என்று இறந்து போன பழைய வரிக் குதிரை ஒருமுறை தன்னிடம் கூறியதாகத் தன் கட்சியினரிடம் ஒரு நாள் சொல்லி வைத்தது. அந்தக் கருத்து மெல்லப் பரவியது. அந்தக் கட்சியின் பெரும்பாலான உறுப்பினர்கள் அதை ஏற்றுக் கொண்டனர். அதை வெளியே பரப்பவும் தொடங்கின. எதிர்ப்பு இருந்தாலும், அந்தக் கருத்து எங்கும் பேசப்பட்டது.

சில காலம் சென்றதும், மிகுந்த வலிமையுடைய மிருகம் எது என்பதற்காக, அமைதிக்காகப் பாடுபட்ட மூன்றாம் கட்சியும் மற்ற கட்சிகளுடன் மோதியது. முன்பு இரு பிரிவுகள் இருந்த இடத்தில், மூன்று பிரிவுகள் தோன்றின. தினந்தோறும் இடைவிடாமல் போர் நடக்கலானது!

பழியும் பாவமும்



தன் எதிரில் இருந்தவன் மேல் வசைமாரி பொழிந்தது அந்த நாக்கு. அவன் உள்ளத்தில் ஆத்திரம் பொங்கு மளவுக்கு வேகமாகத் திட்டியது. அதற்குப் பிறகு, அது பாதுகாப்பான பல் கோட்டைக்குப் பின்னால் ஓய்வு எடுத்துக்கொண்டது.

சிலநொடிகள் கழிந்தன. உடம்பின் மார்பிலும் முதுகிலும் அடிகள் விழுந் தன. தொடர்ந்து வேகமாக விழுந்த அடிகளைக் கண்டு அதிர்ச்சி கொண்ட முதுகு நெளிந்து கொண்டே தாக்கும் கோலைக் கேட்டது.

"ஏ, கோலே, என்னை ஏன் அடிக் கிறாய்? நான் உன்னை என்ன செய் தேன்?"

"என் தலைவனை உன்னுடன் இருக் கும் நாக்கு ஏன் திட்டியது?"

"உன்னை நான் திட்டவில்லையே! நாக்குத்தானே திட்டியது. ஆனால், என்னை ஏன் நீ துன்புறுத்துகிறாய்?"

"அந்த நாக்கு உன்னோடு வாழ்கிற தல்லவா?"

"அதற்காக என்னை அடிக்க வேண் டுமா?"

"நாக்கை அடிக்க முடியவில்லை. அதனால்நீ அடி வாங்கிக்கொண்டாய்."

"பழி ஓரிடம்...... பாவம் ஓரிடமா?"

அதன் அறிவுரை கோலின் காதில் விழவேயில்லை. கோலின் அடிகளால் அது மேலும்துடித்தது. நாக்கோ, தனக் குள் சிரித்துக்கொண்டது.

அளவுக்கு மீறிய ஆசை

ஒரு காட்டின் ஓரத்தில் ஒரு குட்டிக் குரங்கு இருந்தது. அந்தச் சிறிய குரங் கிற்கோ பேராசை மிகுதியாக இருந் தது. அது ஒரு நாள் காட்டை அடுத் துள்ள, ஆற்றைத் தாண்டி அதன் கரையிலிருந்த ஒரு பழத் தோட்டத் திற்குச் சென்றது. ஆற்றிலே முழங் கால் அளவுதான் நீர் இருந்ததால் எளிதாக அதைக் கடந்தது.

அந்தப் பழத் தோட்டம், ஓர் ஒட்டைச் சிவிங்கிக்குச் சொந்த மானது. அந்தக் குரங்கு யாருக்கும் தெரியாமல், பழங்களைத் திருடித் தின்ன ஆரம்பித்தது. அது தன்னை மறந்து பழங்களைச்சுவைத்துக்கொண் டிருந்த வேளையில் ஒட்டைச் சிவிங்கி அங்கு வந்து அந்தக் குட்டிக் குரங்கைக் கையும் களவுமாகப் பிடித்துவிட்டது! வசமாக அகப்பட்டுக் கொண்ட குரங் குக் குட்டி கெஞ்சிக் கூத்தாடித் தன்னை விட்டுவிடும்படி மன்றாடியது. அதன் மேல் பரிதாபம் கொண்ட ஒட்டைச் சிவிங்கி அதை மன்னித்துவிட்டது. அது மட்டுமின்றி, கொஞ்சம் பழங் களைப் பறித்து, ஒரு பையில் போட்டு, அதனிடம் கொடுத்து, "இனி இப்படித் திருடித் தின்னாதே!" என்று அறிவுரை யும் கூறி அனுப்பியது.

குட்டிக் குரங்கு தனக்குக் கிடைத்த பழங்களை ஒரு பையில் திணித்துக் கொண்டு தூக்க முடியாமல் பையைத் தலையில் சுமந்து கொண்டு கொஞ்ச



தூரம் சென்றது. எதிரே வயதான ஒரு முயல் வந்தது. பசியால் வாடிய அது பையிலுள்ள பழங்களை வாசனையால் அறிந்து ஒன்றைத் தரும்படி வேண்டியது.


''பையைப் பிரித்துத் தர இப்போது எனக்குநேரமில்லை'' என்றுசொல்லிக் கொண்டு திரும்பிப் பார்க்காமல் நடந்தது, குரங்குக் குட்டி.


இரண்டடி நடந்ததும் அது தூக்கிக் கொண்டு போன பையின் மீது ஒரு கிளி வந்து உட்கார்ந்தது. ''குரங்கே, எனக்கு ஒரு பழத்தைக் கொடுத்து விட்டுப் போகிறாயா?'' என்று பணிவாகக் கேட்டது.

''பையை அவிழ்த்தால், பழங்கள் கீழே விழுந்து கெட்டுப் போகும். ஆகவே நான் தரமாட்டேன்'' என்று சொல்லிவிட்டு மேலும் நடந்தது குட்டிக் குரங்கு. பழப்பை தலைமேல் இருந்ததால், மற்றப் பறவைகளும் கொத்திக் கொண்டு போகும் என்று பயந்து அதைத் தன் முதுகோடு சேர்த்துக் கட்டிக் கொண்டு நடந்தது. அது ஆற்றில் இறங்கிக் குறுக்காக நடந்து கொண்டிருந்தபோது, திடீரென்று அந்த ஆற்றில் வெள்ளம் வந்தது. அந்தக் குரங்குக் குட்டி, பழப்பையின் பாரத்தால் முன்னேற முடியாமல் தத்தளித்தது.

'முயலுக்கும், கிளிக்கும் பழங்களைக் கொடுத்திருந்தால் கொஞ்சம் பளு குறைந்திருக்குமே! நமது பேராசையே நம்மை அழித்துவிடப் போகிறதே!' என்று எண்ணிக் கொண்டே அது தண்ணீரில் மூழ்கியது. எதற்கும் கவலைப்படாத ஆற்று வெள்ளம், அதை அடித்துக் கொண்டு ஓடியது.

ஓவியராகலாம்





சுவிட்சர்லாந்து நாட்டுக்கதை

மூன்று மொழிகள்

தமிழில்: எச். கிருஷ்ணமூர்த்தி



சுவிட்சர்லாந்தில் ஓர் ஊர். அங்கு வயது முதிர்ந்த கோமான் ஒருவர் இருந்தார். அவருக்கு ஒரே ஒரு பிள்ளை. அந்தப் பிள்ளைக்குப் படிப்பே வரவில்லை. அவன் அறிவை வளர்த்துக் கொள்ளாமல் இப்படி மந்தமாக இருக்கிறானே என்று எண்ணி அப்பா வருத்தப்பட்டார்.

''மகனே! நான் எவ்வளவோ முயன்றேன். ஆனால், உன் தலையில் எதையும் புகுத்த முடியவில்லை. ஆகவே, ஒரு நல்ல ஆசிரியரிடம் உன்னை அழைத்துப் போகிறேன். நீ அவரோடு தங்கியிரு. அவராவது உனக்குஏதாவதுசொல்லிக்கொடுக்க முடியுமா என்று பார்க்கிறேன்,'' என்று ஒருநாள் அவர் சொன்னார்.

அயலூரிலிருந்த ஆசிரியரிடம் அப்பா பிள்ளையை அனுப்பினார். ஓராண்டுக்காலம்அங்குதங்கிவிட்டுப் பிள்ளை திரும்பி வந்தான்.

''மகனே! என்ன கற்றுக் கொண்டாய்?'' என்று அப்பா கேட்டார்.

''அப்பா! நாய்கள் குரைக்கும் போது அவைகள் என்ன சொல்லுகின்றன என்று தெரிந்து கொண்டேன்,'' என்று பிள்ளை பதில் சொன்னான்.

''மகனே! இதைத்தானா நீ கற்றுக் கொண்டாய்? உன்னைக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்! ம்ம்ம்ம்... உனக்கு வேறு ஒரு நல்ல ஆசிரியராகப் பார்க்கிறேன்'' என்று வருத்தத்தோடு பேசினார்.

இரண்டாவது ஆசிரியரிடம் பிள்ளை அனுப்பப்பட்டான். ஒரு வருஷம் கழித்து அவன் வீடு திரும்பினான்.

''மகனே! என்ன கற்றுக் கொண்டாய்?'' என அப்பா மறுபடியும் கேட்டார்.

''அப்பா! பறவைகளின் மொழியைக் கற்றுக் கொண்டேன்!''

அப்பாவுக்குக் கோபம் வந்தது.

''சுத்த உதவாக்கரை! ஒரு வருஷத்தைப் பாழாக்கி விட்டு ஒன்றும் கற்றுக் கொள்ளாமல் வந்திருக்கிறாயே? உனக்கு வெட்கமாக இல்லை? சரி, சரி. உன்னை மூன்றாவது ஆசிரியரிடம் அனுப்புகிறேன். இந்தத் தரம் நீ ஒன்றும்படிக்காவிட்டால்உன்னைவீட்டில் சேர்க்க மாட்டேன். ஜாக்கிரதை!'' என்று மிரட்டினார்.

பிள்ளை மூன்றாவது ஆசிரியரிடம் போனான். ஓராண்டு உருண்டது. பிறகு, அப்பாவிடம் திரும்பி வந்தான்.

''மகனே! என்ன கற்றுக் கொண்டாய்?''

''அப்பா! தவளைகள் கத்தும்போது அவைகள் என்ன சொல்கின்றன என்று இந்த ஆண்டு கற்றுக் கொண்டேன்.''

அப்பா பொறுமை இழந்தார். அவருடைய கோபம் எல்லை மீறியது. அவர் என்ன செய்கிறோம் என்று யோசிக்கவே இல்லை. வேலைக்காரர்களை உடனே அழைத்தார்.

''இவன் என் பிள்ளை இல்லை. இனிமேல் இவன் என் கண் எதிரே வரக் கூடாது. காட்டுக்கு அழைத்துப் போய் இவனைக் கண்டதுண்டமாக வெட்டிப் போடுங்கள்!'' என்று கட்டளையிட்டார்.

வேலைக்காரர்கள் சிறுவனைக் காட்டுக்கு அழைத்துச் சென்றனர். ஆனால், அவர்களுக்கு அவனைக் கொல்லமனம் வரவில்லை. அவனுடைய நிலையைக் கண்டு மிகவும் இரக்கப்பட்டனர். சிறுவனைக் காட்டின் நடுவில் தனியாகவிட்டுவிட்டுத்திரும்பிநடந்தனர். வழியில் ஒரு மான் குறுக்கிட்டது. வேலைக்காரர்கள் அந்த மானைக் கொன்று அதனுடைய கண்களையும், நாக்கையும் வெட்டி எடுத்தனர். கோமானிடம் அவற்றைக் காட்டி அவருடைய கட்டளையை நிறைவேற்றி விட்டதாகக் கூறினர்.


சிறுவன் வெகுநேரம் காட்டில் திரிந்தான். ஒரு பழைய கோட்டையைக் கண்டான். ''இரவு வந்துவிட்டது. இங்கே தங்கலாமா?'' என்று கோட்டைத் தலைவரான பிரபுவிடம் கேட்டான்.

''கோட்டையின் மணிக்கூண்டில் தான் நீ தங்க வேண்டும். ஆனால், முதலிலேயே உன்னை எச்சரித்து விடுகிறேன். அது ஆபத்தான இடம். கொடிய வேட்டை நாய்கள் பல அங்கு உலவுகின்றன. அவை இரவும், பகலும் குரைத்து ஊளையிட்டுக்கொண்டே இருக்கும். அவ்வப்போது ஒரு மனிதனைப் பிடித்து அவைகளிடம் கொடுக்கிறோம். உடனே, அந்த நாய்கள் அவனை விழுங்கிவிடும். உனக்குச் சம்மதமானால் நீ அங்கே போய்த் தங்கலாம்,'' என்று கோட்டைத் தலைவர் கூறினார்.

அந்தக் கொடிய நாய்களைக் கண்டு ஊரே பயந்து நடுங்கியது. அவற்றை விரட்ட யாராலும் ஒன்றும் செய்ய முடியவில்லை. ஆனால், சிறுவன் சிறிதும் அஞ்சவில்லை. ''அந்தக் கொடிய நாய்களிடம் போவதற்கு நான் தயார். அவற்றால் எனக்கு ஒரு தீங்கும் வராது. ஆனால், அந்த நாய்களுக்குப் போடுவதற்குக் கொஞ்சம் சாப்பாடு மட்டும் தாருங்கள்,'' என்று வேண்டினான்.

அதன்படியே ஒரு பெரிய உணவுக் கூடையைக் கொடுத்து அந்தச் சிறுவனை நாய்கள் உலாவும் மணிக்கூண்டுக்குள் அனுப்பி வைத்தனர். அவன் உள்ளே போனான்.

நாய்கள் அவனை உற்றுப் பார்த்தன. வழக்கம் போலக் குரைக்கவில்லை; அவன் மீது பாயவில்லை. அதற்கு மாறாக, மிகவும் நேசமாக வாலைக் குழைத்துக் கொண்டு நெருங்கி வந்தன. அவன் அன்பாக அவற்றிற்கு உணவைக் கொடுத்தான். சாப்பிட்டன. நாய்களுக்கு நடுவி





லேயே அவன் இரவைக் கழித்தான்.

நாய்களால் சிறுவனுக்கு எந்தவித ஆபத்தும் வரவில்லை. மறுநாள் காலையில் புன்முறுவலோடு அவன் வெளியே வந்தான். எல்லோரும் அதிசயித்தனர்.

"தாங்கள் ஏன் இந்த மணிக் கூண்டை ஆக்கிரமித்துள்ளன என்றும், ஏன் மக்களுக்குத் தொந்தரவு கொடுக்கின்றன என்றும் நாய்கள் தங்கள் மொழியிலேயே என்னிடம் கூறின. மணிக் கூண்டுக்கு அடியில் ஒரு புதையல் இருக்கிறது. அதைப் பாதுகாப்பதற்காக ஒரு மந்திரவாதி அந்த நாய்களை ஏவியுள்ளான். புதையலை வெளியே எடுத்துவிட்டால், நாய்களுக்கும் விடுதலை கிடைக்கும். உங்களுக்கும் அவற்றால் கஷ்டம் இருக்காது. அந்தப்புதையலை எப்படி எடுக்க வேண்டும்என்பதையும்அவைகூறின. அதையும் உங்களுக்குச் சொல்லுவேன்," என்று சிறுவன் பிரபுவைப் பார்த்துச் சொன்னான்.

நாய்களால் இனி ஆபத்து இல்லை என்று அறிந்ததும் எல்லோரும் இன்புற்றனர். மணிக்கூண்டில்ஒருபாதாள அறை இருந்தது. பணியாட்களை அழைத்துக்கொண்டு பிரபு பாதாள அறைக்குப் போனார். தரையைத் தோண்டச் செய்தார். ஒரு பெட்டி நிறையத் தங்கக் காசுகள் கிடைத்தன. பிரபு புதையலை வெளியே எடுத்து வந்தார். உடனே, அந்தக் கோட்டையிலிருந்த நாய்கள் மாயமாக மறைந்து விட்டன. பிரபு சிறுவனின் தைரியத்தையும், சேவையையும் பாராட்டி அவனைத் தன் வளர்ப்பு மகனாக எடுத்துக் கொண்டார்.

சிறுவன் சில காலம் பிரபுவுடன் சந்தோஷமாகத் தங்கியிருந்தான். திடீரென்று ஒருநாள் அவனுக்கு ரோமாபுரியைப் பார்க்க வேண்டும் என்ற ஆசைவந்தது. வளர்ப்புத்தந்தையிடம் விடைபெற்றுப் புறப்பட்டான்.

வழியில் ஒரு சதுப்புநிலம். அங்கு தவளைகள் கத்திக் கொண்டிருந்தன. சிறுவன் அந்த சப்தத்தை உற்றுக் கேட்டான். தவளைகள் சொன்ன விஷயம் அவனுக்கு மிகுந்த மனவருத்தம் கொடுத்தது. தயக்கத்துடன் பயணத்தைத் தொடர்ந்தான். ரோம் நகரை அடைந்தான்.

ரோமில் மதகுருவான போப் ஆண்டவர் அப்பொழுதுதான் காலமாகி

இருந்தார். நகரமே துயரில் மூழ்கியிருந்தது. அவருக்கு அடுத்தபடியாக வேறு ஒருவரை நியமித்தாக வேண்டும். யாரை நியமிக்கலாம் என்று தேர்வுக் குழு உறுப்பினர்கள் கலந்து ஆலோசித்தனர். ஆனால், ஒரு முடிவுக்கு வர முடியவில்லை. இறைவன்தான் இந்த விஷயத்தில் உதவி செய்ய வேண்டும் என்று கூறினர். மேலும், இறைவன் ஏதாவது அற்புதம் விளைவித்துத் தன்னுடைய விருப்பத்தைக் குறிப்பாக ஒரு மனிதன் மூலம் வெளிப்படுத்தினால், அந்த மனிதனையே அடுத்த போப்பாக நியமிக்கலாம் என்று அவர்கள் தீர்மானித்தனர்.,

உறுப்பினர்கள் அவ்வாறு தீர்மானிப்பதற்கும், அந்தச் சிறுவன் ஆலயத்தின் உள்ளே நுழைவதற்கும் சரியாக இருந்தது. திடீரென்று இரண்டு வெள்ளைப் புறாக்கள் எங்கிருந்தோ பறந்து வந்து, சிறுவனின் தோள்கள் மீது அமர்ந்தன.

தேர்வுக் குழு உறுப்பினர்கள் புறாக்களை அதிசயத்தோடு நோக்கினர். தாங்கள் பேசி முடிப்பதற்குள் இறைவனே தங்களுடைய விருப்பத்தை வெளிப்படுத்துவதாக அவர்கள் உணர்ந்தனர். உடனே சிறுவனை அணுகி, ''போப்பாக ஆவதற்கு உனக்குச் சம்மதமா?'' என்று கேட்டனர்.

அந்தப் புனிதமான பதவியை ஏற்கத் தனக்கு அருகதை உண்டா என்று சிறுவன் ஐயப்பட்டான். அவன் உடனே பதில் சொல்லவில்லை; தயங்கினான். ''ஒப்புக் கொள்; ஒப்புக் கொள்,'' என்று புறாக்கள் சிறுவனின் காதில் கிசுகிசுத்தன. அவன் 'சரி' என்றான்.

தெய்வப் பணிக்கு உரியவனை ஆக்குவதற்கு முன்பு தூய்மைப்படுத்த வேண்டுமல்லவா? அதற்காகச் சிறுவனுக்கு அபிஷேகம் செய்வித்தனர். ''அந்தச் சிறுவன்தான் ரோமின் புனிதத் தந்தையாக வரப் போகிறான்,'' என்று சதுப்புநிலத் தவளைகள் சொன்னபோது, போப்புக்கு என்ன ஆபத்தோ என்று எண்ணி அவன் வருந்தினான். எதிர்காலத்தைப் பற்றி அவ்வளவு துல்லியமாக உரைக்கும் சக்தி தவளைகளுக்கு எப்படி வந்தது என்று அவன் வியந்தான்.

போப் ஆண்டவராக அமர்த்தப்பட்டபிறகு அவன் வழிபாட்டுப் பாடல்களைப் பாட வேண்டுமல்லவா? அவனுக்கு ஒரு வார்த்தை கூடத் தெரியவில்லை. ஆனால், அந்த இரண்டு புறாக்களும் அவனுடைய தோள்களை விட்டு நெடுநேரம் நீங்கவில்லை. அவனுக்கு வேண்டிய அறிவை எல்லாம் அவனுடைய காதுகளில் அவை ரகசியமாகப் புகட்டின. அவன் எதிர்காலத்தில் ஒரு புகழ்பெற்ற போப்பாக விளங்கி, மக்களுக்குப் பல நன்மைகளைச் செய்தான்.





பாரதியாருக்குச் சிறுவயதில் கணக்கு என்றாலே கசப்பாக இருக்குமாம். ஆனால் பால கங்காதர திலகருக்குக் கணக்கு என்றால் இனிப்புத்தானாம்.

ஒருநாள், திலகரின் அப்பா கங்காதர சாஸ்திரி ஒரு புத்தகத்தைப் படித்துக் கொண்டிருந்தாராம். அதைப் பார்த்த திலகர் அந்தப் புத்தகத்தைக் கேட்டாராம். ''நான் ஒரு கணக்குத் தருகிறேன். அதற்குச் சரியான விடை கூறினால், இந்தப் புத்தகத்தைத் தருவேன்'' என்று கூறி, கடினமான ஒரு கணக்கைக் கொடுத்தாராம் அவருடைய அப்பா.

கணக்குக்குச் சரியான விடையைக் கண்டு பிடித்து, அந்தப் புத்தகத்தைப் பெற்றுவிட்டாராம் திலகர்!



பஸ்ஸில் ஒரு குறள்

எம். கருப்பையா

'இன்று தேர்வு முடிவுகள் வெளியாகிவிடும்' — ரவியின் மனத்தில் இந்த எண்ணம் காலையில் இருந்தே அலைமோதிக்கொண்டிருந்தது. நினைக்கும் போதெல்லாம் ரவியின் மனம் முழுவதும் பயம் நிரம்பிக் கொண்டிருந்தது. 'தேர்வில் வெற்றி பெற்று விட்டால்?' —சில நேரங்களில் இப்படி சந்தோஷக் கற்பனையும் வரும். ஆனால், அது அதிக நேரம் நீடிக்காது. தோல்வி பற்றிய பயம் அவனைத் துவண்டு போகச் செய்தது. விளையாட்டிலும், வேடிக்கைப் பேச்சிலும் மனத்தைத் திருப்பப் பார்த்தான். ஆனாலும், திரும்பத்திரும்ப மனம் தேர்வு முடிவில் தான் வந்து நின்றது.

இந்த ஒரு வார காலமாகவே இந்தச் செய்தி அவனை எரிச்சல் படுத்திக் கொண்டிருந்தது. இன்று காலையிலிருந்து மனத்தில் பயம் மாறிமாறி வந்து துன்புறுத்தியது. ரவியின் பாட்டி கூடக் கேட்டுவிட்டாள் — "ஏண்டா ரவி! ஏன் இப்படி ஒரு மாதிரியா இருக்கே? ஊர் ஞாபகம் வந்துடுச்சா?"

இந்த ஆண்டு பள்ளி இறுதித் தேர்வு எழுதியவர்களில் ரவியும் ஒருவன். அவனது அப்பா மதுரையில் ஓர் அலுவலகத்தில் பணிபுரிகிறார். ரவியின் படிப்பெல்லாம் மதுரையில்தான். கோடை விடுமுறையில் பாட்டியின் கிராமத்திற்கு வழக்கம் போல் வந்துவிட்டான். பழைய நண்பர்களைச் சந்தித்த மகிழ்ச்சியிலும், புதுப் புதுச் செய்திகளைப் பேசி மகிழ்ந்ததிலும், விருப்பமான விளையாட்டுக்களினுலும், பாட்டியின் பாசத்தாலும் விடுமுறை கழிந்ததே தெரியவில்லை.

ரவி படிப்பில் சுமார்தான். கடின உழைப்பு இருந்து விட்டால், தேர்வைப் பற்றிய கவலை எதற்கு? அரசுத் தேர்வு எழுதப் போகும்போது அதிக கவனம் செலுத்த வேண்டாமா? தேவையில்லாத நண்பர்கள் சகவாசம், சினிமா, டிராமா, அரட்டை என்று வீண் பொழுது போக்கியது இன்று மனக்குழப்பத்தில் முடிந்திருக்கிறது.

இன்று மாலைத் தினசரிகளில் தேர்வு முடிவுகள் வெளியாக இருந்தன. வழக்கம்போல் நண்பர்களுடன் ஆற்றிலிருந்து வீட்டிற்குத் திரும்பிக் கொண்டிருந்தான். மனம் முழுவதும் இனந் தெரியாத பயம். ரவி ஒன்றும் பேசா

மல் வருவது நண்பர்களுக்கு வியப்பா யிருந்தது.

ரவி வீட்டிற்குள் நுழையும்போதே, யாரோ உள்ளே அமர்ந்து பாட்டியிடம் பேசிக் கொண்டிருப்பது தெரிந்தது. அவர் வேறு யாருமல்ல — ரவியின் அப்பாவின் நெருங்கிய நண்பர்; பக்கத்து ஊர்ப் பள்ளியின் தலைமையாசிரியர்.

''என்னடா ரவி! எந்தப் பாடம் சரியாக எழுதலே நீ? பெயிலாயிட்டியே!'' என்று வரவேற்றார். ரவிக்கு, 'குப்'பென்று உடம்பு முழுவதும் பயம். கை, கால்கள் நடுங்கத் தொடங்கின. பேசுவதற்கு வாயைத் திறக்க முடியவில்லை. ''சரி, கவலைப்படாதே. நாளைக்கு வேறு தினசரிகளில் சரி பார்க்கலாம். சில பேப்பர்களில் தவறாகவும் அச்சிட்டு விடுகிறார்கள்'' என்று ஆறுதல் கூறிவிட்டுச் சென்றார்.


பயத்தினாலும், சோகத்தினாலும் பேச முடியாமல் அப்படியே இடிந்து போய் உட்கார்ந்து விட்டான் ரவி. பாட்டி ரொம்ப நேரமாய்ச் சமாதானம் பண்ணினாள். மனசேயில்லாமல் அரைகுறையாகச் சாப்பிட்டு விட்டுப் படுத்தான். நெடுநேரம் தூக்கம் வரவில்லை. பின்னர், அவனையறியாமல் தூங்கிவிட்டான். தூக்கத்திலும் கெட்ட கனவுகள் — அப்பா கண்டபடி திட்டுகிறார். கன்னத்திலும் முதுகிலும் அடிக்கிறார். பெல்ட்டால் வீசுகிறார்; நண்பர்கள் எல்லோரும் கேலியாகச் சிரிக்கிறார்கள்.

இப்போது ரவி மதுரைக்குப் பஸ்ஸில் திரும்பிக் கொண்டிருக்கிறான். பாட்டியிடம் மட்டும் சொல்லிக் கொண்டு, நண்பர்களைக் கூடப் பார்க்காமல் காலையிலேயே கிளம்பி விட்டான். காலையில் எழுந்ததிலிருந்தே அவன் மனத்தில் ஒரு முடிவு ஏற்பட்டுவிட்டது. 'இகழ்ச்சிகளையும், தண்டனைகளையும் ஏற்பதற்குப் பதிலாக, தற்கொலை செய்து கொள்ளலாம்' என்ற எண்ணமே அது. சிந்திக்கச் சிந்திக்க அது சரியாகவே பட்டது. ''தோல்வியால் நமக்கு மட்டுமா அவமானம்? நம்ம அப்பாவிற்கும் அல்லவா அவமானம்? அவரது நண்பர்கள் எல்லோரும் அவரைத் துக்கம் விசாரிப்பார்களே! இதற்கெல்லாம் சரியான முடிவு எது? தற்கொலையேதான்.'' அவனது எண்ணங்கள் இதே பாதையில் சென்று கொண்டிருந்தன.

''எப்படித் தற்கொலை செய்து கொள்வது?'' மனத்தில் ஒரு கேள்வி. விரிவான திட்டம் ஒன்றும் மனத்தில் ஓட ஆரம்பித்தது. 'பாட்டிக்கு ஒரு கடைசிக் கடிதம் எழுத வேண்டும். ம்... ம்... அப்புறம்...

''அப்பா! அப்பா!'' என்ற குரல் அவனது நினைவோட்டத்திற்கு முற்றுப் புள்ளி வைத்தது. சிந்தனை உலகத்திலிருந்து நினைவுலகத்திற்கு வந்தான். பஸ்ஸில் தனக்கு அருகில் அமர்ந்திருப்பவர்களைப் பார்த்தான். ஓர் அப்பாவும், மகனும் அவனுக்கு அருகில் அமர்ந்திருந்தார்கள். அந்தச் சிறுவன்தான் தன் தந்தையை அழைத்தான். ரவியின் கவனம் அவர்கள் பக்கம் சென்றது.

''அப்பா! பஸ்ஸிலே டிரைவ



யானைக் குட்டிகளுக்கு அனாதை இல்லம்!

இலங்கையில் கொழும்பு நகரத்திற்கு அருகே யானைக் குட்டிகளுக்காக ஓர் அனாதை இல்லம் ஏற்படுத்தியிருக்கிறார்கள். தாயை இழந்த யானைக் குட்டிகளையும், வழி தவறி வந்த யானைக் குட்டிகளையும் அங்கே வைத்துப் பாதுகாக்கிறார்கள். அவைகளை வளர்க்கும் பொறுப்பை ஒரு தாய் யானை கவனித்துக் கொள்ளுகிறது.

ருக்குப் பக்கத்தில் என்னவோ எழுதிப் போட்டிருக்காங்களே, என்னப்பா அது?'' அந்தச் சிறுவன்தான் தன் அப்பாவிடம் கேட்டுக் கொண்டிருந்தான். ''அது திருக்குறள்டா கண்ணு.'' என்றார் அப்பா.

''ஓ! திருக்குறளா? எனக்குத் தெரியும்பா. அது உலகப் பொதுமறை. எல்லாக் காரியத்திற்கும் பொருந்தக் கூடிய பாடல்கள்னு எங்க ஆசிரியர் சொல்லியிருக்காருப்பா!'' என்றான் சிறுவன்.

''சரியாச் சொல்லிட்டடா கண்ணு. வாழ்க்கையிலே ஒவ்வொருவரும் பின் பற்ற வேண்டிய அனுபவக் கொள்கைகளை வள்ளுவர் அழகாய்ச் சொல்லியிருக்கிறார்,'' என்று அப்பா விளக்கமளித்தார்.

''ஏப்பா! இந்தக் குறளுக்கு என்னப்பா பொருள்?


'ஊழையும் உப்பக்கம் காண்பர்—
உலைவின்றித்
தாழாதுஉஞற்றுபவர்.'

சிறுவன் தொடர்ந்தான்.

''கவனமாய்க் கேளுடா கண்ணு. ஊழுன்னு விதி. விதிதான் எல்லாவற்றையும் அழிக்கக் கூடியது. ஆனால், விடா முயற்சியுடையவர்கள் விதியையும் அழிக்கும் ஆற்றல் உள்ளவர்கள். எத்தனை முறை தோல்வி வந்தாலும் விடாமுயற்சி, வெற்றியில் கொண்டு போய்ச் சேர்த்துவிடும்.''

''ராபர்ட் புரூஸ்னு ஒரு அரசன். பல முறை எதிரிகளிடம் தோற்றுப் போய்ச் சோர்வடைந்து விட்டான். காட்டில் ஒரு குகையில் தனியாக உட்கார்ந்து சிந்தித்துக் கொண்டிருந்தான். அப்பொழுது ஒரு சிலந்தி, தன் வலையிலிருந்து பலமுறை நழுவி, நழுவி விடாமுயற்சிபண்ணி வலையைஅடைந்ததைப் பார்த்தான். அப்போது அவன் மனத்தில் ஏற்பட்ட ஊக்கம் அவனை மீண்டும் அரசனுக்கியது.

''தோல்விகளைக் கண்டு துவண்டு போயிடக்கூடாது. அதையேவெற்றிப் படிகளாய் மாற்றிக்கணும்னு அறிஞர்கள் கூறியிருக்கிறார்கள்,'' என்று அந்தச் சிறுவனின் தந்தை விளக்கமளித்தார்.



அடிக்க மாட்டேன்!

மிருகக்காட்சி சாலையின் காவல்காரர்: ''தம்பி, சிங்கக் கூண்டின் அருகிலே போகாதே!''

பையன்: ''நான் அதை அடிச்சிட மாட்டேன், பயப்படாதே!''

— வாணு.

கேட்கக் கேட்க ரவியின் மனத்தில் ஏதோ மாற்றம் ஏற்பட்டுக் கொண்டேயிருந்தது. பயமும், சோகமும் தன்னம்பிக்கைக்கும், தைரியத்திற்கும் வழிவிட்டன. தற்கொலை எண்ணம் கோழைத்தனமானது, முட்டாள்தனமானது என்ற சிந்தனை பிறந்தது.

''நான் சொன்ன விளக்கம் புரியுதாடா கண்ணு?'' என்றார் அப்பா.

''ஓ! நன்றாகவே புரிஞ்சுதப்பா,'' என்றான் கண்ணன்.

'இந்தத் தோல்வி என்னைச் சோர்வடையச் செய்ய முடியாது. மேலும் உறுதியுடன் உழைப்பேன். அப்பா மட்டுமல்ல; மற்றவர்களும் பெருமைப்படுகிற அளவில் வாழ்வில் உயர்ந்து காட்டுவேன்' — ரவியின் சிந்தனை வேறு புதிய பாதையில் வீரமாக நடை போட்டது.

''ஏனப்பா, இப்படி பஸ்ஸிலேதிருக்குறளை எழுதி வைக்கிறதாலே என்னப்பா பயன்?'' என்றான் கண்ணன். தன் அப்பாவிடம் கேட்டுக் கொண்டிருந்தான்.

ரவி, தன் மனத்திற்குள்ளாகவே, அதற்குப் பதில் சொல்லிக் கொண்டான்: ''அது தவறான எண்ணங்களை மாற்றுது தம்பி. தன்னம்பிக்கையை மறந்தவர்களுக்குக் கடமையை நினைவூட்டுது தம்பி.''

பிருந்தாவனக் கதையரங்கம்

கார்த்திக் ஜெயித்தான்!

இரா. குமார் (12201)



கார்த்திக்கின் தந்தை அவ்வூரிலே பெரிய ஜவுளி வியாபாரி. வியாபாரம் நன்றாகவே நடைபெற்றுக் கொண்டிருந்தது.

ஒருநாள் கார்த்திக்கின் சித்தப்பா கிராமத்திலிருந்து வந்திருந்தார். கார்த்திக்குக்கு சித்தப்பாவை மிகவும் பிடிக்கும். மகிழ்ச்சியோடு வரவேற்றான்.

மதியச் சாப்பாட்டிற்குமேல் அவனுடைய சித்தப்பா தன் அண்ணனிடம், தன் மகளுக்குத் திருமணம் நிச்சயம் செய்திருப்பதாகக் கூறி, ''எனக்கு ஐயாயிரம் ரூபாய் தேவைப்படுகிறது. நெல் அறுவடை ஆனதும் அதை விற்றுப் பணத்தைத் திருப்பித் தந்து விடுகிறேன்'' என்று சொன்னார். ஆனால், சிவசங்கரோ, ''என் கையில் பணமில்லை'' என்று நிர்தாட்சண்யமாகக் கூறி விட்டார்.

தன் சித்தப்பா வருத்தத்தோடு ஊர் திரும்பும் பொழுது கார்த்திக்குக்குத் தன் தந்தையின் மீது கோபம் கோபமாகவந்தது. ஏனெனில், கற்றைகற்றையாக ரூபாய் நோட்டுக்களை அவர் பெட்டியில் வைத்திருப்பதை அவன் அறிவான். எனவே, தன் தந்தையைப் பார்த்து, ''அப்பா! சித்தப்பாவைப் பார்த்தால் பாவமாயிருக்கிறது. என்ன இருந்தாலும், அவர் உங்கள் தம்பி இல்லையா? நீங்கள் கொஞ்சம் உதவி செய்யக் கூடாதா?'' என்று வினவினான்.

''அவனுக்கு நீ என்ன சிபாரிசா? மகளுக்குக் கல்யாணம் செய்து வைக்கணும்னு அவனுக்குத் தெரியுமில்லையா? அதனால், முன்னாலேயே பணம் சேர்த்து வச்சிருக்கணும். என்கிட்டே பணம் இருந்தாலும் கொடுக்க இஷ்டமில்லை. போடா... போ...'' என்று கூறிவிட்டார்.

இதைக் கேட்டதும் கார்த்திக்குக்கு மிகவும் வருத்தமாக இருந்தது. தன் தந்தைக்கு அவர் செய்கை தவறு என்பதை உணர்த்த விரும்பினான்.

கிட்டத்தட்ட ஒரு வாரம் சென்றுவிட்டது. அன்று கார்த்திக் ஆங்கிலப் பாடல் எழுதிக் கொண்டிருந்தான். அவன் தந்தை செய்தித்தாள் படித்துக் கொண்டிருந்தார்.

அப்பொழுது அவன் தம்பி முரளி அவனிடம் வந்து,

''அண்ணா! என்னோட கணக்கு நோட்டுத் தீர்ந்து போச்சு. நீதான் ஒரு நோட்டு புதுசா வெச்சிருக்கியே. அதைக் கொடு. நாளைக்குக் கணக்குப் போட்டுக் கொண்டு போகாவிட்டால் வாத்தியார் அடிப்பார். இன்னிக்கு பந்த்னாலே கடை எல்லாம் மூடியிருக்கு. நாளைக்கு உனக்கு வேற நோட்டு வாங்கித்தரேன். இன்னிக்கு கணக்குச் செய்ய உன் நோட்டைக் கொடு, ப்ளீஸ்,'' என்று கெஞ்சினான்.

தன் தந்தை தங்களைக் கவனிக்கிறார் என்பதை உணர்ந்த கார்த்திக் குரலில் கடுமையை வரவழைத்துக் கொண்டு கூறினான்.

''இன்னிக்கு 'பந்த்'ன்னு உனக்குத் தெரியுமில்லையா? அதனால் முன்னாடியே நோட்டை வாங்கி வச்சிருக்கணும். எங்கிட்டே நோட்டு இருந்தாலும் கொடுக்க இஷ்டமில்லை. போடா... போ...''

முரளியின் முகம் தொங்கிவிட்டது.

''டேய் கார்த்திக், நம்பகிட்டே வைத்துக் கொண்டு இல்லைன்னு சொன்னா நமக்குத்தான் பாவம். என்ன இருந்தாலும் முரளி உன் தம்பி இல்லையா? அவனுக்கு உதவி செய்யக்கூடாதா?'' என்று அவன் தந்தை வினவினார்.

''அப்பா! தயவு செய்து என்னை மன்னிச்சிடுங்க. நீங்க உங்க தம்பியிடம் எப்படி நடந்துக்கிட்டீங்களோ அப்படித்தான் நான் என் தம்பியிடம் நடந்து கொள்கிறேன்.''

கார்த்திக்கின் பதிலைக் கேட்ட சிவசங்கருக்குத் தூக்கி வாரிப் போட்டது. 'பெற்றோர்கள் செய்வதைத்தான் பிள்ளைகளும் பின்பற்றுவார்கள்' என்று எதிலோ படித்தது ஞாபகத்திற்கு வந்தது. தன் தம்பியிடம் தான் நடந்து கொண்டது தவறு என அவர் உள்ளுணர்வு உணர்த்தியது. எனவே ''கார்த்திக்! நீ ஜெயிச்சுட்டே! நாளைக்கே உன் சித்தப்பாவுக்குப் பணத்தை அனுப்பறேன்'' என்றார்.

இதைக் கேட்ட கார்த்திக்கின் உள்ளம் குளிர்ந்தது. தன் தம்பியைப் பார்த்து, ''டேய், முரளி! இந்த நோட்டை நீயே வைத்துக் கொள்'' என்றான் மகிழ்ச்சியோடு.



ஆபத்துக்கு உதவி

ஜி. ஸ்ரீப்ரியா (9188).

''அய்யோ, அம்மா என்னைக் காப்பாற்றுவாரில்லையா?'' என்ற பலத்த குரல் பஸ் நிலையத்துக்குள்ளிருந்து கேட்டது.

பஸ் நிலையத்தில் ஒரே கும்மிருட்டு. அப்போது இரவு சுமார் பத்து மணியிருக்கும். அந்த ஊரை டவுன் என்றும் கூறமுடியாது; கிராமம் என்று ஒதுக்கித் தள்ளவும் முடியாது. இரவில் அதிகப் போக்குவரத்தும் கிடையாது. டீக்கடை ராமையாவும் தனது கடையை அடைத்து விட்டுப் போய்விட்டார். பஸ் நிலையத்திலிருந்த ஒரே ட்யூப் லைட்டும் அணைந்து அணைந்து எரிந்து கொண்டிருந்தது.

குரல் தொடர்ந்து கேட்டது. அதைத் தொடர்ந்து தெரு நாய்களின் ஓலம்.

பஸ் நிலையத்திற்கு எதிரே இருந்த ஆலமரத்தடியில் தூக்கம் வராமல் படுத்திருந்த பிச்சைக்காரி மாரியம்மாளுக்கும், அவளது மகன் கந்தனுக்கும் பஸ் நிலையத்திலிருந்து கிளம்பிய அபயக்குரல் கேட்கவே,

''கந்தா, வா போவோம். என்னன்னு பார்ப்போம்'' என்றாள் மாரியம்மாள்.

கந்தனும் தன் தாயுடன் பஸ் நிலையத்திற்குள் விரைந்தான். அங்கே,

ரௌடி ரங்கனும், சாவடிப்பேட்டைச் சுப்பனும் ஐம்பது வயது மதிக்கத்தக்க ஒரு பெரியவரைக் கத்தி முனையில் மிரட்டிக் கொண்டிருந்தனர்.

''ஒழுங்கா கையில் உள்ள பெட்டியைத் திறக்கிறயா, இல்லே...?'' — இது ரௌடி ரங்கனின் குரல்.

''வாத்யாரே! இப்படிக் கேட்டா வழிக்கு வரமாட்டாரு. ரெண்டு போடு போட்டாத்தான் சரியா வரும்.'' — இது பேட்டை சுப்பன்.

''அய்யா! அவரை விட்டுடுங்கோய்யா! உங்கள் காலிலே விழுந்து கெஞ்சிக் கேட்டுக்கறேன்யா...'' என்று பெரியவரின் பக்கத்தில் இருந்த பெண்மணி கதறிக் கொண்டிருந்தாள்.

கந்தனும், மாரியம்மாளும் மறைவாக நின்று பார்த்தனர்; செய்வதறியாது திகைத்து நின்றனர். மாரியம்மாளுக்கு,வரும் பங்குனிக்கு எழுபது வயதாகப் போகிறது. இரண்டு நாளாய்ப் பெய்த மழையில் உடம்பு வேறு சரியில்லை. கந்தனுக்கு அன்றுதான் நல்ல சாப்பாடே கிடைத்திருந்தது. ராத்திரி நாயர் கடையில் சாப்பிட்ட ரொட்டிதான் அவன் வாழ்நாளில் கண்ட சொர்க்கமாக இருந்தது. ஆனாலும், அவன் உடம்பில் வலிமை இல்லை.

— சரமாரியாக அந்த மனிதருக்குக் குத்துகள் விழுந்து கொண்டிருந்தன— மாரியம்மாளுக்கு உடம்பு பதறியது.

''கந்தா,எப்படிடா அந்தப் பெரியவரைக் காப்பாத்தறது? யோசிக்க நேரமில்லையே!'' — என்று அரற்றினாள்.

ஒரே ஒரு நிமிடம்தான் யோசித்தாள். கிழவியின் முகம் சட்டெனப் பிரகாசமடைந்தது.

''டேய் கந்தா, காலையிலே தெருவிலே கண்டெடுத்த போலீஸ் விசில் இருந்ததே, அதை ஊதுடா'' என்றாள் கிழவி.

''ஊங்க்! ஊங்க்!'' என்று விசில் சத்தம் உரக்கக் கேட்க ஊதினான் கந்தன்.

ரௌடி ரங்கனும், பேட்டை சுப்பனும் ஒரு நிமிஷம் நின்றனர். ''போலீஸ் வருது டோய்!'' என்று சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு விசில் சத்தம் கேட்ட திசைக்கு எதிர்த்திசையில் ஓடி மறைந்தனர்.

கந்தனும், மாரியம்மாளும் பெரியவரிடம் ஓடினர். பெரியவர் பக்கத்தில் இருந்த பெண்மணி கண்களில் நீர் தளும்ப,கிழவியின் காலடியில் விழுந்தாள்.

''ஓ, தம்பி, நீயா போலீஸ் விசிலடித்தது?'' — பெரியவர் மூச்சிரைக்கக் கேட்டார்.


கந்தன் பெரியவரை உற்று நோக்கினான். அவன் கண்கள் ஆச்சரியத்தால் விரிந்தன.

''அம்மா, மாலையிலே நாம பத்து பைசா பிச்சை கேட்டதற்கு நம் மேல் பரிதாபப்பட்டு இரண்டு ரூபா கொடுத்தாங்களே, அந்தத் தர்மவான் ஐயாதாம்மா இவரு. நமக்கு உதவி செய்வதற்கு நன்றி காட்டக் கடவுள் தாம்மா நமக்குச் சந்தர்ப்பம் அளிச்சிருக்காரு.''

''வாங்கய்யா! நாங்க இருக்கற ஆலமரத்தடி ரொம்பப் பாதுகாப்பான இடம். நாங்க பிச்சைக்காரங்கதான். ஆனா, திருடறதில்லே; ஏமாத்தறதில்லே, விடியும் வரை எங்களோடு தங்கியிருங்கய்யா.''

அந்த தர்மவானும், தர்ம பத்னியும் கந்தனையும் அவன் தாயையும் நன்றியோடு பார்த்தனர். நன்றிக் கடனைக் கழித்துவிட்ட பூரிப்பு கந்தனின் கண்களில் ஒளிவிட்டுப் பிரகாசித்தது.

வேடிக்கையான டெலிபோன் டைரக்டரி



பெர்முடாத் தீவிலுள்ள டெலிபோன் டைரக்டரியில் உள்ள பெயர்களெல்லாம் வேடிக்கையான பெயர்களாக இருக்கும். அங்குள்ள பலருக்கு ஒரே மாதிரிப் பெயர் இருக்கும். ஆகையால், அவர்களுக்குள்ள பட்டப் பெயர்களுடன், அவர்களுடைய பெயர்கள் டைரக்டரியில் அச்சிடப்பட்டிருக்கும். உதாரணம்: நெட்டை ஸ்மித், குள்ள ஸ்மித், அதிர்ஷ்ட ஸ்மித், ஆறு விரல் ஸ்மித், மருந்துக் கடை ஸ்மித், மாவு மில் ஸ்மித்.

Printed and Published by V. Murali on behalf of Messrs Bharathan Publications Private Limited, at the Bharathan Press, Race Course Road, Guindy, Madras—600032. (Phone: 431543). Editor: K. Rajendran.



டாக்டர் மு. வரதராசனார்

பிறந்த நாள்: 27-4-1912 மறைந்த நாள்: 10-10-1974

EGISTERED No. TN MS (S) 281
Registered as a Newspaper in Srilanka

